
மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாடு
9·12·2002, 10·12·2002 மற்றும் 11·12·2002
முதலமைச்சர்
SECRETARY



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
மார்கழி – தை
ஜனவரி 2003
மலர் : 34 இதழ் : 13 & 14
விலை ரூ.10

இந்த இதழில்

❖ அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா ........ 2
❖ தரிசு நில மேம்பாட்டு ஆணையம் ........ 8
❖ மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் மன்றம் ........ 13
❖ இந்தியாவிலே முதன்முதலாக பெண் கைதிகளுக்கு கல்வித்திட்டம் ........ 14
❖ சுற்றுலாத்துறை – அமைச்சர் ஆய்வு ........ 16
❖ கட்டடத் தொழிலாளர்களுக்கு நிதியுதவி ........ 17
❖ ஏழைகளின் கண்ணீரை துடைப்பதே எனது இலட்சியம் ........ 18
❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு ........ 23
❖ தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டம் ........ 25
❖ புல்லாங்குழல்களே பாடுங்கள் (கவிதை) ........ 37
❖ தாய்க்கு நன்றி கூறும் தலைசிறந்த திருநாள் ........ 38
❖ அன்னை தெரசா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ........ 40
❖ பெரம்பலூர் மாவட்டத்தில் ஊனமுற்றோர் சிறப்பு மறுவாழ்வுத்திட்டங்கள் ........ 47
❖ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு ........ 49
❖ பூமி பாரத்தைச் சுமக்கும் காளை மாடு (கதை) ........ 66
❖ நிலாப்பள்ளி ........ 71
❖ காவல்துறை அதிகாரிகள் மாநாடு ........ 74
❖ மழையால் பாதிக்கப்பட்ட சென்னை சாலைகள் சீர் செய்யப்பட்டன ........ 79

*முதல் பக்க அட்டையில்...*

சென்னைக்கு 14.12.02 அன்று வருகை புரிந்த மேதகு குடியரசுத்தலைவர் அவர்களை சென்னை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆகியோர் வரவேற்கிறார்கள்.

*இரண்டாம் பக்க அட்டையில்...*

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் – காவல்துறை அதிகாரிகள் மாநாடு.

*கடைசிப் பக்க அட்டையில்...*

அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா



# அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா

**அண்ணா பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா, 14.12.2002 அன்று சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் வெள்ளி விழாவினையும் தமிழகப் பொறியியல் கல்லூரிகளுடன் அறிவு சார் இணைத்தலைத் தொடங்கி வைத்தார். மேதகு ஆளுநர் அவர்கள் அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரியின் நிறுவனர், டாக்டர் அழகப்பச் செட்டியாரின் திருவுருவச்சிலையைத் திறந்துவைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொலை மருத்துவ (டெலிமெடிசின்) வசதியைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு...**

“மறக்க முடியாத இந்த நிகழ்ச்சியில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதிலும் இன்று இங்கு கூடியிருக்கும் தலைசிறந்த பெருமக்கள் மத்தியில் உரையாற்றுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவின் மிகச் சிறந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான அண்ணா பல்கலைக்கழகம் ஒரு புகழ் மிக்க பாரம்பரியத்தையும் நீண்ட வரலாற்றையும் பெற்று விளங்குகிறது.

கடந்த காலத்தில் 1794ஆம் ஆண்டில் ஒரு சிறிய நில அளவை பள்ளிக்கூடமாக துவக்கப்பட்ட இப்பள்ளியுடன் கிண்டி பொறியியல் கல்லூரியும், குரோம்பேட்டையில் இருந்த சென்னை தொழில்நுட்ப நிலையமும், கிண்டி–அழகப்பா பொறியியல் கல்லூரி மற்றும் திட்டமிடல் மற்றும் கட்டடவியல் கல்லூரி ஆகிய நான்கு நிறுவனங்கள் இத்துடன் இணைக்கப்பட்டு 1978ஆம் ஆண்டில் இது ஒரு ஒருங்கிணைந்த தனிப் பல்கலைக்கழகமாக உருமாறியுள்ளது.

இந்த உருமாற்றம் நமது உன்னத தலைவரான புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையிலான அப்போதைய அரசால் கொண்டுவரப்பட்டது.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உயரிய தொலைநோக்கு கொண்ட இலட்சியப் பார்வையால்தான் இன்று தமிழ்நாட்டு தொழில்நுட்ப



கல்வியின் விதியை நிர்ணயிப்பதில், அண்ணா பல்கலைக்கழகம் ஓர் உயரிய பரந்த அளவில் பங்காற்றி வருகிறது.

**சர்வதேசப் பல்கலைக்கழகமாக உருவாக்கவேண்டும்**

அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆளுகை தமிழகத்திலுள்ள அனைத்து 240 பொறியியல் கல்லூரிகளிலும் இன்று கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவாகிய அண்ணா பல்கலைக்கழகத்தை சர்வதேசப் புகழ் பெற்ற தொழில்நுட்பக் கல்வி மையமாக உருவாக்க வேண்டும் என்பதும், நாட்டில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலேயே, மிகச் சிறந்த ஒன்றாக விளங்க வேண்டுமென்பதும் இன்று நிறைவேறியுள்ளது.

அகில உலகிலும், மிகப் பெரியதான ஒரு தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக விளங்கும் ஒரு பொறாமைப்படத்தக்க தனிச் சிறப்பை அண்ணா பல்கலைக்கழகம் பெற்றுள்ள நிலையில் அதனுடைய வெள்ளி விழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தொழில்நுட்பக் கல்வியைப் பயிலும், நமது மாணவர்களுக்கு, அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில், அவர்களுக்கு இன்றைய நவீன தொழில்நுட்பத்தை வழங்க வேண்டும் என்பதுதான் எனது அரசின் முக்கிய நோக்கமாகும்.

எப்போதும் விரிவடைந்து வளர்ந்து கொண்டே இருக்கும் உலகின் உயர் தொழில்நுட்ப தொழிலகங்களின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் அவர்களை மேன்மைப்படுத்த இது உதவி செய்யும். சமூகத்துக்கும் பயனளிக்கும்.



தேவை அடிப்படையிலான பணிகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமூக உறுப்பினர்களுக்கு தேவைப்படுபவைகளை, மிகக் குறைந்த செலவில் அவர்களால் வழங்க முடியும்.


இன்றைய தமிழகத்தின் தொழில்நுட்பக் கல்வி அமைப்பின் முக்கிய கவனம் இதையே அடிப்படையாக கொண்டிருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டே அண்ணா பல்கலைக்கழகம் தனது ஆளுகைக்குள் கொண்டுவந்துள்ள – இணைக்கப்பட்ட ஒவ்வொரு 240 பொறியியல் கல்லூரிகளையும், உயர்ந்த உலக தரத்துக்கு எடுத்து செல்லும் ஒரு கடமையை தானாகவே மேற்கொண்டுள்ளது.

விரைவாகச் செயல்படுவதுதான் அண்ணா பல்கலைக்கழகத்தின் தாரக மந்திரமாக இருக்கிறது. போட்டிகள் நிறைந்த இத்துறையில், புகழ் ஏணியின் உச்சிக்கு செல்வதற்கு புதுமையும், கண்டுபிடிப்பும் அதன் அடையாளச் சின்னங்களாக இருக்க வேண்டும்.

இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக, கல்வியாளர்கள், அறிவியலறிஞர்கள், தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் ஆகிய பல்வேறுபட்ட சிந்தனையாளர், ஒன்றிணைந்த உயரிய பங்களிப்பும் உறுதியான ஒற்றுமையும் தேவைப்படுகிறது.

நாட்டை உருவாக்கும் பணியில் தொழில்நுட்ப அறிஞர்களின் சுறுசுறுப்பான பங்காற்றலுக்கு நான் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறேன். சமூக பயன்பாட்டிற்கான பணிக்கு அவர்கள் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்க முடியும்.

இந்த போற்றுதலுக்குரிய நோக்கில்தான், அண்ணா பல்கலைக்கழகத்தை ஓர் இணைப்பு வடிவமைப்பிலான, பல்கலைக்கழகமாக உருமாற்றி இருக்கிறோம். 240 பொறியியல் கல்லூரிகள் இதனுடைய அங்கமாகக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் விரைவாக வளரும் உலகத் தேவைகளின் சவால்களை எதிர்கொள்ள முடியும்.




அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்த பற்பல பணிகளின் வல்லுநர்கள் அடங்கிய குழு தமிழக அரசுடன் இணைந்து பணியாற்றி தமிழ்நாட்டை தொழில்நுட்ப கல்வி உலகில் சிறப்புடையதாகவும் புகழ்மிக்கதாகவும் கொண்டுவர வேண்டும்.

### குடியரசுத் தலைவர் முன்னிலையில்

குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு புகழ் பெற்ற தொழில்நுட்பப் பேரறிஞர் மற்றும் ஓர் உயரிய இலட்சியப் பார்வை கொண்டவர். அத்தகைய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் முன்னிலையில், அண்ணா பல்கலைக் கழகத்தில் தொலை மருத்துவத் திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகமும் சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையும் இணைந்து தொழில்நுட்பக் கருவிகள் வாயிலாக தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமப்புற மக்களுக்கும், மருத்துவ உள்கட்டமைப்பும், மருத்துவ ஆலோசனையும் வழங்க ஓர் ஆரம்ப கட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது திருப்தி அளிப்பதாக உள்ளது –

தொலை மருத்துவம் என்பது உடல் நலம் பேணுவதை அனைவருக்கும் வழங்குவது என்பதை குறிக்கிறது. இதில் மருத்துவர்களின், தொலைக் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதன் வழியாக, எங்கோ தொலைவில் இருக்கிற நோயாளிகளை உடல் பரிசோதனை செய்கிறார்கள்.

இது ஒரு அகன்ற வழியிலான அனைத்து வகை சேவைகளையும் அதாவது ரேடியாலஜி மனநல சேவைகள் மற்றும் பல வகையிலான மருத்துவ கிளைகளான நரம்பு நோயியல், இதய மருத்துவயியல், மகப்பேறு மருத்துவம், தோல் நோயியல் போன்றவற்றை நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஆகிய இரண்டிலும் இருக்கிற வசதியற்ற தனி நபர்களுக்கும், வசதிகளற்ற சமூக இன மக்களுக்கும் வசதிகளை கொண்டு சேர்க்கிறது.

தொலை மருத்துவம், கிராமப்புறத்தில் உள்ள உடல்நல மருத்துவர்களை அங்கேயே இருத்தி வைத்தலை, மிகப் பெருமளவில் ஊக்குவிக்கிறது. தேவையான பயிற்சியை மேலும் பெற முடியும். மேலும் பிற துணை மருத்துவர்களின் கூட்டு முயற்சியையும் இத்தகைய தொலை மருத்துவ ஊற்றின் மூலம் பெற முடியும்.

### இரண்டாவது கருத்துக்கு வசதி

தொலை மருத்துவமானது, இரண்டாவது கருத்துடன் ஒரு முடிவுக்கு வர நல்வாய்ப்பினை

ஏற்படுத்திக் கொடுக்கிறது என்பதை நிரூபித்துள்ளது. மேலும் தொலை மருத்துவம் பல நேரங்களில், கிராமப்புற மருத்துவர்களை பல முக்கிய நெருக்கடியான நேரத்தில் முடிவு எடுக்கவும் – உயிர் காக்கும் மருத்துவ முடிவுகளை உரிய நேரத்தில் எடுக்கவும் இது உதவி செய்கிறது என்பதையும் நான் தெரிந்து கொண்டேன்.

தொலை மருத்துவ அமைப்பு இந்த வகையில் மாநில, பூகோள எல்லைகளைக் கடந்து மருத்துவ அறிவையும், உடல்நல மருத்துவ தகவலையும், பரிமாறிக் கொள்ளும் ஒரு தேசிய மையத்தையும் வழங்குகிறது. இதன் மூலம் தொலை மருத்துவம் எல்லா வகை மருத்துவப் பிரிவுடனும் உடல் நலன் பேணும் மைய மருத்துவமனையும், தொலைதூர பிரதேசங்களையும் இணைத்துச் செயல்படுகிறது.

## கிராமத்தவர்களுக்கு அரியவாய்ப்பு

மருத்துவ உலகில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், நாடு முழுவதிலுமுள்ள இலட்சக்கணக்கானமக்களுக்குதேவையானசரியான உடல்நல மருத்துவ சேவைகள் யாவும் பூகோள் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தனித்துவிடப் பட்ட மக்களுக்கு இவ்வசதிகள் மறுக்கப்படுகின்றன என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். போதுமான சரியான பரிசோதனையும், கவனமும் கிடைக்காததால் துன்பப்படும் அனைத்து தேவையான மனிதர் களுக்கும், தொலை மருத்துவம் ஓர் உன்னதமான சக்தி மிகுந்த மருத்துவ வசதியை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

## பெண்களுக்கு வரப்பிரசாதம்

அதற்கும் மேலாக தொலை மருத்துவம் கிராமப்புற பெண்களுக்கு போதுமான தகவலை பெருமளவில் வழங்கி உதவி செய்ய முடியும். குறிப்பாக –

- ★ பிள்ளைப்பேறுக்கு முந்தைய உடல் நலன் பேணல்.
- ★ சிக்கல் மிகுந்த மகப்பேறுகளை அடையாளம் காணுதல்.
- ★ பிறந்த குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பு திட்டங்கள் –

நோயாளிகளுக்கு தொலை மருத்துவம் வாயிலாக மருத்துவ நிபுணர்களின் சேவையை வழங்கி உதவி செய்யும் இக்கருத்துரு இந்தியாவில் இன்னும் அதனுடைய குழந்தைப் பருவ நிலையில்தான் உள்ளது.

## மாணவர்களை சமுதாய நோக்கோடு பணியாற்றச் செய்யும்

அண்ணா பல்கலைக்கழகம் அப்பல்லோ மருத்துவமனையுடன் ஒருங்கிணைந்து தொலை மருத்துவத்தை தமிழ்நாட்டில் நடைமுறையில் நிறைவேற்றிவைக்கும் ஒரு சரியான பாதையில் செல்லும் ஒரு முன்னோக்கிய அடியை எடுத்து வைத்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகமும் அப்பல்லோ மருத்துவமனையும் இணைந்து ஏற்படுத்தியுள்ள தொலைமருத்துவத் திட்டம் இந்தப் பொறியியல் கல்லூரி மாணவர்களை உற்சாகப்படுத்தும். இந்த ஊக்கமானது தொலைதூரப் பகுதிகளுக்கு எய்ட்ஸ் பற்றிய விழிப்பு மற்றும் சமூகநலன் இணைந்த பணிகளில் சமுதாய நோக்கோடு பணியாற்றும் கொள்கைகளில் மாணவர்களை ஈடுபட வைக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

## அடித்தள மக்களுக்கு மருத்துவ உதவி வழங்க வேண்டும்

மின் அணு தொழிலகங்கள் மற்றும் தொலை தகவல் தொழிலகங்கள் ஆகியவைகளின் ஈடுபாட்டையும் அவர்கள் காட்டும் ஆர்வத்தையும் உடல்நலம் பேணும் துறையினர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்களது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் இருக்கும் ஏழை மற்றும் அடித்தட்டு மக்களுக்கு மருத்துவ உதவி வழங்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களை ஒளி பரப்புவதற்கும் – உடல்நலன் பேணும் சேவைகளை வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள துணை மருத்துவ அலுவலர்களுக்கு அவர்களது மருத்துவ அறிவை மேலும் கூர்மையாக்குவதற்கும் – இந்தப் படக்காட்சி கருத்து பரிமாற்ற அமைப்பாக பயன்படும்.

தொலைமருத்துவம் சிறப்பு நிலை சேவை தேவைப்படும்போது உடனடியாக வழங்குவதன் மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அது பயன் அளிப்பதாக உள்ளது.

## சேவையின் தரத்தை மேம்படுத்த முடியும்

அரசு மருத்துவமனைகளும் மற்றும் முதன்மை மருத்துவ மையங்களும் மின்னணு கருவிகள் மூலம்

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உயரிய தொலைநோக்கு கொண்ட இலட்சியப் பார்வையால்தான் இன்று தமிழ்நாட்டு தொழில்நுட்ப கல்வியின் விதியை நிர்ணயிப்பதில், அண்ணா பல்கலைக்கழகம் ஓர் உயரிய பரந்த அளவில் பங்காற்றி வருகிறது.**

பெறப்படும் வழிகாட்டுதல் மற்றும் நிபுணத்துவ அறிவின் துணையுடன் தங்களது சேவையின் தரத்தை பெருமளவில் மேன்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

அண்ணா பல்கலைக்கழகம் தனது மாணவர்களுக்கு மிகவும் நேர்த்தியான கல்வி கற்பதற்கான வசதிகளை வழங்குகிறது. அதனுடன் கூடவே மேலும் அது தமிழ்நாடு முழுவதும் வெவ்வேறு இடங்களில் உள்ள பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள மாணவர்களுக்கு உடல்நலன் பேணும் பயன்களை வழங்குவதிலும் அதிக ஆர்வம் கொண்டுள்ளது.

தற்போது அது 25 தொலை மருத்துவ ஆலோசனை மையங்களை நிறுவியுள்ளது. இந்த உதவியை மேலும் அனைத்துப் பொறியியற் கல்லூரிகளுக்கும் வழங்க நம்பிக்கையும் கொண்டுள்ளது.

### 240 பொறியியல் கல்லூரிகளிலும் மருத்துவ இணைப்பு

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தங்களது உண்மையான ஒத்துழைப்பை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்க வேண்டும் என அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் தொலை மருத்துவ வசதிகளை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவரவர்களது வளாகங்களில் நிறுவிட முடியும்.

அண்ணா பல்கலைக்கழகம் அப்பல்லோ மருத்துவமனையின் ஆதரவுடன் அனைத்து 240 பொறியியற் கல்லூரிகளிலும் தொலை மருத்துவ இணைப்பை உருவாக்கி கொடுக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த தொலை மருத்துவ இணைப்பு முழுமையாக முழு வீச்சில் செயல்பட துவங்கும்போது ஒவ்வொரு 240 பொறியியல் கல்லூரிகளும் தனது மருத்துவ இணைப்பு உதவியுடன் செயல்படும் சமுதாய நல மையங்களை தனது எல்லைக்குள் பெறும்.

இந்த அனைத்து பொறியியற் கல்லூரிகளும், தமிழகம் முழுவதிலும் பரவலாக இருப்பதால் அருகாமையில் உள்ள கிராம மக்களை இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ள – தங்கள் கல்லூரிக்குள் அனுமதிப்பார்களேயானால், தமிழ்நாட்டின் 95 சதவீத மக்களை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக்கு உடனுக்குடன் உட்படுத்திய ஒரு தனித்த பெருமையை தமிழகம் சாதிக்கும். இதன் மூலம் அனைத்து தமிழகத்தின் ஒட்டுமொத்த சமூகநலனை உயரிய நிலைக்கு இட்டுச் செல்லும் பாதையை அமைத்துக் கொடுக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டில் உள்ள 35 சிறப்பு நிலை பொறியியற் கல்லூரிகளை நான் பாராட்டுகிறேன். ஏனெனில் இவர்கள் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் தங்களது நிபுணத்துவ அறிவை கடந்த 6 மாதங்களில் ஏறக்குறைய 6 ஆயிரம் காவல்துறை அலுவலர்களுக்கு கணினி பயிற்சி கொடுத்து உதவுவதில் தமிழக அரசுக்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் கொடுத்துள்ளார்கள்.

இதுபோன்ற ஒத்துழைப்பை அனைத்து பிற கல்லூரிகளிடம் இருந்தும் நான் எதிர்பார்க்கின்றேன்.

### ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கும் எடுத்துச் செல்ல ஆதரவளிக்க வேண்டும்

எல்லா மட்டங்களிலும், மாநிலத்தின் தொடர்ந்த வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், மற்றும் அனைத்து ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கும் இதனை எடுத்துச் செல்லும் அரசின் முயற்சிக்கு அவர்கள் ஆதரவு அளிக்க வேண்டும்.

தமிழகத்திலுள்ள அனைத்து உடல்நலம் பேணும் மருத்துவ நிபுணர்கள் முன்பு, இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். தொலை மருத்துவ அமைப்பின் உயர்நோக்கங்களுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும், பொருளாதார அடிப்படையைப் பொருட்படுத்தாது அனைத்துப் பிரிவினருக்கும், சமீபத்திய கண்டுபிடிப்பு வசதிகளை, அவர்களிடம் எடுத்துச் சென்று வழங்கும் லட்சியத்தை எட்டும் வகையில் பணிபுரிந்திட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

மிகப் பெருமளவில் பயன்படும் இத்தகைய திட்டத்தை மேற்கொண்டமைக்காக, துணைவேந்தர் டாக்டர் பாலகுருசாமியையும், அவருடன் இணைந்து உற்சாகத்துடன் செயல்படும் குழுவினரையும், நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசு, இப்படிப்பட்ட சேவையை அடித்தளமாகக் கொண்ட அனைத்து செயல்பாடுகளுக்கும் தேவையான உதவிகளையும் வழங்கும் என்கிற உறுதியை இந்த சமயத்தில் உங்கட்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கடின உழைப்பு லட்சியத்தை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்

கடின உழைப்புதான் வெற்றிக்கான ஆதார கருவாக விளங்குகிறது என ஒரு புகழ்பெற்ற மூதுரை தெரிவிக்கின்றது. கடின உழைப்பு ஓர் உன்னதமான லட்சியத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அந்த லட்சியத்தை நீங்கள்தான் அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனெனில், அது உங்களை உற்சாகப்படுத்துகிறது. அது உங்களுக்கு ஒரு சவாலாக இருந்து உதவுகிறது. அதைத் தொடர்ந்து முன்னேறும் போது அது உங்கட்கு அளப்பரிய மனநிறைவை அளிக்கிறது.

### தளர்வடையாத முயற்சியும் உறுதியும் வேண்டும்

நீங்கள் தேர்ந்தெடுக்கும் லட்சிய நெறி, மனித இனத்துக்கு சேவை செய்வதாக இருக்கட்டும். இந்த லட்சியத்தை தளர்வடையாத முயற்சியுடனும், உறுதியுடனும் ஒருமுனைப்படுத்தப்பட்ட மனதுடனும், நீங்கள் பின்பற்றி செல்ல வேண்டும்.

திருக்குறளில், திருவள்ளுவர் இதுகுறித்து கூறியுள்ள கருத்தை இங்கே உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

பொருத்தமான நேரத்தில், பொருத்தமான ஒரு செய்கையை செய்வதன் மூலம், நீ இந்த உலகத்தையே வெல்ல முடியும் என்பதே அவரது உயரிய கருத்தாகும்.

### தமிழகம் அறிவு பெற்ற மாநிலமாக உருவாகியுள்ளது

தொழில்நுட்ப கல்வித்துறையில் அண்ணா பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு, தமிழகத்தை நாட்டிலேயே மிகவும் சக்தி வாய்ந்த தொழில்நுட்ப அறிவு பெற்ற மாநிலமாக உருவாக்கியுள்ளது.

தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்ட சிறப்புப் பாடப்பிரிவில் அதிசயிக்கத்தக்க திறமை பெற்றுள்ள மாணவர்களுக்கும், உதவிய ஆராய்ச்சி அறிஞர்களுக்கும் துறை அறிஞர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களது அதிசயிக்கத்தக்க முயற்சியின் விளைவாக, அண்ணா பல்கலைக் கழகம், மேன்மேலும் உயரிய நிலைக்கு வளர்ந்து கொண்டே போகும் என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் பங்கு கொள்ள என்னை அழைத்தமைக்கு துணைவேந்தருக்கும் இந்தப் பல்கலைக்கழக வேந்தராக விளங்கும் மேதகு ஆளுநர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### உயரிய எதிர்காலம் அமைய வாழ்த்து

இந்திய குடியரசுத்தலைவராக பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்ட பின் தமிழகத்திற்கு, தனது சொந்த மாநிலத்திற்கு முதல் தடவையாக வருகை தரும்போது, அண்ணா பல்கலைக் கழகத்தின் இந்த விழாவில் பங்கு கொள்வது எனக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுத்தமைக்காக நான் மிகவும் மனமகிழ்வு பெறுகிறேன்.

உங்களது அனைத்து முயற்சிகளிலும், வெற்றியும், வளமும் சிறந்த ஒரு உயரிய எதிர்காலம் அமைய எனது வாழ்த்தை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்".

★ ★ ★

# மாநில தரிசுநில மேம்பாட்டு ஆணையத்தின் முதல் ஆலோசனைக் கூட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை**

"தமிழ் நாட்டின் மாநில தரிசுநிலங்கள் மற்றும் நீர்நிலை மேம்பாட்டு ஆணையத்தின் முதல் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துவதிலும், தலைமை உரை ஆற்றுவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள தரிசு நிலங்களின் மேம்பாட்டிற்கான தங்களது அரிய கருத்துகளை வழங்குவதற்காக வருகை தந்திருக்கிற அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்பதிலும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.



**ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வேளாண்மையே காரணம்**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை, தொடர்ந்து பெரும் பங்கு வகிக்கும் ஒரு பிரிவாக இருந்து வருகிறது. மக்கள் தொகையில் 3–இல் 2 பங்கினருக்கு இது வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது. மாநில நிகர பொருள் உற்பத்தியில் இதன் அளவு 5–இல் ஒரு பங்காக உள்ளது.

வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழும் இலட்சக் கணக்கான மக்களின், ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கும், அவர்களுக்கு உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்கும் வேளாண்மை மேம்பாட்டு வளர்ச்சி முக்கிய இடத்தை வகிக்கிறது.

மேலும் இது கிராமப்புற மக்களின் வருமானத்தை உயர்த்துவதற்கும், வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும், தொழில் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி முன்னேற்றத்திற்கும் வேளாண்மை முக்கியக் காரணமாக இருக்கிறது.

மாநில அளவில், விதை – உரம் – நீர் தொழில் நுட்ப முன்னேற்ற வளர்ச்சி – உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கு பங்கு ஆற்றியுள்ள போதிலும் விவசாயவளர்ச்சியின் போக்கு, பலதரப்பட்ட விவசாயிகளின் மத்தியிலும் பயிர் விளைவிப்பதிலும், பிரதேச அளவிலும் ஒரே வாரியான – மாதிரியாக இல்லை.

### புன்செய் நிலப்பகுதியில் குறைவான வளர்ச்சி

புன்செய் நிலப் பகுதிகளிலும் மற்றும் மானாவாரிப் பயிர் விவசாயத்திலும் அடிமட்டம் வரை புதிய தொழில் நுட்பங்கள் சென்றடையவில்லை. இது காரணமாக பலவகைப் பயிர்களும் குறைவாகவே பயிரிடப்பட்டன. மற்றும் இதனால் புன்செய் நிலப் பகுதிகள் குறைவாகவே வளர்ச்சி பெற்று பின் தங்கிய ஒரு பகுதியாகவே தொடர்ந்து இருந்து வருகிறது.



மாநிலத்தின் மொத்த பயிர் விளையும் நிலங்களில் புன்செய் நில விவசாயம் 52 சதவீத இடத்தைப் பெற்றுள்ளது. இதனால் தானிய உற்பத்தியைப் பொறுத்தவரையில் திறமையற்றதாகவே தொடர்ந்து இருந்து வருகிறது.

மழையை நம்பியுள்ள பகுதிகள் நீர் ஆதாரத்திற்கு மழையை மட்டுமே சார்ந்து இருப்பதால், இங்கு தானிய உற்பத்தி பெருமளவில் நிரந்தரமற்றதாக இருக்கிறது.

புன்செய் நிலத்திற்கான விவசாயத்தில் நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டுவர வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது, இதன் மூலம் வறட்சியைத் தாங்கும் புதிய கலப்பின தானிய வகைகளை மேம்படுத்துவதற்கும், அதனை விவசாயிகளிடையே பிரபலமாக்குவதற்கும் அழுத்தமும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டும்.

மழைநீர் சேகரிப்பு என்பதும், அதிக செலவில்லாத எல்லோரும் மேற்கொள்ளக்கூடிய ஒரு எளிய வழியில் நிலம் மற்றும் நீர் ஆதாரங்களைப் பயன்படுத்திக் கொள்வதில்தான் நீர்நிலை மேம்பாட்டுக்கான முக்கிய சார்ந்திருத்தல் அணுகுமுறை அடங்கியுள்ளது.

### தனி மனித வருவாயை உயர்த்துவதே எதிர்கால லட்சியம்

மாநில தனி மனித வருவாயை 2010 – க்குள் இரண்டு மடங்காக உயர்த்துவதுதான் தமிழக மக்களுக்காக நான் மேற்கொண்டுள்ள எதிர்கால லட்சியமாகும்.

இதற்காக மழைபெய்யும் பிரதேசங்களில் ஒன்றிணைந்த முழுமையான வளர்ச்சி, மழைநீர் அறுவடை, நுண்உயிர் பொருள் அதிகரிப்பு போன்ற ஏற்பாடுகள் ஆகியவற்றை அக்கறையுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட ஏற்பாடுகளில் மழை மறைவு பிரதேச மக்களை, வேளாண் சார்ந்த காடுகள், தோட்டப் பயிர்கள் மற்றும் வேளாண் வணிகம், தரிசுநில மேம்பாடு ஆகிய பணிகளில் அவர்கள் இணைத்து செயல்படவேண்டும்.

2001–2002 வரவு செலவுக் கூட்டத் தொடரின்போது அரசு, ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்தது. அத்திட்டத்தின்படி, அறிவார்ந்த பலநோக்குத் தரிசுநில மேம்பாடு திட்டத்தின் மூலம் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை சீர்மைபடுத்தி–பயிரிடத்தக்கதாக விளை நிலங்களாகப்பட வேண்டும் எனவும்– அதுவும் 5 ஆண்டு காலத்தில் இது நிறைவேற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

### நில நீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்

தரிசுநில மேம்பாடு மூலம் சிறிய மற்றும் எளிய விவசாயிகளின் சிறு அளவிலான விவசாயத்தை முன்னேற்றுதல், தரிசு நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புற விவசாயம் சாராத பணிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில்தான் இப்புதிய திட்டம் கவனம் செலுத்துகிறது.

நிலம், நீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவத்தை கொடுப்பதுடன் கூடிய, நுண்நீர்நிலை மேம்பாட்டு அணுகுமுறையையும் இத்திட்டம் இணைத்து செயல்படும்.

இந்த நோக்கத்திற்காக சங்க சட்டத்தின் கீழ், ஒரு சங்கமாக தமிழ்நாடு நீர்நிலை மேம்பாட்டு முகமை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகமை பொருத்தமான செயல் திட்டங்களை உருவாக்கியும், செயல்படுத்தியும் அதன் சரியான முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் செய்யும்.

இத்திட்டத்திற்கு வெளியிடத்திலிருந்து நிதி கிடைக்க ஏற்பாடு செய்வது பற்றி ஒரு கருத்து குறித்த ஆய்வு தற்போது பரிசீலனையில் உள்ளது.

ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் இரண்டு அம்சங்களை உள்ளடக்கியது.

பங்கு கொள்ளும் நீர்நிலை ஆதார மேம்பாடு ஓர் அம்சமாகும்.

மற்றொன்று, கூட்டுறவு, சிறு குழுமங்கள், பெரிய குழுமங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்திய அரசு தரிசுநிலங்களின் மேம்பாடு.

## உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வு

முதல் அம்சம். அதாவது பங்கு கொள்ளும் நீர்நிலை ஆதார மேம்பாட்டுத் திட்டம் என்பது, பங்கு கொள்ள வைக்கும் அணுகுமுறையைச் சார்ந்தது.

இதன்படி, பொருத்தமான நீர்நிலை பத்திகளைத் தேர்ந்தெடுத்தல், உள்ளூர் மக்களுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தல், நீர்நிலைக் குழுக்களை அமைத்தல், பயனாளிகளின் குழுக்கள் அமைத்தல், பயனாளிகளின் பங்கைப் பெற்று அதன்மூலம் அனைத்து நீர்நிலை மேம்பாட்டை வளர்க்கும் திட்டத்தைத் தயாரித்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியதாக இருக்கும்.

மேலும் மண் மற்றும் ஈரப்பதம் பாதுகாப்பு தொடர்பான பொருத்தமான செயல்பாடுகளை எடுத்துக் கொள்வதும் இதில் அடங்கும்.

இந்தச் செயல்பாட்டிற்கான முழு நிதிச் செலவினையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ளும்.

## 55 ஆயிரம் ஹெக்டேர் நிலத்திற்கு ரூ. 25 கோடி செலவு

இது தற்போது 10 மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது. முதல்கட்டமாக 2002– 2003இல் 55 ஆயிரம் ஹெக்டேர் நிலம் எடுத்துக் கொள்ளப்படும்.

வனம் மற்றும் தோட்டப் பயிர் துறையானது, மேலே குறிப்பிட்ட அரசு நிதிஉதவி பெறும் திட்டத்தின் கீழ், 67 இலட்சம் மரக்கன்றுகள், பழச்செடிக் கன்றுகள், நாற்றுகள் ஆகியவற்றை வளர்த்திருக்கிறது.

இத்திட்டத்தில் 29 வட்டத்தில் 360 கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக ரூ.25 கோடி செலவிடப்படும்.

7.12.2002 வரையில் தற்போது 16,968 ஹெக்டேர் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், தற்போது நிலவும் சாதகமான பருவநிலையை பயன்படுத்தி மரக்கன்று நடும் பணியை 31.12.2002க்கு முன்பாக நிறைவேற்ற அவர்களை கேட்டுக் கொண்டுள்ளேன்.

## தரிசு நில மேம்பாட்டில் தனியார் துறையும் பங்கு பெறும்

இரண்டாவது அம்சத்தில், தரிசு நில மேம்பாட்டில் தனியார் துறையையும் ஈடுபடுத்தி பங்கு கொள்ள வைப்பதாகும்.

பரஸ்பரம் இருவருக்கும் பயன்படும் வகையிலான கூட்டுமுயற்சியில் தனியார் துறையை இணைத்து செயல் படுத்துவது என்கிற ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தை அமல் படுத்தும் கொள்கையை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

அரசு நிலங்களை, சலுகைத் தொகையில் குத்தகைக்கு விட வழிகாட்டு நெறிகள் ஏற்படுத்தப்பட்டு வழங்கப் பட்டுள்ளன.

உயர்மதிப்பு மிகுந்த தோட்டக்கலைப் பயிர்களை வளர்த்தல், விவசாய – காடுகள், நுண்உயிர் பொருள் தொழிற்சாலைகள், விவசாயம் சார்ந்த தொழில் அலகுகளுடன் இணைப்பு ஆகியவைகளை ஏற்படுத்தி

வளர்க்கத் தேவையான மிகப்பெரிய அளவிலான தரிசுநிலங்களை அடையாளம் காணும் நிகழ்வுகள் முடிந்துள்ளன.

### தரிசு நில மேம்பாட்டிற்கு உற்சாக வரவேற்பு

மேலும் சரியான வேளாண் – வணிகத் திட்டங்களுடன் கூடிய தகுதியான பெரிய நிறுவனக் குழுமங்களைத் தேர்ந்தெடுக்கும் பணியும் தற்போது நடைபெற்று முன்னேறி வருகிறது.

இந்தத் திட்டத்திற்கான வரவேற்பு உற்சாகம் தருவதாக உள்ளது. இதுவரை 4,112 மனுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 1,597 மனுக்கள் சரியான விவரங்களுடன் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளன.

இதில் 224 பெரிய குழுமங்கள் வேளாண் சார்ந்த வணிகத்திற்காக நிலங்களை எடுத்து செயல்பட ஆர்வம் கொண்டுள்ளன.

8 எக்டேருக்கும் கீழான நிலத் தொகுப்புகளை அந்தந்த ம்ாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட குழுவே பரிசீலிக்கும்.

### தலைமைச் செயலாளரின் தலைமையில் உயர்மட்டக் குழு

8 எக்டேருக்கு கூடுதலான நிலத்தொகுப்பைக் கொண்ட பகுதியும் மற்றும் 40 எக்டேருக்கும் கூடுதலான நிலப்பரப்பை உள்ளடக்கிய தொகுப்பைக் கொண்ட நிலப்பகுதியும், மாவட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, தலைமைச் செயலாளரின் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும். பிறகு அதன் அடிப்படையில் அரசு உரிய உத்தரவு வழங்கும்.

இதுவரை இரண்டு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. 4 மாவட்டங்களை உள்ளடக்கிய மொத்தம் 459 எக்டேர் நிலத்திற்கு மட்டும் தற்போது உயர்மட்டக் குழு ஒரு வரைவுத் திட்டத்தைப் பரிந்துரைத்துள்ளது. விரைவில் அரசு இதன்மீது உத்தரவு பிறப்பிக்க உள்ளது. இந்த நடைமுறை விரைவில் முடிக்கப்பட்டு எதிர்வரும் 2003 பொங்கலுக்குள் எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டம் செயலுக்கு வந்துவிட வேண்டும் என நான் அறிவுறுத்தியுள்ளேன். தரிசுநில மேம்பாட்டுத் திட்டமானது பிற துறைகளின் திட்டங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

எனது அரசு சமீபத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை துவக்கியுள்ளது. அதன்படி மாநிலத்தின் அனைத்து 385 ஒன்றியங்களிலும் வேளாண் தொழிற்சாலைகளையும், ஒன்றிணைக்கும் கருத்தில் இது செயல்படும்.

நபார்டு மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்றவற்றின் நிதி ஆதரவுடன் புதிய வேளாண் தொழில் அலகுகள் இன்னும் 6 மாதத்திற்குள் தமது பணியை துவங்கி நடத்த உரிய ஊக்குவிப்பு கொடுக்கப்படும்.

வெவ்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதில் தான் இந்த திட்டத்தின் வெற்றி சார்ந்திருக்கிறது.

### அனைவரும் அறியும் வகையில் பிரச்சாரம்

மாவட்டங்களில் இந்த ஒருங்கிணைந்த பணிகளின் குவிப்பு குறித்தான கருத்தை அனைவரும் அறியும் வண்ணம் பிரச்சாரம் செய்து பரப்புவது மிக முக்கியமான ஒன்றாகும். இதன்மூலம் வெவ்வேறான களப்பணியாளர்கள் ஒன்றிணைந்த ஒரே குழுவாக வேலை செய்வதை உறதிப்படுத்த வேண்டும். மாவட்ட மட்டத்தில் நுண்திட்ட மேம்பாட்டு வளர்ச்சியையும், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்–திட்ட முறைகளுடன் தரிசு நில மேம்பாட்டை இணைத்தலையும் உறுதிப்படுத்த வேண்டும்.

எல்லா கிராமங்களிலும் இத்தகைய தரிசு நிலங்களையும், கரம்பாக விடப்பட்ட நிலங்களையும் கண்டுபிடிக்க வருவாய் மற்றம் விவசாயத் துறையின் அலுவலர்களை உள்ளடக்கிய ஒரு தீவிர முனைப்பை உருவாக்க வேண்டும். அப்போது தான் உற்பத்திசார் பொருளாதாரச் செயல்பாட்டுடன் கூடிய தரிசுநிலத்தை உயிருள்ளதான விளைநிலமாக கொண்டுவரும் முயற்சியில் நாம் வெற்றி பெற முடியும்.

### புதிய வேலை வாய்ப்புகள்

தனியார் குழுமங்களை உள்ளடக்கிய இந்தத் திட்டம் வேளாண் வணிகம், குளிர்பாதுகாப்பகம் மற்றும் சந்தையுடன் முன்னோக்கிய இணைப்புகளைப் பெற்றிருக்கும்.

சிறுநில உடைமையாளர்கள், தனியார் குழுமங்கள் இருவரிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதன் மூலம் வேளாண் வணிகம் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டங்கள் கிராமப்புறப் பகுதிகளில் புதிய வேலைவாய்ப்புகளை வழங்க முடியும்.

இத்திட்டத்தை பலன் அளிக்கத்தக்கதாகச் செய்ய, வேளாண் விளை பொருளுக்கும், அதே போன்று, வேளாண் தயாரிப்பின், மதிப்புக் கூட்டப்பட்ட, பொருளுக்கும் சந்தையுடனான இணைப்பை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இதை நோக்கமாகக் கொண்டுதான், வேளாண் ஏற்றுமதி மண்டலங்களாக, 3 உயர் ஆதாரப் பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்து அறிவிப்பு செய்துள்ளது.

### ரூ.64 கோடியில் ஏற்றுமதி மண்டலம்

கூட்டு முயற்சி ஏற்பாடாக, ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் ஒசூரில், மலர்களுக்கான, ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரியில், ரூ 15.89 கோடி மதிப்பீட்டில் மலர்கள் உற்பத்திக்காக, வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படுகிறது. அதே போன்று மாம்பழ ஏற்றுமதியை கருத்தில் கொண்டு தேனியில், வேளாண் ஏற்றுமதி மண்டலமும் மற்றும் 5 தென் மாவட்டங்களிலும் ரூ.24.60 கோடியில் அமைக்க, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், மேம்பாட்டு ஆணையத்தால் சமீபத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதே போன்று குளிர்பாதுகாப்பு அறை, மாதிரிப் பண்ணை, குளிரூட்டப்பட்ட வாகனம் ஆகிய வற்றிற்கான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும். மேலும் இதனுடன் கூடியதும், இதன் விரிவாக்கமுமாக ஆராய்ச்சி நிலையம், நிலக்கோட்டையில் சுற்றுச்சூழல் தொழில் முனைவுப் பூங்கா ஏற்படுத்தப்படும். இதனால் ஓர் உயிருள்ள வேளாண்மை முன்னேற்றம் ஏற்படுத்தப்படும்.

### அடுத்து 4 ஆண்டுகளில் முன்னேற்றத்திற்கான பாதை

முதலமைச்சரின், 15 அம்ச திட்டம் தமிழக மக்களின், வளமான வாழ்வுக்கும் அனைத்து சமூக – பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையான ஒரு நோக்கத்தை கொண்டு விளங்குகிறது. இது தலைசிறந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சாமிநாதன் போன்றோர் களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டதாகும்.

இந்தத் திட்டம், இந்த அரசின் அடுத்து வரும் 4 ஆண்டுகளுக்கான முன்னேற்றும் பாதையாக இருக்கும். நம்முடைய 10–ஆவது திட்ட அறிக்கையின் முன்னேற்றத்திற்கான பாதையாக இது அமைந்துள்ளது என, மத்திய திட்ட கமிஷனால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### 2006-க்குள் நிறைவேற்றுவதே இலட்சியம்

இந்த இலட்சியப் பார்வையை, 2006 மார்ச் இறுதிக்குள் நிறைவேற்றுவதே, இந்த அரசின் முழு முயற்சியாக இருக்கும். நம்முடைய நோக்கமெல்லாம், இந்த தமிழகத்தில் உள்ள, மழை சார்ந்த மற்றும் விளிம்பு நிலை பகுதிகளில் உற்பத்தியை உயர்த்துவதுதான். அதையும் நீர் நிலை ஆதாரத்துக்கேற்ப அணுகுமுறையை பயன்படுத்தி தரிசு நிலத்தை மேம்படுத்துதல், மழைநீர் அறுவடை மற்றும் நீர் ஒருங்கிணைத்தல் தொழில் நுட்பம் ஆகியவற்றையும் பயன்படுத்தி மேம்படுத்துதல் ஆகும்.

வேளாண் முறையிலான தொழிலகங்களின் தொடர்புடன் கூடிய, விவசாய பொருள்களுக்கான கட்டுபடியாகும் வகையில் இலாபம் தரக்கூடிய வழியை உறுதி செய்வதும் இதில் அடங்கும்.

### வளமான சகாப்தத்திற்கு உறுதி

இத்திட்டம் கிராமப்புற வருவாயை நாமே கண்டுகளிக்கும் வகையில் உயர்த்தும், இதே போன்று விவசாயம் சார்ந்த, மற்றும் விவசாயம் சாராத இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே பிற மாநிலங்களைக் காட்டிலும் எல்லாவற்றிலும் முதன்மையான மாநிலமாக உயர்த்துவது தான் எனது கனவாகும்.

உங்களுடைய மதிப்பு மிகுந்த யோசனைகளாலும், உங்களுடைய ஒத்துழைப்புடனும், நாம் வறுமையை ஒழித்துக் கட்ட முடியும் என்றும்; தமிழகத்தில் ஒரு வளமான சகாப்தத்தை கொண்டு வர முடியும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தப் பொருள் தொடர்பாக, உங்களது தகவல் நிறைந்த கருத்துகளைக் கேட்டறிய விரும்புகிறேன்".

*– மாண்புமிகு முதலமைச்சர்*
***செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*தரிசு நில மேம்பாட்டு ஆய்வுக் கூட்டத்தில்*
*13.12.2002 அன்று ஆற்றிய உரை.*



# தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும் தமிழ் மன்றம்! தமிழக முதல்வர் ஆணை!

தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மேனிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தமிழ்க் கவிதை, கட்டுரை மற்றும் சொற்பொழிவு ஆகியவற்றில் ஊக்கமளித்து, அவர்களின் படைப்பாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்த்திட ஏதுவாக மாவட்டங்கள் தோறும் 'தமிழ் மன்றம்' என்னும் புதிய அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பள்ளிப் பருவத்திலேயே மாணவ மாணவியர்கள் தமிழ் மொழியில் படைப்பாற்றலும், பேச்சாற்றலும் பெற்றவர்களாக வளர்க்கப்பட வேண்டும். அவர்கள் தமிழ் உணர்வு பெற்று வளர வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பமாகும். இதன் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் அமைத்து மாவட்டங்களிலும் 11,12ஆம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளைத் தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக நடத்திப் பரிசுகளை வழங்க அறிவுறுத்தியதின் பேரில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 2002–2003ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது "பள்ளி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும்" என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் "தமிழ் மன்றம்" திட்டத்தை 2002–2003 நிதி ஆண்டு முதல் ஆண்டுதோறும் சிறப்புடன் செயல்படுத்த ஆணையிட்டு உள்ளார்கள். இந்தத் திட்டத்தின்படி, தமிழகத்தில் உள்ள 29 மாவட்டங்களிலும் 11–12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சு ஆகியவற்றில் போட்டிகள் நடத்தி, ஒவ்வொரு பிரிவிலும் முதல் நிலையில் உள்ள மாணவர்க்கு ரூபாய் 500/–ம், இரண்டாம் நிலையில் உள்ள மாணவர்க்கு ரூபாய் 250/–ம், பரிசுத் தொகையாக வழங்கப்படும். மேலும், வெற்றி பெறும் மாணவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். இதன்படி,கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு என ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆறு பரிசுகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ரூபாய் 2 இலட்சத்து 10ஆயிரத்து 250 ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்.

இந்தப் போட்டிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்திட வேண்டி மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த ஆலோசனைக் குழுவின் தலைவராக செயல்படுவார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியரால் அமர்த்தப்படும் உள்ளூர்த் தமிழறிஞர்கள் இருவர், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் ஒருவர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டலத் துணை இயக்குநர்கள், மாவட்ட உதவி இயக்குநர்கள் இந்தக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் களாகச் செயல்படுவார்கள். ●



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்


# இந்தியாவிலேயே முதன்முதலாக பெண் கைதிகளுக்கு கல்வியறிவுத் திட்டம்

சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், காலச்சூழலாலும், கல்வி அறிவு பெற்று, வாழ்க்கை வளத்தைச் சரி செய்து கொள்ள முடியாமல், அதன் காரணமாக வறுமையில் வாழும் பெண்கள், தங்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைக்காக சில தவறுகளைச் செய்கிறார்கள். அவர்கள் தவறுகளை அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும், சட்டத்தினால் அதற்குரிய தண்டனை வழங்கப்பட்டு சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

அறிந்தும் அறியாமல் செய்யும் தவறுகளுக்கு அடிப்படைக் காரணம் கல்வி அறிவு போதாமை. பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க வேண்டிய காலத்தில் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதும் அல்லது பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி விடுவதும் தான். இந்தக் குறைபாட்டினால் தாங்கள் செய்வது சரியானதா, நியாயமானதா, சட்டத்திற்குட்பட்டதா என்று சிந்தித்துச் செயல்பட இயலாத காரணத்தால் சட்டத்தினால் தண்டிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். அவர்கள் சிறைவாசம் அனுபவிக்கும் காலத்திலாவது அவர்களது உள்ளம் பண்பட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள். அதற்கு கல்வி அறிவு தேவை. கல்வி அறிவினால்தான் உள்ளம் பண்படும்.

பெண் கைதிகள் தங்கள் தண்டனைக் காலத்தை முடித்துவிட்டு விடுதலையாகி வெளியே வரும்போது கல்வி அறிவினால் உள்ளம் பண்பட்டு திருந்திய நல்வாழ்வு வாழ வேண்டும் என்கிற நோக்கத்தில் 8.11.2002 அன்று திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் உள்ள பெண் கைதிகளுக்குக் கல்வி அறிவு வளர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.பி.தங்கராஜ், இ.கா.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., சிறைத்துறைத் துணைத்தலைவர் திரு.க.சந்திரசேகரன், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்ட இயக்குநர் திரு.பீர்முகைதீன், மாநில பள்ளிசாரா கருவூலப் பெருந்தலைவர் [illegible] வ.கே.கோவிந்தராஜன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் திரு.வி.ஆர்.வீரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இக்கல்வி அறிவுத்திட்டம் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் அதுவும் திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையில் தான் முதன்முதலாக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கல்வி அறிவுத்திட்டம், அறிவொளி வளர்கல்வி திட்டத்தின் தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 6 மாதங்கள் நடைபெறும் இக்கல்வி அறிவுப் பயிற்சியில் 240 பெண் கைதிகள் பயன்பெற உள்ளார்கள். இதற்காக மனிதவளமேம்பாடு மையத்தின் மூலம் அறிவொளி வளர்கல்வித் திட்டத்தைச் சார்ந்த 8 ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் பெண் கைதிகளுக்குக் கல்வி அறிவு அளிக்கப்படுகிறது. ஒரு வகுப்புக்கு 30 பேர் வீதம் 8 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு காலையில் நான்கு வகுப்புகளும், மாலையில் நான்கு வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பெண் கைதிகளுக்கு எழுத்தறிவு கற்பிப்பதுடன் சமூகக் கல்வியும் மனதைப் பக்குவப்படுத்தும் வகையில் நீதிபோதனையும், பொது அறிவும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆர்வமுடன் கல்வி பயின்று வரும் இப்பெண் கைதிகள் தாங்கள் விடுதலையாகி செல்லும்போது கல்வி எனும் அழியாச்சொத்து தமக்கு அவசியம் தேவை என்பதை உணர்ந்து, கல்வி பயின்று வருகின்றனர். பயிற்சிக்குத் தேவையான புத்தகங்கள், சிலேட்டுகள் மற்றும் எழுதுபொருள்கள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும் அவர்கள் கல்வி அறிவு பெற்று வெளியே வரும் போது தங்கள் வாழ்க்கை வசதிக்கு ஏதாவது ஒரு தொழில் தேவை என்பதற்காக தையல் தொழில், பின்னல்வேலை மற்றும் பொம்மைகள் செய்தல் போன்ற தொழில்களில் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

**– கோ. பன்னீர்செல்வம்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சி.

தமிழக சுற்றுலாத் துறையின் பணி முன்னேற்ற ஆய்வுக்கூட்டம் 12.12.2002 அன்று முற்பகல் 11.00 மணி அளவில் தமிழ்நாடு சுற்றுலா வளாகத்திலுள்ள மாநாட்டுக்கூடத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அமில்லர் அவர்கள் சுற்றுலா இயக்கப் பணியின் முன்னேற்றம் பற்றிய ஆய்வை மேற்கொண்டார்கள். 2002–2003 ஆம் ஆண்டு நிதி நிலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 30.11.2002 வரையிலான செலவின விவரங்களை ஆய்வு செய்தார்கள். சில இனங்களில் இன்னும் அதிகமாகச் செலவு செய்தல் வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மாநில சுற்றுலாத் திட்டப்பணிகள் மைய அரசு சுற்றுலாத் திட்டப்பணிகள், போன்றவைகளின் தற்போதைய நிலை என்ன என்பதையும் ஆய்வு மேற்கொண்டார்கள். அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்திக் கூறினார்கள்.

# தமிழக சுற்றுலாத்துறைப் பணிகள் முன்னேற்றம்! சுற்றுலா அமைச்சர் ஆய்வு!

சுற்றுலா அலுவலகங்கள் / சுற்றுலாத் தகவல் மையங்களில் எப்போதும் சுற்றுலா பற்றிய வழிகாட்டி வெளியீடுகள் சுற்றுலாப் பயணிகளுக்கு கிடைக்கவும், விடுமுறை நாட்களிலும் சுற்றுலா தகவல் பெறுகின்ற வகையில் அலுவலகங்கள் செயல்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்கள்.

இந்தஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலா இயக்கக அலுவலர்கள், தலைமைச்செயலக சுற்றுலாத்துறை அலுவலர்கள், சுற்றுலா ஆணையர் திரு சி.பி.சிங், இ.ஆ.ப., மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு வி. இராமதாஸ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

• • •

# கட்டடத் தொழிலாளர்களுக்கு நிதி உதவி!
# தமிழக முதலமைச்சர் வழங்கினார்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்லாட்சியில் கட்டடத் தொழிலாளர்கள் நலனைக் காக்க 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபடும் சித்தாள், கொத்தனார், எலக்ட்ரிஷன் போன்ற 38 வகையான தொழில்களைச் செய்யும் தொழிலாளர்கள் ரூ.25/– பதிவுக் கட்டணத் தொகையாக செலுத்தித் தங்களை உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு கட்டுமானத் தொழிலாளிக்கும் அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் 2 ஆண்டிற்கொரு முறை ரூ.10/– செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களின் திருமணத்திற்கும் மகன்/மகள் திருமணத்திற்கும், திருமண உதவி நிதியாக ரூ.2,000/–மும், கல்வி உதவி நிதியாக ரூ.1,000/– முதல் ரூ.6,000/– வரையிலும், பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவி நிதியாக ரூ.2,000/–மும் வழங்கப் படுகிறது.

விபத்தில் மரணமுற்றால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ரூ.1,00,000/– விபத்துக் காப்பீட்டுத் தொகையும், விபத்தில் காயமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.1,00,000/– வரை காப்பீட்டுத் தொகையும் வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்தில் பதிவு பெற்ற ஒரு தொழிலாளி இயற்கை மரணமடைந்தால், இத்தொழிலாளியின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10,000/–உதவி நிதியும் ரூ.2,000/–ஈமச்சடங்கு உதவி நிதியும் வழங்கப் படுகிறது.

191 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 28.11.2002 அன்று இவ்வாரியத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கல்வி, திருமணம் மற்றும் மகப்பேறு உதவி நிதிகள் ரூ.3,23,500/– வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுக் கிணங்க 12.12.2002 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு.ஏ. அன்வர் ராஜா அவர்களால் விபத்தில் மரணமுற்ற திரு.ஏ.சீனிவாசன்,மற்றும் திரு.என்.பழனி, ஆகியோர்களின் குடும்பத்தாருக்குத் தலா ரூ.1,02,000/–மும் இயற்கை மரணமுற்ற திரு.ஜி.மனோகரின் குடும்பத்தாருக்கு ரூ.12,000/–மும், திருவாளர்கள் திரு.எம்.துரை மற்றும் திரு.எம்.செல்வராஜன், ஆகியோர்களின் வாரிசுகள் திருமணத்திற்கு உதவி நிதி தலா ரூ.2,000/– வீதமும் ஆக மொத்தம் ரூ.2,20,000/– வழங்கப்பட்டது.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் இந்த அரசால் சுமார் 6,000 உடல் உழைப்புத் தொழிலாளர்கள் அரசின் நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர். முந்தைய ஆட்சியுடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது இது ஒரு அளப்பரிய சாதனையாகும். ✱

# ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதே எனது இலட்சியம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

"வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியம் சார்பில் நடைபெறும் கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு இங்கே சிறப்புரை ஆற்றுவது எனக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டுக்கும் சென்னைக்கும் வருகை தந்துள்ள வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியத்தின் (IFAD) தலைவர் லெனார்ட் பேஜ் அவர்களுக்கும் அவரது குழுவிற்கும் எனது மனமுவந்த வரவேற்பை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மகளிர் முன்னேற்ற திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தியதில் ஐ.எப்.ஏ.டி.யுடன் எமது அரசுக்குள்ள நல்ல இணக்கத்தை கருதும்போது தமிழ்நாட்டிற்கு அவர்களது இன்றைய வருகை காலங்கடந்த ஒன்றாகவே நான் கருதுகிறேன்.

## பன்னாட்டுப் போட்டி

நமது சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பிரிவினரிடையே உள்ள வறுமை, பசி, ஏழ்மை சார்ந்திருத்தல் ஆகியவற்றை ஒழிக்கும் ஒரு பொதுவான நோக்கத்தில், தமிழக அரசும் வேளாண்மை மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியமும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த நோக்கத்தில் வெற்றிபெற புதிய கூட்டுறவு முறையிலான பாதையைக் கண்டுபிடிக்கவும் இந்த முயற்சியை மேலும் புதுப்பித்துக் கொள்ளவும் தங்களது இந்த வருகை எங்களுக்கு ஒரு வாய்ப்பை கொடுத்திருக்கிறது.

உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் முறையின் கீழ் சந்தைச் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் 1980களிலும் மற்றும் 1990–களிலும் பெரும்பாலான வளரும் நாடுகள் ஈடுபட்டன. பல நாடுகளின் பொருளாதார நிலைமைகளை இந்தப் புதிய நூற்றாண்டு வியக்கத்தக்க அளவுக்கு மாற்றியுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் நேரடி ஈடுபாடு குறைக்கப்பட்ட நிலையில் உள்நாட்டுச் சந்தைகள் யாவும் பன்னாட்டுப் போட்டிக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட பலனை இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் கொடுத்தனவா? இந்த அமைப்பு மாற்றங்களால் ஏழைகளுக்கு ஏதாவது பலன் கிடைத்ததா?

## ஏழைகளின் பலவீனங்களால் ஆபத்து

உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் நடைமுறையில் சராசரியாக தடுமாற்றத்தையே உருவாக்கியுள்ளது என நாடு முழுக்க நடத்தப்பட்ட கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் நாடுகளிலும் மற்றும் ருமேனியா, போலந்து போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட இந்த சீர்திருத்த நடவடிக்கைகளால் துன்பங்களும் துயரங்களுமே தொடர்ந்து வந்துள்ளன. இதில் ஒரு நல்ல படிப்பினை காணக் கிடைக்கிறது.



புதிய பொருளாதார அமைப்பில் சீர்திருத்தத்திற்கு ஓர் அவசிய இடம் இருக்கிறது. ஆனால், இந்த சீர்திருத்த நடவடிக்கையினால் ஏழைகளின் குறிப்பிட்ட பலவீனங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஆபத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

## திட்டமிடும் திறன் வகுக்க வேண்டும்

1991–ஆம் ஆண்டில் இருந்த கடுமையான கடன் இருப்பு – சூழ்நிலையில் இந்தியா, பொருளாதார மற்றும் நிதி வருவாய் கொள்கைச் சீர்திருத்த நடவடிக்கையில் இறங்கியது. ஆரம்ப ஆண்டுகளில் தென்பட்ட உற்சாகம் விரைவான வளர்ச்சியை எட்ட முடியாமையால் கவலையாக மாறிவிட்டது.

10–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம். இந்த மேற்கண்ட பின்புலத்தில் தான் நமது எதிர்கால திட்டமிடும் திறன் வகுக்கப்பட வேண்டும். சில அடிப்படை கேள்விகளை நான் எனக்குள்ளேயே எழுப்பிக் கொள்வேன்.

இந்த பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்குதல் நடவடிக்கைகள் மூலம் நாம் என்ன சாதிக்க முயற்சி செய்கிறோம் ?

தமிழகத்தில் மனித வளர்ச்சி குறியீடுகள் நாட்டிலேயே முதன்மையாக இருப்பதாலும்; ஆசியாவின் சிறந்த குறியீட்டிற்கு இணையாக இருப்பதாலும்; இந்த நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டுவர நான் விரும்புகிறேன். இந்த நோக்கங்களை நிறைவேற்ற எவ்வகையில் முடியும் ? இழந்ததை ஈடுகட்டும் முழு முயற்சியில் நான் முயன்று வருகிறேன்.

## சத்துணவுத் திட்டம்

பொருளாதார மற்றும் நிதி வருவாய் கொள்கை சீர்திருத்த நடவடிக்கைகள் தொடக்கத்தில் பின்னடைவைத் தரும் என எதிர்பார்த்து பொருளாதார சீர்திருத்த எதிர்விளைவுகளில் இருந்து ஏழைகளைப் பாதிக்காத ஒரு பொருந்துகிற சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கும் அவசியத்தை ஆரம்பத்திலேயே உறுதியாக மேற்கொண்டுள்ளேன்.

ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக பொருத்தமான ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை 1991–1996–ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் உருவாக்கினோம். தமிழக அரசின் இந்தத் திட்டத்தை கருத்துருவாகவும், ஆதாரமாகவும் கொண்டு மத்திய அரசு 1995ஆம் ஆண்டில் தேசிய சமூக செயல் திட்டம் ஒன்றை கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்டுவதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

20 ஆண்டுகளுக்கு முன்பு எனது அரசியல் ஆசான் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது பள்ளிக் கூடங்களில் பள்ளி மாணவர்களுக்கு ஒரு நல்ல சத்துள்ள மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தினார்.

அதனையே ஓர் ஆதாரமாக எடுத்துக் கொண்டு தான் இந்திய மாட்சிமைக்குரிய உச்சநீதிமன்றம் எல்லா



மாநிலங்களும் பள்ளி மாணவர்களுக்கு ஒருவேளை சத்து நிறைந்த மதிய உணவு வழங்க வழிகாட்டி, அண்மையில் உத்தரவிட்டுள்ளது.

**1991–96** ஆம் ஆண்டுகளில் வேளாண்மை மேம்பாட்டுப் பன்னாட்டு நிதியத்தின் உதவியுடன்தான் பெண்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் திட்டங்களை நிறைய கொண்டுவந்து நிறைவேற்றியது. அந்த சமயத்தில்தான் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நிறுவப்பட்டன. வறுமைக்கு எதிரான போராட்டத்தில் இந்தத் திட்டம் முன்னோடித் திட்டமாகும்.

எதிர்பார்த்த அளவில் வளர்ச்சி ஏற்படாத அந்த காலகட்டத்தில் அமைப்பு மாற்ற நடவடிக்கையின் கடும் நெருக்கடிகளை மாநிலத்தின் ஏழைகளும் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களும் ஏற்றுக் கொண்டு சமாளித்தனர் என்பதில் சந்தேகமில்லை.

வளர்ச்சி மட்டுமே வறுமையைப் போக்கும் அருமருந்து ஆகாது. வறுமையை எதிர்க்கும் நமது போராட்டத்தில் வளர்ச்சி நமக்கு ஒரு நல்ல முன்னோடியாக இருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தின் முக்கிய துறைகளில் வளர்ச்சியே இல்லை என்பது என்னைமிகவும் கவலைக்குள்ளாக்கியது.

மக்கள் தொகையின் 62 சதவீத மக்களின் வாழ்க்கை விவசாயத்தையும் மற்றும் பிற ஆதார துறைகளின் ஆதரவிலும் தான் நடைபெறுகிறது. இதன் பங்கு 17 சதவீதமாகத்தான் உள்ளது.

கிராமப்புற ஏழ்மை நிலையில் தொடர்ந்து நிச்சயமற்ற தன்மையையும்; கிராமப்புற பகுதிகளில் தொடர்ந்து வறுமை ஆட்டிப் படைப்பதையும் இது நமக்கு காட்டுகிறது.

தமிழ்நாட்டில் வேலை இல்லாதோர் நிலை நாட்டின் 3வது இடத்தை வகிக்கிறது. அதாவது 15 சதவீதம் அளவில் உள்ளது.

கடந்த காலங்களில் வளர்ச்சிப் பாதை ஏழைகளை உள்ளடக்கியதாக இல்லை என்கிற கருத்தையே இவைகள் உறுதிப்படுத்துகின்றன. உண்மையில் வருமானச் சமச்சீரின்மையை இவை மேலும் ஆழமாக்கிவிட்டன.

## வறுமை ஒழிப்புக்கு புதிய உத்வேகம்

**கடந்த 5 ஆண்டு இடைவெளியில் நாங்கள் ஆட்சியில் இல்லாததால் அதற்கு முன்பு நாங்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து அவைகளைத் தேடி கஷ்டப்பட்டு கண்டறிந்து துவக்க வேண்டியுள்ளது.**

மேலும் வறுமை ஒழிப்பு திட்டத்துக்கு ஒரு புதிய உத்வேகத்தை கொடுக்க வேண்டியுள்ளது. முந்தைய ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளினாலும் மோசமான நிதி நிர்வாகத்தினாலும் சரிந்துள்ள சொற்ப நிதியை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. இந்நிலையில்தான் சமூக நலத்துறைத் திட்டங்களையும் சுகாதாரத்துறை மற்றும் தொடக்கக் கல்வித் துறைகளின் செயல்பாட்டுக்கான திட்டங்களை மனம் பொறுக்காமல் வெட்டிக் குறைக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளானேன்.

இதுபோல் இனி நேராமல் இருக்க நான் தற்போது உறுதி எடுத்துள்ளேன். நலவாழ்வை நசுக்குவதில் ஏழ்மை பெரும் பங்கு வகிக்கிறது என்கிற கருத்தை நானும் ஏற்கிறேன்.

தேர்ந்தெடுத்தல்; செயல்படுத்துதல் ஆகிய அடிப்படைச் சுதந்திரம் ஏழைகளுக்கு மறுக்கப்படுகிறது. மேலும் சமூகத்தில் தனிமைப்படுத்துவதிலும் பிறரைச் சார்ந்து நிற்கும் அவமானமும் அதிகாரமின்மையும் பலவீனங்களும் பொருளாதார பாதுகாப்பின்மையும் ஏழ்மை சுற்றிவளைத்து தனக்குள் வைக்கிறது.

## ஏழையின் தேவை

ஏழ்மை ஒழிப்பு நல்ல ஆட்சியை வழங்குவதிலும் பொருளாதார பாதுகாப்பை உறுதிபடுத்துவதிலும்; அதிகாரத்தை பயன்படுத்துவதை எளிமை ஆக்குவதிலும்; வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் தான் உள்ளது; ஏழ்மையை முற்றிலும் ஒழிப்பதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் நாம் அடைகிற வெற்றி, நிரந்தர வறுமை மிகுந்த வாழ்க்கையில் இருந்து விடுதலைபெற பொருள் தேடும் வாய்ப்பையும் அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதும் தான் ஓர் ஏழையின் தேவையாகும்.

வறுமையை முற்றிலும் குறைக்கும் வழிமுறையில் நான்கு முனைகளிலும் அதாவது அரசு மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும், நகராட்சிக்குழு மூலமாகவும், ஏழைகளே முன்வருவது மூலமாகவும் ஆகிய நான்கு வழி முறைகளும் அடங்கிய ஓர் உறுதியான, ஒன்றை ஒன்று நிரப்புகிற திட்டமும் இதற்குத் தேவைப்படுகிறது.

## தனிமனித வருவாய் இரட்டிப்பு

**2010 ஆம் ஆண்டிற்குள் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்கும் ஒரு வருங்காலப் பார்வையே எனது இலட்சியம்.**

**இதை மனதில் கொண்டுதான் வறுமை எனும் விலங்கை உடைத்தெறியும் வழிமுறை திட்டமாக ஒரு பல்முனைத் திட்டத்தை எனது அரசு உருவாக்கியுள்ளது.**

"ஒருவர் தான் மதிக்கிற வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான சுதந்திரத்தை தான் அனுபவிப்பது மூலமாக அதாவது ஒருவருக்கு உள்ள தகுதி திறனை அவர்களுக்கு நாம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்" என பேராசிரியர் அமார்தியா சென் குறிப்பிடுவதற்கு ஏற்ப அதனை ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்படுத்தி கொடுப்பதும் எனது அரசின் நோக்கமாகும். எங்களது திட்டத்தில் கீழே குறிப்பிட்டவைகளும் அடங்கும்.

## மக்கள் வாங்கும் சக்தி அதிகரிக்கும்

★ மக்களின் தொடர்ச்சியான பயன்தரத்தக்க வாழ்க்கை பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில்; விவசாயம் மற்றும் தொழிற்துறைகளின் செயல்பாட்டைப் புதுப்பிப்பது மூலம் வளர்ச்சியைத் தூண்டிவிடுவது.

★ மக்களின் வாய்ப்புக்களை அதிகப்படுத்தும் நோக்கத்தில் தெளிவான நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சியை வளர்த்தல். அதிக அளவிலான வாய்ப்பு கிராமப்புற மக்களிடையே வாங்கும் சக்தியை அதிகரிக்க வைக்கும். அதன் விளைவாக வேளாண் மற்றும் தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படும்.

★ ஏழைக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு கொடுக்கும் அரசின் திறனை மிகப்பெரிய ஏற்க முடியாத வருவாய் பற்றாக்குறையும் மற்றும் பொதுநிதி வருவாய் பற்றாக்குறையும் மோசமடையச் செய்து பாதிக்கவைக்கும்.

★ ஒன்று திரண்ட நிதி ஆதாரம் ஒரு முக்கிய அம்சம்.

★ நல்லாட்சி நெறிமுறைகள், ஜனநாயக அதிகாரப் பகிர்வு கவனமுள்ள நிர்வாகம் ஆகியன தவிர்க்கக்கூடிய பேரவிலைக் கூடுதலை போக்கும்; இது மேலும் நிர்வாகத்தை மக்கள் சார்ந்ததாகவும் மக்கள் பங்குகொள்கிறதாகவும் ஆக்கும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2002–2007) வேளாண் விளைபொருள் வளர்ச்சியை 4 சதவீதத்திற்கு உயர்த்த அரசு உறுதி கொண்டுள்ளது.

முக்கிய உற்பத்தித் துறைகளைப் பொறுத்தவரையில் எங்களது அணுகுமுறை கீழ்க் குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடக்கியதாக இருக்கும்.

## சிறிய மற்றும் எளிய விவசாயிகளை ஊக்குவித்தல்

1. மழைநீர் அறுவடை மற்றும் நீர்நிலை அதிகரிப்பு மூலம்; தரிசு நில மேம்பாட்டை உள்ளடக்கிய வேளாண்மை நிலப் பரப்பை அதிகப்படுத்துதல் – சிறிய மற்றும் எளிய விவசாயிகள் பல காரணங்களால் தங்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டு விடுகின்றனர். இந்த வகை நிலங்களைக் கண்டுபிடித்து வளர்ச்சி ஈடுபாட்டில் பங்குகொள்ள அவர்களை ஊக்குவிப்பது இப்பொழுது நம்முடைய முயற்சியாக இருக்கிறது.

2. அதேவேளையில் விரைவில் பலனைப் பெறும் வகையில் கிராமப்புறங்களில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில் விவசாய – வியாபார அடிப்படையில் தரிசு நில மேம்பாட்டை எடுத்து செயல்படுத்திட பெரிய நிறுவனங்கள் முன்வர நாங்கள் ஊக்கம் அளிக்கிறோம்.

3. விவசாய அடிப்படையிலான தொழிற்சாலைகள் மற்றும் கிராமப்புறத்தில் உள்கட்டுமானத்தை ஊக்குவித்தல் மற்றும் நில உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் இந்த மாநிலத்தில் உள்ள பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத விவசாயிகளுக்கு வருமானம் ஈட்டித் தருவதை உறுதிப்படுத்துதல்.

4. பிரதான உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டிருப் பவர்களைக் கூடுதலாக பிற வேலைவாய்ப்பை எடுத்து செய்ய ஊக்குவிக்கும் வகையில் மக்களை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கூடுதல் வருவாயை பெருக்கச் செய்தல்.

பொருளாதார இழப்பீட்டில் மட்டிலும் கவனம் செலுத்துவதோடு நிற்காமல், பலவீன நிலை மற்றும் ஆபத்து பாதிப்பு போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

## ரூ. 164 கோடி திட்டம்

காவிரி நீரில் நமக்குச் சட்டப்படி உரிமையுள்ள பங்கு நீரை கர்நாடக அரசு கொடுக்க மறுத்ததனால், காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி செய்யப்படவில்லை. இதனால் விவசாயத் தொழிலாளர்களின் வருமானம் பாதிக்கப்பட்டது. விவசாய விளைபொருட்களும் பாதிக்கப்பட்டது. இவ்வளவும் சமீபகாலத்தில் நடந்தது. இந்த நிலைமையில், வருமானத்தை ஈடுகட்டும் வகையில், ரூ.164 கோடியில் என்னால் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த திட்டம் முழு வெற்றியைக் கொடுத்தது. இதனால் ஓரளவு இவர்களது தேவைகளையும், இழப்பீட்டையும் போக்க முடிந்தது. மறுபடியும் நிதி வருவாய் நிலை கடுமையாகவும், தாங்க முடியாததாகவும் ஆனபோது, மானிய உதவியை வெட்டி குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுகூட, பொது விநியோக திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு அரிசி கிடைக்க ஏற்பாடு செய்தோம்.

பிற எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மிகக் குறைந்த விலையில், ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை கொடுத்துவர எனது அரசு தொடர்ந்து ஈடுபட்ட உண்மை, பலவீனமான ஏழைகளைப் பாதுகாப்பதில் எமக்குள்ள உறுதியை வெளிப்படுத்துகிறது.

பலமுனை சமூக – பொருளாதார முன்னேற்றத் திற்கான ஒரு 15 அம்ச திட்டத்தை நாங்கள் துவக்கி செயல்படுத்தினோம். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற தலைசிறந்த விஞ்ஞானிகளுடன் ஆலோசனை கலந்து தமிழக மக்களின் வளத்திற்காக இதனை துவக்கினோம்.

இந்த செயல்பாடுகள் மேலும் ஒருங்கிணைக்கப் பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும். நாங்கள் என்ன செய்ய முயற்சித்தோமோ, அவைகளெல்லாம் வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியத்தின் செயல்திட்ட பட்டியலில் அடங்கி உள்ளது என்று நான் அறிகிறேன்.

ஒரு புதிய தொடக்கத்தை தமிழ்நாட்டில் ஆரம்பித்து வைக்க, ஐ.எப்.ஏ.டி. தலைவர் லெனார்ட் பேஜ் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தரிசு நிலங்களை மாற்றுதல், சிறிய மற்றும் நலிந்த விவசாயிகளின் விவசாயத்தை மேம்படுத்த உதவுதல் விவசாயம் சாரா கிராமப்புற நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ஆகிய புதிய திட்டங்களில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மாநிலத்தில் செயல்படும் பல்வேறு நடவடிக் கைகளில் நம்மிடையே போதிய விவரம் பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ளது.

### சுயஉதவிக் குழுக்கள் செயலில் முன்னோடி

சுயஉதவிக் குழுக்களைச் செயல்படுத்தியதில் நாம் முன்னோடிகளாக விளங்குகிறோம். அவர்களும் இப்பொழுது உற்சாகத்துடன் செயல்பட்டு கொண்டிருக்கின்றனர். தமிழ்நாட்டில் வறுமை ஒழிப்பிற்கு எதிரான நமது அணியை, கடைசி மைல்வரை வழிநடத்திச் செல்ல வேண்டும். இந்த பயணத்தில் ஒரு கூட்டு முயற்சியை ஏற்படுத்தி மறுபடியும் நாம் ஏன் பங்குகொள்ளக் கூடாது?

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், ஒரு புதிய வெற்றிகரமான முன்னேற்றப் பாதையை ஏற்படுத்தி வழிநடத்தி செல்ல வேண்டும் என லெனார்ட் பேஜ் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற இடங்களில் ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தியதில் இருந்து, தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட இந்த முயற்சி மற்ற பகுதிகளில் எடுக்கும் முயற்சியைவிட வித்தியாசமாகத்தான் இருக்க வேண்டும். வெறும் மக்களோடு மட்டும் நாம் உறவாடவில்லை. அவர்களுடைய ஏழ்மை, அச்சம், ஆசை, நிராசை எளிதில் பலவீனப்படுத்தப்படும் நிலை ஆகியவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறோம்.

ஒரு நல்ல ஆட்சி என்பது மக்களை நேரில் ஈடுபடுத்துவதும், அவர்கள் எதிர்பார்க்கும் வாழ்க்கையை வாழ உதவி செய்வதும்தான்.

### மக்களின் கண்ணீரைத் துடைப்பதில் உறுதி

தமிழ்நாட்டிலுள்ள, ஏழைகளின் கண்களில் இருந்து வடிகிற கண்ணீரைத் துடைத்தெறிவதிலும்; அவர்களது முகத்தில் புன்னகையை வரவழைப்பதுமான எனது பணியில் நான் உறுதியாக இருக்கிறேன்; அதுவே எனது முதல் இலட்சியம்.

தமிழ்நாட்டிலும், சென்னையிலும் உங்களது தங்குதல் மகிழ்ச்சியாக அமைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.

மிக நல்ல சிறந்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள தங்களை வாழ்த்துகிறேன்.

நமது உள்ளுணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலம், வறுமையை ஒழிப்பதில் ஒரு புதிய, பயனுள்ள, முன்னேற்ற வழிமுறையை வகுத்து கொடுக்கும் என நான் நம்புகிறேன்".

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*வேளாண்மை மேம்பாட்டிற்கான*
*பன்னாட்டு நிதியம் சார்பில் 1.12.2002 அன்று*
*சென்னையில் நடைபெற்ற கிராமப்புற*
*வறுமை ஒழிப்பு கருத்தரங்கில் ஆற்றிய உரை.*

# மழைநீர் கடலில் கலந்து வீணாகாமல் தடுத்து ஊருணி, கோவில் குளத்தில் நீரை நிரப்பிய மழைநீர் சேகரிப்புத் திட்டம்!

## இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி மக்கள் மகிழ்ச்சி!

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், திருப்புல்லாணி ஊராட்சியில் உள்ள ஊருணிகள், தெப்பக்குளம், கிணறுகள் தண்ணீர் இன்றி வறண்டு கிடந்தன. ஊரில் உள்ள கிணறுகளில் நல்ல நீர் கிடைப்பது அரிதாகிவிட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் வெற்றிகரமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்படி நடைபெற்று வருகிறது. திருப்புல்லாணி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சுப. முனியசாமி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் திரு. ரமேஷ் ஆகியோரும், தங்கள் கிராமத்தை ஒட்டி மழைகாலங்களில் ஓடைகளில் ஓடிவரும் ஆற்றுநீர் வீணாகக் கடலில் சென்று விடுவதைத் தடுத்து நிறுத்தினால், திருப்புல்லாணி கிராமத்தின் குடிநீர் பிரச்சினையும், மக்கள் பயன்பாட்டுக்கான தண்ணீர்ப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று எண்ணி, மழைநீர் செல்லும் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பு அணைகட்டி, அதன் மூலம் நீரை ஊருணிக்கும், தெப்பக்குளத்துக்கும் கொண்டு செல்லலாம் என்ற கருத்தை மாவட்ட ஆட்சியர் திரு.ச.விஜயகுமார், இ.ஆ.ப., அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்களும், திருப்புல்லாணி ஊரின் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்திடவும், மழைநீரைச் சேகரிக்கும் திட்டத்துக்கும் சேர்த்து ரூபாய் 3 இலட்சத்தை சமன்பாடு மற்றும் ஊக்க நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்தார்கள்.

இந்த மூன்று இலட்சம் ரூபாய் மதிப்பில் ஓடையிலிருந்து நீரைத் திசை திருப்பி குழாய் மூலம் பிள்ளையார் குட்ட ஊருணி அருகே 14 அடி ஆழத்தில் தொட்டி கட்டி அங்கே நீர் தேக்கப்பட்டு, 10எச்பி (குதிரைத்திறன்) இரண்டு மோட்டார் மூலம் பம்பு செய்து, 350 மீட்டர் நீளமுள்ள கால்வாய் வெட்டி, தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, 12 ஏக்கர் பரப்புள்ள மதகு ஊருணி முழுதும் நிரப்பப்பட்டது. இது நிரம்பியதும் 6 ஏக்கர் பரப்பு உள்ள சக்கரைத் தீர்த்தத் தெப்பக்குளத்தில் தண்ணீர் விடப்படுகிறது.

12 அடி ஆழம் உள்ள இந்த தெப்பக்குளம் 1 வார காலத்தில் நிரம்பி விடும். இதன் பின்னர் தண்ணீர் தேக்கப்படும் தொட்டிக்கு அருகேயுள்ள பிள்ளையார் குட்ட ஊருணிக்குத் தண்ணீர் திருப்பிவிடப்பட்டு, நிரப்பப்படும்.

சுமார் 6 ஆண்டு கழித்து இப்போதுதான் மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ரூபாய் 1.5 இலட்சம் மதிப்பில் மதகுகுட்ட ஊருணி தூர்வாரப்பட்டுள்ளது. இதன் வழியாக வரும் நீரால் இந்த தெப்பக்குளம் நிரம்பியதும், ஊரைச் சுற்றியுள்ள 117 கிணறுகளிலும் நல்ல ருசியான குடிநீர் கிடைக்கும் என்று மக்கள் கூறுகிறார்கள். பல ஆண்டுகளாக நல்ல குடிநீர் இல்லாது தவித்த இம்மக்களின் குடிநீர் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டுள்ளது. சுமார் 4,000 மக்கள் தொகை கொண்ட இந்த ஊர் இம்மழைநீர் சேகரிப்பால் நல்ல பலனைப் பெற்றுள்ளது.

மேலும் விரைவில் நடைபெறவுள்ள திருப்புல்லாணி கோவில் கும்பாபிஷேகத்திற்கும், வரும் பக்தர்களுக்கும் இந்தத் தெப்பக்குளமும், ஊருணியும் நிரம்புவதால் அதிகப் பயன் ஏற்படும் என்றும் மக்கள் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள்.

இனி எந்தக் காலத்திலும் இப்பகுதியில் குடிநீர் பிரச்சினையே வராது என்றும், இனிவரும் மழைகாலங்களில் பெய்யும் மழைநீர் கூட வீணாகாமல் தடுக்கப்பட்டு, ஒவ்வொரு முறையும், இந்த ஊருணிகளில், தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தேக்கி வைக்க முடியும் என்று ஊராட்சி மன்றத் தலைவரும், ஒன்றிய கவுன்சிலரும் தெரிவித்தனர்.

ரூபாய் 4.5 இலட்சம் மதிப்பில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் மூலம் ஒரு கிராமத்தின் குடிநீர் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டது என்று எண்ணும் போது, இத்திட்டம் ஒவ்வொரு கிராமத்திற்கும், சிற்றூர்களுக்கும் சென்று அடைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

*– ரெ. இராவணன்,*
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*இராமநாதபுரம் மாவட்டம்.*


* * *

# ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம் இடமாற்றம்

– மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள்
கட்டடத்தைத் திறந்து வைத்தார்

**ஊ**ழல் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்செயல்களை ஆய்வு செய்து, கண்டுபிடித்து, நடவடிக்கை மேற்கொள்கின்ற பணியைச் சிறப்புடன் ஆற்றி வரும் தமிழ்நாடு அரசின் ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலகம் கடந்த 38 ஆண்டுகளாக தனியார் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வந்தது. மேலும், அண்மையில் உருவாக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, சென்னை அண்ணா சாலையில் உள்ள வீட்டு வசதி வாரியக் கட்டடமான பெரியார் மாளிகையில் இயங்கி வந்தது. இதுவன்றி தமிழ்நாட்டின் பல்வேறு பணிகளுக்காக சென்னைக்கு வரும் இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் தங்கும் விருந்தினர் இல்லம் அண்ணாநகரில் ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.12.2002 அன்று திறந்து வைத்தார். விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெஜெயலலிதா அவர்களைப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு.ஒ.பன்னீர்செல்வம், ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநரும், கூடுதல் காவல் துறை இயக்குநருமான திருமதி ஜி. திலகவதி, காவல் துறை தலைவர்கள் திரு.அசோக்குமார், திரு.கே. ராதாகிருஷ்ணன், ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இணை இயக்குநர் திரு. எஸ். ஜார்ஜ் ஆகியோர் மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றனர். பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.





இவ்வாறு ஒரே இயக்குநரகத்தைச் சார்ந்த பிரிவுகள் மூன்று இடங்களில் தனியார் கட்டடங்களில் மொத்தம் 1,67,591 ரூபாய் மாத வாடகையில் இயங்கி வந்தன. இந்த மூன்று பிரிவுகளும் ஒரே இடத்தில், அதுவும் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் வகையில், பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை (கிரீன்வேஸ் சாலை)யில், மொத்தம் 29,488 சதுர அடி கொண்ட, தொடர்ச்சியாக அமைந்த 8 பொதுப்பணித்துறை புதிய கட்டடங்களை ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 27.11.2002 அன்று ஆணையிட்டார்.

இதன் படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலக புதிய வளாகத்தை

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரிப்பன் வெட்டி ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை அலுவலக பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்கள். மேலும், 4.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் புதிய வளாகத்தை குத்துவிளக்கேற்றி வைத்து, உரிய கல்வெட்டுகளைத் திறந்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இதனை அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய அலுவலகத்தின் பார்வையாளர்கள் குறிப்பேட்டில் தமது கருத்துக்களைப் பதிவு செய்த பின்னர், ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநர் மற்றும் அலுவலர்களுக்கு தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.




# தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டம்

"2002–2007 ஆம் கால அளவிற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை குறித்து விவாதித்து முடிவு எடுப்பதற்காக கூட்டப்பட்டுள்ள இந்த தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வது எனக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் நீண்ட கடும் முயற்சிகள் இருக்கையில், நம்முடைய வளர்ச்சிக்கு கடந்த காலங்களில் தடையாக இருந்தவற்றை நீக்கிவிட்டு, ஒரு வளர்ச்சிப் போக்கினை உயர்ந்த கொள்கை– குறிக்கோள்களை வகுத்துக் கொள்ள இந்த சகாப்தத்தில் இது ஒரு புதிய தொடக்கமாக இருக்கும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நம்முடைய பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள், அண்மையில் சென்னை வந்திருந்த போது, நாம் அனைவரும் கனவுகள் காண வேண்டும் என்றும், அத்தகைய கனவுகளை எண்ணங்களாகக் கொண்டு வந்து, அவற்றைச் செயலாக்கமாகக் கொண்டு வர வேண்டும் என்று நமக்கெல்லாம் உற்சாகம் ஊட்டிச் சென்றுள்ளார்.

இந்தியா சக்திவாய்ந்த ஒரு நாடாக ஆக வேண்டுமென்றும், வலுவான, வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா திகழ, அதற்கான வழித்தடத்தை நோக்கி வீறுநடைபோட வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும்.

இந்தியாவை, பசிப்பிணி, வறுமை இல்லாத ஒரு நாடாகவும், வாய்ப்புகள் நிறைந்த, இளைஞர்கள்

நம்பிக்கையோடு வாழும் ஒரு நாடாகவும் மாற்ற வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும். இந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை முடிவு செய்வதானது, நம்முடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் செயல்வடிவாக்கும் வகையில் இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரிப்பதில் கணிசமான கவனம் செலுத்தப்பட்டுள்ளதால், நம்முடைய பயணம் இதிலிருந்து தொடங்குகிறது.

பத்தாவது திட்ட காலத்தில் வளர்ச்சி வீதம் 8 சதவீதமாக இருக்க வேண்டுமென சில விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கலாம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சாதனையில் தொய்வு ஏற்பட்டிருந்தது என்பதை அவர்கள் அவர்களுடைய வாதத்தில் குறிப்பிடலாம். அந்தக் காலத்தில் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி வீதம் 5.35 சதவீதமாக இருந்தது. 8 சதவீதம் என்ற பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சி வீதத்தை அடையக் கூடியதுதானா என்று விவாதத்திற்கு நான் வர விரும்பவில்லை. இத்தகைய குறிக்கோள் நம்முன் இல்லையாயின், நாம் ஓர் உற்சாகம்கூட இன்றி அப்படியே இருந்துவிடுவோம்.

## தடைகளை எதிர்த்துப் போராட வேண்டும்

நாம் தைரியத்துடன் வீறுநடை போட வேண்டியது அவசியமானதாகும். நம்முடைய வளர்ச்சிப்பாதையில் தடங்கல், தடை, இடர்பாடு ஏற்படுமாயின் அவற்றை எதிர்த்துப் போராடி சமாளிக்க நாம் தயங்கக் கூடாது. இதற்கு, நம்மிடையே ஒன்றுபட்ட முயற்சியும், மக்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளும் இத்தகைய ஒன்றுபட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 சதவீத வளர்ச்சி வீதத்தை அடைய வேண்டுமென்ற தேசியக் குறிக்கோளை, தமிழ்நாடும் அதன் குறிக்கோளாக கொண்டுள்ளது. இந்தக் குறிக்கோளை அடைவதோடு மட்டுமல்லாமல், அதைவிட அதிகமாக அடைய நாம் பாடுபட வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென மதிப்பிட்டு பிறகு அதற்கேற்ப செயல்பட நான் உறுதிபூண்டுள்ளேன்.

## தனிநபர் வருமானம் இருமடங்காகும்

தமிழ்நாடு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 15 அம்ச சாதனை திட்டத்திற்கு வகை செய்கிறது. அதனை நான் வகுத்துள்ளேன். இந்த ரூ. 40,000 கோடி என்ற மொத்த திட்ட ஒதுக்கீட்டுடன், இது, தேசியக் குறிக்கோள் நிறைவேறுவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் 2010 ஆம் ஆண்டில், தனி நபர் வருமானத்தை, இரு மடங்காக்க வேண்டுமென்ற திட்டவட்டமான குறிக்கோளுடன், இந்த மாநிலத்தை வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் செல்கிறது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட சாதனையை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்தபோது, இந்த வளர்ச்சி வீதமானது குறிப்பாக வேளாண்மை மற்றும் உற்பத்தித் துறைகளில் தான் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. இது மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒன்றாகும். 1991 ஆம் ஆண்டின் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கை விரைவான வளர்ச்சியை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் என்ன பாதகமான அம்சம் நடந்ததோ அது ஒன்பதாவது திட்ட காலத்தில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படவில்லை.


எனவே இதனை நாம் கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. கடந்தவற்றை நாம் சரி செய்ய வேண்டிய நிலை இல்லை. எனவே, கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை நாம் கவனமாகப் பரிசீலித்து இனி ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு, நம் முன் உள்ள

**இந்தியாவை, பசிப்பிணி, வறுமை இல்லாத ஒரு நாடாகவும், வாய்ப்புகள் நிறைந்த, இளைஞர்கள் நம்பிக்கையோடு வாழும் ஒரு நாடாகவும் மாற்ற வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும்.**

பத்தாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கை, பத்தாவது ஐந்தாண்டு காலத்தில் நாம் வகுத்துக் கொண்டுள்ள உயர் குறிக்கோள்களை எய்த போதுமானவையாக இருக்கின்றனவா என பார்த்துக்கொள்ள வேண்டும்.

முதன்மை துறை குறிப்பாக வேளாண்மை துறையின் வளர்ச்சிவீதம் குறைந்திருந்ததை கண்டறிந்து அவற்றை உன்னிப்பாக மதிப்பிட்டி குறைவாக இருப்பதும் இந்தத் துறையின் வளர்ச்சியை அதிகரிக்க உரிய உத்திகளை வகுக்க வேண்டிய அவசியத்தை உருவாக்கியுள்ளது.

ஆகையால், தமிழகம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இப்பிரச்சினையை சமாளிக்க நான் வகை செய்துள்ளேன். விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாம் முயற்சிக்க




ருந்ததை நான் அறிகிறேன். கிராமப்புற ஏழைகளுக்கு அதிக வாய்ப்புகளை நல்கும் அதே நேரத்தில், வறுமையைப் போக்க சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை நம்முன் உள்ளது.

## வேளாண் வளர்ச்சியை அதிகரிக்க உத்தி

தனிநபர் நில அளவு வீதம் குறைந்து வருவது, நீர் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் பாதிப்பு ஆகிய அம்சங்கள், இந்தத் துறையில் நாம் அதிக அளவு கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களாக உள்ளன. வேளாண்மை விளைபொருள் கிடைப்பதற்கான நிலம் மற்றும் நீர் குறைவாக இருப்பதும், வேலைவாய்ப்பு

வேண்டும். இது வேளாண்– வளர்ச்சி அணுகுமுறை, நடப்பு நிலையில் உள்ள தரிசுநிலங்களையும் நிரந்தரமான தரிசு நிலங்களையும் கண்டறிதல், அவற்றைத் திரும்பவும் உற்பத்தி நிலைக்கு கொண்டுவருதல், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

## தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் நல்ல பலன்

தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள நிறுவன அமைப்புகள் அழைக்கப்பட வேண்டியுள்ளது. இவற்றிடம், புதிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து, புதிய அங்காடிகளை சென்றடையக்கூடிய வகையிலான வேளாண்–வணிக

உத்திகளை உருவாக்கும் பணியை ஒப்படைக்கலாம். அனைத்திற்கும் மேலாக, நீர்வரத்துப் பகுதி அணுகுமுறையைப் பின்பற்றி, சுற்றுச்சூழல் நிலைப்பாட்டை உறுதிசெய்ய நாம் விரும்புகின்றோம். இந்த முழு திட்டம், கடந்த ஆண்டு கவனமாக உருவாக்கப்பட்டுள்ளது. இப்போது இதனை மேற்கொள்ள இது தயாராக உள்ளது. இந்த நிலைப்பாட்டுத் திட்டம், நல்ல பலனை அளிக்கும் என நான் நம்புகிறேன்.

ஒன்பதாவது திட்ட காலத்தில், வேளாண்மை துறையில் வளர்ச்சி அதிகரிக்காதது குறித்து நான் ஏமாற்றம் அடைகிறேன். பத்தாவது திட்ட காலத்தில், வேளாண்மைத் துறையில், புதிய தொழில்நுட்ப உத்திகளையும், மேம்பட்ட பணிகளையும் மூலதன முதலீடுகளை அதிகமாக செய்யவும், சரியான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. விவசாயிகளுக்கு குறிப்பாக சிறிய, சொற்ப நில விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப சக்திகள் கிடைக்கச் செய்து, அவற்றை அவர்கள் பயன்படுத்துமாறு செய்ய, திட்டவட்டமான முயற்சிகளை எடுக்க வேண்டுமென நான் விழைகிறேன்.

## நவீன உற்பத்தி சக்திகள்

தானியங்கள், சிறு தானியங்கள், பயிறுகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் நவீன உற்பத்தி சக்திகளைப் புகுத்த நாம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. இதனை மிக விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. 60 ஆம் ஆண்டுகளில், இருந்த பசுமைப் புரட்சி குறித்து, தேசிய முயற்சி தேவைப்படுகிறது. மத்திய அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர் மதிப்புடைய பயிர்களை பல்திறப் படுத்துவதன் மூலம் உற்பத்தி மதிப்பைக் காட்டும் நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டமைப்பின்கீழ் உள்ள உலகச் சந்தைகளின் நிலையை நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கக் கூடாது. வேளாண்மையில் குறைவாக முதலீடு செய்திருப்பதுதான் மிகவும் கவலை அளிக்கக் கூடிய அம்சமாகும். இது நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஏற்பட்ட ஓர் அம்சமாகும். முழுவதும் பாதகமான சூழ்நிலை நிலவுகிறது. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. பிரதமர் அவர்கள் பண்ணைத் துறையில் முதலீட்டிற்கான கடன் தேவை குறித்து கருதிப்பார்த்து ஆவன செய்வார் என்று நான் கருதுகிறேன். இந்த முக்கியமான கொள்கைப் பிரச்சினை குறித்து மத்திய நிதி அமைச்சர் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் ஆகியோர் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முதன்மைத்துறை குறித்து கவனம் செலுத்து கையில், நம்முடைய நீர் ஆதாரங்கள் குறித்து கையாளுவதில் தேசிய கண்ணோட்டம் இருக்க வேண்டிய அவசியம்பற்றி அனைவரின் கவனத்தை ஈர்க்க நான் விரும்புகிறேன்.

பத்தாவது திட்ட அறிக்கையில் சரியாகக் குறிப் பிட்டவாறு அண்டை மாநிலங்களிடம் கையேந்த வேண்டிய சூழ்நிலை எங்களுக்கு இல்லை. நதிகளை இணைப்பது குறித்து, பணிக்குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

## மகாநதி—காவிரி இணைப்பு

நதிகளை இணைக்கும் திட்டத்தை முடிப்பதற்கு மிக நீண்டகாலம் ஆகும் என்று, அதாவது 12.12.2016 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டு திட்ட கோட்பாட்டில், மகாநதியையும், காவிரியையும் இணைக்கும் முதல் கட்டப்பணி சேர்க்கப் பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இதுபோன்று மேற்கு நோக்கி ஓடும் பம்பா, அச்சன்கோயில் ஆற்றை வைப்பாறுடன் இணைத்தல் போன்று, தென் தீபகற்பத்தில் நதி இணைப்புகள் தமிழ்நாட்டிலுள்ள வறண்ட பகுதிகளுக்கு உயிரூட்டும் ஆதாரமாக விளங்கும் என்பதால் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவை முடிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலம் என்பதால், இம் மாபெரும் திட்டத்தை பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக

**நம்முடைய வளர்ச்சிப்பாதையில் தடங்கல், தடை, இடர்ப்பாடு ஏற்படுமாயின் அவற்றை எதிர்த்துப் போராடி சமாளிக்க நாம் தயங்கக் கூடாது. இதற்கு, நம்மிடையே ஒன்றுபட்ட முயற்சியும், மக்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளும் இத்தகைய ஒன்றுபட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.**

மேற்கொண்டு விரைந்து இப் பணியை முடிக்க எண்ணியுள்ளோம்.

மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியை பகிர்ந்தளிப்பதற்கான முறையில் உள்ள முரண்பாடுகள் குறித்து கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நடுத்தர, பெரும் பாசனத் திட்டங்கள் உள்ள மாநிலங்களுக்கு திட்டங்கள் ஒதுக்கப்படுகிறது. தன் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் முழுவதையும் பயன்படுத்தி விட்டு, சட்டப்படி சேர வேண்டிய பங்கு கூட மறுக்கப்பட்டு விட்டதால், தற்போது மிகவும் பற்றாக்குறை நிலையிலுள்ளது.

## மழைநீர் சேகரிப்புக்கு நிதி ஒதுக்க வேண்டும்

தமிழகம் இந்த அளவு முறையால் இரட்டிப்பாகப் பாதிக்கப்படுகிறது. நதிகளை இணைப்பதற்கான தேசியத் திட்டம் வகுக்கப்படும் இச்சூழ்நிலையில் மாநிலம் பொறுப்பேற்கும் பாசனத் திட்டங்களுக்குப் பதிலாக தரிசு நில மேம்பாடு, நீர்வரத்து மேம்பாடு, மழை நீரைச் சேகரித்தல் போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்க இயலும் வகையில் திட்டக் கூறு திருத்தப்படலாம் என்று நான் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். நீரைத் திறமையாகப் பயன்படுத்துவது குறித்து உறுதியான தகவல் அனுப்பப்பட வேண்டும். இதுதான் சிறந்த வழியாகும்.

## ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏமாற்றம்

இரண்டாவதும், மிக முக்கியமானதுமான தயாரிப்புத்துறை பற்றி நான் தற்போது கூற விரும்புகிறேன். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டச் சாதனை ஏமாற்றமளிப்பதாக உள்ளது. சீரமைப்பின் முதல் கட்டப்பணி முடிவடைந்து விட்டது. தற்போது மாநிலங்கள் இரண்டாம் கட்ட சீரமைப்புப் பணியைத் தொடங்கியுள்ள நிலையில் மத்திய அரசிடம் ஆர்வமற்ற போக்கு காணப்படுகிறது.

தாராளமயமாக்கலுக்குப் பின்னர், தயாரிப்பு துறையில் வியக்கத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் நினைத்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. பல்வேறு காரணங்களினால் இந்திய தயாரிப்புப் பொருள்கள் போட்டி போடக் கூடிய அளவுக்கு இல்லை என்பதை அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

## மாநிலங்கள் ஆவலாக உள்ளன

மத்திய அரசும், மாநிலங்களும் எடுத்துரைக்க வேண்டிய பிரச்சினைகளும் இதில் அடங்கும். புதிய உலக மயமாக்கல் கொள்கையில் இந்திய தயாரிப்பு பின்னடைந்துள்ள நிலையில் மத்திய அரசும், மாநிலங்களும் எடுத்துக் கொள்ள வேண்டிய இரண்டாவது சீரமைப்பு பற்றிய விவரங்களைப் பெற நான் விரும்புகிறேன். ஏற்றுமதி வாயிலாக தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல நான் கருதுகிறேன். இதனை அடைய நாங்கள் மிகவும் ஆர்வமுடன் உள்ளோம்.

1.4.2002–இல் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட வரியை மாநிலத்தில் செயற்படுத்துவதால் ஏகமனதாக முடிவு செய்ததிலிருந்து தெரிய வருகிறவாறு

இரண்டாம் கட்ட சீர்திருத்தப் பணிகளைத் தொடங்க மாநிலங்கள் ஆவலாக உள்ளன.

நடைமுறைகளை எளிமையாக்கல், பண்டமாற்றுச் செலவுகளை நீக்குதல், ஒழுங்கற்ற நிலையைச் சீராக்குதல், துறைமுகங்களிலும், சுங்கத் துறையிலும் பொருள்களை கையாளும் நேரத்தைக் குறைத்தல், வட்டி வீதங்களைச் சீராக்குதல், தொழிலாளர் நலச் சீர்திருத்தங்கள், தொழிலாளர் உற்பத்தித் திறன், எரிசக்தி விலையை சீராக்குதல், வழங்கப்படும் எரி சக்தியின் தரத்தை மேம்படுத்தல் நம்மிடம் இவ்வாறு விரிவான பணிகள் உள்ளன.

இவற்றைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் செய்து முடிக்க வேண்டும். நிகழ்ச்சி நிரலில் தயாரிப்புத் துறையை மீண்டும் முன்னுரிமை இனமாக குறிப்பிடலாம்.

## உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதி

சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, நகர்ப்புற பணிகள், துறைமுகங்கள் ஆகியவை அடங்கிய உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாட்டின் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் தனி முன்னுரிமை அளித்துள்ளோம்.

தக்க சட்டமியற்றுவதன் மூலம் இத்துறையில் தனியாரையும் ஈடுபடுத்த உள்ளோம். இப்பெரும் பணிக்கு போதுமான மூலதனத்தை நாம் கண்டறிய வேண்டியுள்ளது. மத்திய அரசால் இப்பணிக்கு உதவி செய்ய இயலும்.

## சிறுதொழில் வளர்ச்சிக்கு ஊக்கம்

சிறு தொழில்களுக்கு உரிய கொள்கை இல்லாதது கண்டு நான் மிகவும் கவலைப்படுகிறேன். சிறுதொழில் மூலம் சீனா, அபரிமிதமான வளர்ச்சி அடைந்தது என்று நான் அறிகிறேன். துரதிருஷ்ட வசமாக இந்தியாவில் சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க முயற்சி ஏதுமில்லை. நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டால்தான் இத்தகைய வளர்ச்சியை அடைய இயலும். இத்துறையில் புதிதாக வேலை வாய்ப்பை ஏற்படுத்த இயலும் என்பதோடு, தொழில் வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. தொழில்நுட்ப மேம்பாடு, உலகத் தரத்திற்கேற்ப பொருள்களின் தரத்தை மேம்படுத்தல், கடன்வசதி ஆகியவை அடங்கிய புதிய தொழில் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

இதனைக் குறுகிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும். இத் திட்டம் ஆக்கபூர்வமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. சிறுதொழில் முனைவர்களின் உண்மையான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வங்கிகளிடம் கடன் பெறும் வசதியை ஏற்படுத்த மத்திய நிதியமைச்சர் நடவடிக்கை எடுத்து பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இதுவே உரிய தருணமாகும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அறிக்கையில் சேவைத்துறை குறித்து போதிய கவனம் செலுத்தவில்லை என்பதை அறிந்து நான் வியப்படைகிறேன்.

## சேவைத்துறையில் தமிழகம் கடுமையான முயற்சி

உண்மையில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத் துறையில் தான் வளர்ச்சி வீதம் அதிகமாக இருந்தது. அடுத்த பத்தாண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட முக்கிய வேலைவாய்ப்பு இலக்கு கூட இத்துறையில்தான் அடையப்பெற்றது. பிரதமர் அறிவித்தவாறு அடுத்த பத்தாண்டுகளில் 100 மில்லியன் வேலை வாய்ப்புகளை இத்துறை மூலம் ஏற்படுத்த இயலும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இருப்பினும், இலக்கிடப்பட்ட வளர்ச்சி வீதங்களை எய்தினால் இந்த அளவுக்கு புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த இயலும் என்று ஊகிக்கிறோம். அடிப்படை வசதிகளில் முதலீடு செய்தல், மூலதனப் பயன்பாட்டை மேம்படுத்தல், முதலீடு செய்வதற்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தல், சிறந்த நிருவாகம் ஆகியவை சேவைத்துறையில் ஆரோக்கியமான வளர்ச்சி வீதத்துக்கு வழி வகுக்கும் என்பது வெளிப்படை.

நாட்டிலேயே தொழில் நுட்ப கல்வி பெற்றவர்கள் அதிகமாக உள்ள தமிழ் நாட்டில்,

சேவைத் துறைகளில் அதிக வாய்ப்புடன், அறிவாற்றல் மிகுந்த சமுதாயத்தை ஏற்படுத்த இம் மாநிலம் கடுமையாக முயற்சி செய்யும்.

**வளர்ச்சிப் பாதை தொலைவில் இல்லை**

தகவல் தொழில் நுட்பத்துறையில் மூலதனம் குறைந்ததால், அண்மை ஆண்டுகளில் வளர்ச்சி வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் செலுத்தும் நாள் தொலைவில் இல்லை.

எனவே மாறிவரும் உலக சூழ்நிலைக்குத் தக்கவாறு தங்களை மாற்றிக் கொள்ளும் தொழில் நுட்பாளர்களுக்கு போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாங்கள் முனைப்பாக உள்ளோம்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறையை சேவைத் துறையாக கருதுகிறோம்.

இத்துறையில் பாரம்பரியமாக உள்ள பிரிவுகளுடன் இப்பகுதி குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம். சேவைத் துறையில் விரைவு படுத்தப்பட்ட வளர்ச்சி பெற ஏதுவான, சரியான சூழ்நிலையை அளிக்கும் நமது திறமையைப் பொறுத்தே, பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் வெற்றி உள்ளது.

**பத்தாவது ஐந்தாண்டு திட்டக் கோட்பாட்டில், மகாநதியையும், காவிரியைய்ம் இணைக்கும் முதல் கட்டப்பணி சேர்க்கப்பட வேண்டும்.**

பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சி தொடர்பான முக்கிய அம்சங்கள் சிலவற்றையும் நான் இங்கு சுருக்கமாகத் தெரிவித்துள்ளேன். நாம் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. உலகப் பொருளாதார வீழ்ச்சியும், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார நிலை வளமாக இல்லாதிருப்பதும் கவலையளிப்பதாக உள்ளது.

இருப்பினும், இந்த அளவிற்கு வீழ்ச்சியும் பாதகமான பருவநிலையிலும் அடுத்தடுத்து வரும் இந்த இருண்ட சூழ்நிலையிலும் நம் இந்தியப் பொருளாதாரம் மீட்சி பெறும் நிலையில்தான் உள்ளது என்பது நம்பிக்கை அளிப்பதாகவே இருக்கிறது.

**நம் நாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டும்**

மேலும், நம் நாட்டினை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டும்; நம்முடைய இச்சூழ் நிலையை சீர்படுத்தவும் வேண்டும்; இது நம்மால் இயலும் என்ற நம்பிக்கை நிலையை நம்மிடையே ஏற்படுத்துகின்றது.

பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்குவதற்கு தேவையான முக்கிய பொருளாதார அம்சங்கள் குறித்துதான் நான் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறதே தவிர உலக அளவிலான பிரச்சினைகளை நான் இங்கு ஆராய விரும்ப வில்லை. சில முக்கியப் பிரச்சினைகள் பற்றி மட்டுமே நான் கவனம் செலுத்த விழைகிறேன்.

மதிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சி வீதத்தைப் பெருக்குவதற்குத் தேவையான முதலீடு குறித்து பரிசீலிப்பதே நம்முடைய அடிப்படை கருத்தாகும். திறமையான ஆதாயத்தைப் பெறுவதன் மூலம் மூலதனத்தைப் பயன்படுத்தி அதிக அளவு உற்பத்தித் திறனை பெறுவதே அடிப்படை கொள்கையாகும்.

**தமிழகத்தில் ஏற்றுமதியில் முன்னேற்றம்**

இக்கருத்திற்கு எவரும் மறுப்பு தெரிவிக்க மாட்டார்கள் என நான் கருதுகிறேன். தேவைப்படும்

முதலீடு குறைவாக இருந்தாலும் கொள்கை அளவிலும், நடைமுறைகளிலும் சீர்திருத்தங்கள் செய்து, சிறந்த நிருவாகத்தின் மூலம் இத்துறைகளில் நாம் இன்னும் முன்னேறிச் செல்வது அடிப்படைத் தேவையாகும் என்பதை இது குறிக்கிறது.

ஏற்றுமதியின் வளர்ச்சி வீதம் அதிகரித்துக் கொண்டே போகும் தமிழகம் போன்ற சில மாநிலங்களில், இப்போக்கினை ஊக்குவிக்க அதிக அளவில் முதலீடு செய்வது அவசியமாகலாம்.

அடுத்து நான் குறிப்பிட வேண்டியது நாட்டின் முக்கிய அம்சமான உயர் அளவு சேமிப்பு பற்றியதாகும். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக அளவு முதலீடு செய்ய அடிப்படை தேவையாதெனில், சேமிப்புத் திறனை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிப்பதேயாகும். பொதுத் துறைகளில் செலவை வெகுவாகக் குறைப்பது அவசியமாகும். நாம் சேமிப்பை ஊக்குவித்து தேவையான முதலீடுகள் வகையில் இலக்கிடப்பட்ட அளவிற்கு இச்சேமிப்பை நாம் பெற வேண்டும்.

## பணிக்குழுவின் அறிக்கை அதிர்ச்சி அளிக்கிறது

சிறுசேமிப்பிற்குரிய வரி விலக்குகள் அனைத்தையும் மத்திய அரசு நீக்க வேண்டும் என்று, நேரடி வரிகள் குறித்த பணிக்குழு தன்னுடைய அறிக்கையில் பரிந்துரை செய்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

இது மாநிலங்களின் வளர்ச்சியை தடை செய்வதோடு, தொடக்க நிலையிலேயே பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல்பாடுகளை நிறைவு செய்ய இயலாமல் போகும். மாநிலங்களின் முதலீடுகள் கணிசமான அளவிற்கு அதிகரிக்க வேண்டும் என்று நாம் ஒருபுறம் எதிர்பார்த்திருக்க, இதுபோன்ற திட்டங்களுக்குரிய நிதியுதவியை செய்யாமல் மாநிலங்களுக்கு கிடைக்கக்கூடிய நிதியையும் கிடைக்கச் செய்யாமல் விடுவது சற்றும் பொருத்தமற்றதாகவுள்ளது.

சிறுசேமிப்பு வரி விலக்குகளை ரத்து செய்யவேண்டும் என்ற செயற்குறிப்பை கைவிட்டு, இனி வரும் வரவு-செலவுத் திட்டத்திலும், தற்போதுள்ள பயன்களை நீட்டிக்கச் செய்ய வேண்டும் என்று பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வரி விதிப்பை எளிமையாக்குவது குறித்து பணிக்குழு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நான் முழு ஆதரவை அளிக்கிறேன்; ஆனால், மாநிலத் திட்டங்களில் அதிலும், பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் தொடக்க நிலையில், இந்த அளவிற்கு பொறுப்பேற்க வேண்டாம் என்று நான் கருதுகிறேன்.

## கூடுதல் வேலைவாய்ப்பை அளிப்பதே லட்சியம்

எந்தவொரு திட்டத்தின் வெற்றியும், அதனால் கிடைக்கக்கூடிய பயனை பொறுத்தே அமையும். கூடுதல் வேலைவாய்ப்பு அளிப்பதே நம்முடைய அடிப்படை கொள்கையாகும் என்பதை இத்திட்டம் குறிப்பிடுகிறது. 12.05 சதவீதம் என்ற அளவில் வேலைவாய்ப்பு இல்லாத மாநிலமான நம் தமிழ்நாடு மாநிலமும், மாநிலங்களிடையே மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

இது இம்மாநிலத்தின் கடுமையானப் பிரச்சினையாகும். சமூக ரீதியில் பார்த்தால் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு வாய்ப்பு வளத்தையும் நாம் மறுப்பது, கடுமையான விளைவுகளை ஏற்படுத்துவதோடு விரும்பத்தகாத வகையில் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எளிமையாக வழிகோலி விடும் வாய்ப்புகள் வழங்கும் இக்கொள்கை, கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்று நான் கருத்து தெரிவிக்க விழைகிறேன்.

மேலும், கூடுதல் வேலை வாய்ப்பு தொடர்பாக நாம் திட்டமிட்டுள்ள கொள்கையை நாம் எய்த இயலாமல் போனால், இந்நிலையைச் சீரமைக்க மீண்டும் நாம் இங்கு கூடிப் பேச வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் நான் கருதுகிறேன். கிராமப்புறத்தை விட நகர வறியோர்கள் சதவீதம் அதிகம்.

## வறுமை குறைப்பு

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மற்றொரு அடிப்படை கொள்கை, வறுமையை ஒட்டுமொத்தமாக

**சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, நகர்ப்புறப் பணிகள், துறைமுகங்கள் ஆகியவை அடங்கிய உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாட்டின் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் தனி முன்னுரிமை அளித்துள்ளோம்.**

குறைப்பதேயாகும். மாநிலத்தின் குறிப்பிடத்தக்க இலக்கான வறுமை குறைப்பு, நம்முடைய வரைவுத் திட்ட அறிக்கையிலேயே சேர்க்கப்பட்டுள்ளது என நான் அறிகிறேன். வறுமை சதவீதத்தை இந்த அளவிற்கு குறைப்பதற்கு நாம் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லாத இந்நிலையில், அடிப்படைத் துறைகளைப் பாதித்துக்கொண்டிருக்கும் நிலம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நம் தமிழகத்திற்கு இந்த வறுமை குறைப்பு பெரும் பிரச்சினைக்குரிய முயற்சியாக இருக்கும் என நான் இங்கு சுட்டிக்காட்ட விழைகிறேன். நம்முடைய திட்டவட்டமான இந்த வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு தன்னுடைய முழு ஆதரவை அளிக்க வேண்டும். ஊரகப் பகுதிகளிலுள்ள வறியவர்களின் சதவீதத்தைக் காட்டிலும், நகர்ப் பகுதிகளிலுள்ள வறியவர்களின் சதவீதம் மிக மிக அதிகமாகும்; எனவே, இதுகுறித்தும் நாம் இங்கு வலியுறுத்துவது அவசியமாகும்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் கூறின் ஒரு பகுதியாக, மாநிலத்தின் குறிப்பிடத்தக்க வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கென உலக வங்கி போன்ற வெளிநாட்டு முகவரமைப்புகள் மூலம் நிதியுதவி பெறுவது பேருதவியாக அமையும்.

வளர்ச்சி என்பது அவசியமான நிலைமையாக இருக்கும்போது, நமது மக்கள் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தை எய்துவது என உறுதியாக சொல்ல முடியாது. மனித மேம்பாடு, வறுமை ஒழிப்பு குறித்து உள்ள விரிவான விவரங்கள், குறைவான வளர்ச்சி வீதத்தைக் கொண்டு ஏழை மக்களுக்கு வாழ்க்கை எவ்வாறு செழுமையாக இருக்க முடியும் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன.

## மனித மேம்பாடு தமிழகம் 3ஆவது இடம்

தொன்று தொட்டு தமிழ்நாடு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மனித மேமபாடு குறியீட்டெண்ணில் 3ஆவது இடம் வகிக்கிறது. 1991இல் தொடங்கப்பட்ட தாராளமயமாக்கும் நடைமுறையில், கட்டுமான சரிக்கட்டல் நடைமுறையிலிருந்து ஏழை மக்களைப் பாதுகாக்க திறமையான சமூக பாதுகாப்பு வலையின் அவசியம் குறித்து நான் இந்த அமைப்பில் பேசியுள்ளேன். 1995 முதல் இது தேசிய சமூக நிதியுதவித் திட்டமாக உள்ளதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வி, சுகாதாரம், சத்துணவு சமூக நலன், வீட்டு வசதி, உடல்நலன் போன்ற சமூக அடிப்படை வசதியில் நான் மேம்பாட்டைக் காண்கிறேன். வாழ்க்கைத் தரத்தில் இது உண்மையான மேம்பாடு ஆகும். இதற்கு உயரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வீட்டு வசதி முதலீடு செய்வதால் அதிக வேலைவாய்ப்புகள் உருவாகும். வரி சீர்திருத்தம் காரணமாக நாம் வீட்டு வசதிக்கான ஊக்குவிப்பை விட்டு விடக்கூடாது. ஏனெனில், வீட்டு வசதியில் ஏற்படும் சேமிப்பு வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தும்.

வறுமை குறைப்பு, கல்வியிலும், ஊதியத்திலும் ஆண் பெண் அளவு இடைவெளியைக் குறைத்தல், மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தில் குறைப்பு, கல்வி அறிவு உயர்வு, சிசு மரணம் வீதம் குறைப்பு, மகப்பேறு மரணம் குறைப்பு ஆகியவை உட்பட சில குறிப்பிடத்தக்க குறியீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் விரும்பத்தக்கதும்,

பின்பற்றப்பட வேண்டியதுமாக இருப்பதால், இந்த உண்மையான பயன்களின் அடிப்படையில்தான் நல்ல நிருவாகம் மிக முக்கியமான அம்சமாக திகழ்கிறது.

இந்த 10ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், முன்பிருந்ததைவிட, மீதம் குறித்த ஆக்கபூர்வ அனுமானத்துடனும், மூலதன விகிதாச்சாரத்துடனும் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள இடைவெளி, நல்ல நிருவாகத்தின் மூலம் கிடைக்கக்கூடிய பயனால் நிரப்பப்பட முடியும்.

## நல்ல நிர்வாகத்திற்கு ஒருமித்த முயற்சி

நல்ல நிருவாகத்திற்கு என்ன தேவை என்பது பற்றியும் அதனைச் செயல்படுத்த உள்ள செயல் திட்டம் பற்றியும் நான் ஒருமனதாக முயற்சி எடுத்துள்ளேன்.

அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில் நான் இதுபற்றி திட்டவட்டமாகவும், தெளிவாகவும் விளக்கியுள்ளேன். திட்டங்களுக்காக நாம் செலவிடும் வழிமுறை அல்லது திட்டங்களுக்காக நாம் எவ்வளவு செலவு செய்யப் போகிறோம் என்பதைவிட திட்டங்கள் குறித்து நாம் எவ்வாறு செலவு செய்யப் போகிறோம் என்பது பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட உத்தி குறித்த என்னுடைய கருத்தாகும்.

இங்கு நல்ல நிருவாக நடவடிக்கைகள் முன்னிலை வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நல்ல நிருவாக முறையில் ஆக்கபூர்வமான மற்றும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நாங்கள் நம்புகிறோம். தடைகள் எவையேனும் இருந்தால் அவை அகற்றப்படும்.

மதிப்புக் கூட்டப்பட்ட மின்னியல் நிருவாக நடைமுறைகளை உருவாக்குவதில் தகவல்–தொழில்நுட்ப ஆற்றலைப் பயன்படுத்தி நாமும் வேகமாக முன்னேறி வருகிறோம்.

நான் இதுகுறித்து விரிவாக எடுத்துரைக்க நேரம் செலவிட விரும்பவில்லை. ஆனால், நல்ல நிருவாக நடைமுறைகளுக்கு உறுதி அளிப்பதில் தமிழ்நாடு முன்னேறி வருகிறது என்று மட்டுமே நான் கூறுவேன்.

கடைசியாக, வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து களைய வேண்டும் என்று நான் விழைகிறேன். மத்திய அரசின் திட்டங்களுக்கும், மாநிலத் திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்குவது சிக்கலான பிரச்சினையாகும்.

மத்திய அரசின் நிதியுதவி என்பது மாநிலங்களின் வசதிக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய காரணங்களுள் ஒன்றாகும். மத்திய நிதி அமைச்சர் இதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். மத்திய வருவாயும் வலுவானதாக இல்லை. இது பெரிதும் வருந்தத்தக்க ஒன்றாகும். பிரதமர் அவர்களே, இது சிக்கலான பிரச்சினையாகும். இதை உடனடியாக கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 8.6 சதவீதம் என்று குறைவாக உள்ள மத்திய வரி வருவாயை அடுத்த ஆண்டிலிருந்து 10 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்க வேண்டும்.

## மாநில நிதிப் பிரச்சினையை தாராள மனதுடன் கருத வேண்டும்

மாநிலங்களைப் பொறுத்த வரையில் அவற்றுக்குப் பெருமளவிலான நிதிப் பிரச்சினைகள் உள்ளன. 2002 அக்டோபரில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் பிரச்சினைகள் யாதொன்றுக்கும் தீர்வு காணப்படவில்லை. பிரதமர் அவர்களே! மாநிலங்கள் சந்தித்துள்ள கடுமையான நிதிப் பிரச்சினையை தாராள மனதுடனும் பரந்த மனப்பான்மையுடனும் கருதிப் பார்த்து மாநிலங்களுக்கு கடன் நிவாரணமும் கடனை மாற்றுவதற்கான உதவியும் அளிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத் திட்டக் கடன்கள் குறித்த வட்டி விகிதத்தை 4 சதவீதப் புள்ளிகளாவது குறைக்க வேண்டியது அவசியமாகும். இல்லையெனில், பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை, நோக்கம் எதுவும் இல்லாத உயர்ந்த எண்ணம் மட்டுமே உள்ள ஓர் அறிக்கையாக ஆகிவிடுகின்ற பேராபத்தை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சிறிது முயற்சி மேற்கொண்டால், மத்திய அரசும் மாநில அரசுகளும் நிதிச் சீர்திருத்தங்கள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாம் ஒருமித்த முடிவுக்கு வரலாம். நம்மை மேம்பாட்டுப் பாதை நோக்கி முன்னேறச் செய்யக் கடுமையான–

ஆனால் அவசியமான முடிவுகள் குறித்து 2002 அக்டோபரில் நடைபெற்ற கூட்டத்தில் நான் எடுத்துக் கூறினேன்.

நம்மைத் தடுமாறி ஓடச் செய்யும் ஒரே நோக்கத்துடன் நிதிச் சீர்திருத்தங்கள் பற்றி வினா எழுப்பி எதிர்க்கட்சிகளிடமிருந்து சலசலப்பு எழுந்துள்ளதையும் நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

பிரதமர் அவர்களே! நிதிச் சீர்திருத்தங்கள் குறித்த குறைந்தபட்ச திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும், அதை மத்திய அரசும், அனைத்து மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியின் அளவில் கடுமையான முரண்பாடுகள் உள்ளதை நான் காண்கிறேன்.

திறமையற்றவர்களுக்கும், அலட்சியமாக நடந்து கொள்பவர்களுக்கும் மத்திய அரசின் நிதியுதவி அதிக அளவு செல்கிறது.

அதிக அளவு நிதியுதவி அளிப்பது சிறந்த சாதனைக்கு உத்தரவாதமளிக்கும் என்ற தவறான கருத்திலிருந்து இது எழுந்துள்ளது. சாதனை படைப்பவர்களுக்கு மட்டுமே வெகுமதிகளும், ஊக்கத் தொகைகளும் வழங்கப்பட வேண்டும். இதுவே மெய்யான கருத்தாகும். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இது குறித்து ஆராயப்பட வேண்டும். இந்தக் கொள்கை உறுதியாகப் பின்பற்றப்படா விட்டால், நல்ல நிருவாகம் என்ற பேச்சு பொருளற்றதாகிவிடும்.

மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். மாநிலங்கள் ஒருபோதும் பின்தங்கிய நிலையில் இருக்கக் கூடாது.

**நிதியுதவிக் குறைப்பால் தமிழகம் பின்னோக்கும் வாய்ப்பு**

பதினோராம் மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலம், அதன் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவி குறைக்கப்பட்டதால் மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது. நன்றாகச் செயல்படுகின்ற ஒரு மாநிலத்தை, பின்னோக்கி இழுப்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

**இங்கு நல்ல நிருவாக நடவடிக்கைகள் முன்னிலை வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நல்ல நிருவாக முறையில் ஆக்கபூர்வமான மற்றும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நாங்கள் நம்புகிறோம். தடைகள் எவையேனும் இருந்தால் அவை அகற்றப்படும்.**

பதினோராம் மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளையடுத்து நிதிச் சீர்திருத்த வசதிகள் போதிய அளவுக்கு செய்யப்படாததை நான் ஏற்கெனவே கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

மாநிலங்கள் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்த இயலும் வகையில் செய்யப்படுவதற்கு கணிசமான அளவுக்கு நிதிச் சீர்திருத்த வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். அது, நிதிச் சீர்திருத்தங்களை முழுவதுமாக மேற்கொள் வதற்கு முன், மாநிலத்தின் நிதிநிலையை நிலைப்படுத்தத் தேவையான நிதியை வழங்கும்.

நிதிச்சீர்திருத்தங்கள் குறித்த குறைந்தபட்ச திட்டம் ஒன்றை உணமையில் செயல்படுத்தியுள்ள மாநிலங்களுக்கு, நடப்பு நிதியாண்டில் இத்தகைய வசதியை அளிக்கும்படி மத்திய நிதியமைச்சரை நான் கேட்டுக் கொள்ளலாமா?

இடைப்பட்ட காலத்தில் மாநிலங்களுக்குக் கட்டமைப்பு சரிக்கட்டல் வசதி மூலம் நிதியுதவி

வழங்கலாம். அதனால் நீண்ட காலத்தில், அதிக அளவில் சீர்திருத்தங்கள் ஏற்படலாம்.

மாநிலங்கள் எதிர்நோக்கியுள்ள சில கடுமையான இடர்ப்பாடுகள் குறித்தும் நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். 1.4.2003லிருந்து மதிப்பு கூட்டப்பட்ட வரிமுறைக்கு நாம் மாறுகிறபோது, பெருமளவிலான வருவாய் இழப்பை நாம் எதிர்நோக்க வேண்டிய இடர்ப்பாடு உள்ளது.

இதனை 3 ஆண்டுகால அளவில் 100 சதவீதம் ஈடு செய்ய வேண்டும். அவ்வாறே மத்திய விற்பனை வரியிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையில் ஏற்படும் குறைவு 100 சதவீதம் ஈடு செய்யும் நிரந்தரமான ஏற்பாடு ஒன்றின் மூலம் ஈடு செய்யப்பட வேண்டும்.

துணைக்குழுக்கள் கவனிக்க வேண்டிய 4 விரிவான பிரச்சினைத் தொகுப்புகளை பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினைகள் குறித்து ஒருமித்த முடிவு எடுக்க வேண்டிய அவசியம் குறித்து நான், என்னுடைய உரையில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இந்தத் துணைக்குழுக்கள் அமைப்பது பற்றிய செயற்குறிப்பை நான் வரவேற்கிறேன். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையில் கொண்டுவரப்பட்டுள்ள மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான சில பிரச்சினைகள் குறித்து நான் கவனம் செலுத்தியுள்ளேன்.

**மூலதனத்திற்குப் பதிலாக வளர்ச்சியின் முக்கியக் கருவியாக மனித ஆற்றலைப் பயன்படுத்தி வேகமாக வளரும் பொருளாதாரத்தில் புதிய இலக்குகளை அடைவதற்கு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் கோட்பாட்டினை நாம் வகுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.**

திட்ட அறிக்கை ஒன்று, உயர்ந்த எண்ணமும், குறைவான நடவடிக்கையும் உள்ள அறிக்கையாக மட்டுமே ஆகிவிட அனுமதிக்க இயலாது. இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதில் மக்கள், மத்திய அரசு மாநில அரசு ஆகிய மூவருக்குமே பொறுப்பு உள்ளது. மக்களும் இந்நடைமுறையில் பங்கேற்க வேண்டியுள்ளது. வளர்ச்சி மேம்பாட்டை எய்துவதற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

நாம் மிகவும் போட்டிபோடும் உலகச் சூழலில் இருப்பதால், இந்நிலை நீடிப்பதற்குக் கூட நாம் வெகு விரைவாகச் செயல்பட வேண்டிய..... நம்முடைய பொருளாதார நிலை பற்றி நாம் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது.

## பொருளாதாரப் புரட்சிக் கோட்பாடு

ஆசியாவில் இந்தியா மேலும் ஒரு ஏழை நாடாக இருக்க இயலாது. இந்தியாவில் மனிதவள ஆற்றலைப் பொறுத்தவரையில் உயர் பொருளாதார சக்தி வாய்ந்த நாடாக உருவாவதற்கு வாய்ப்பு உள்ளது.

மூலதனத்திற்குப் பதிலாக வளர்ச்சியின் முக்கிய கருவியாக மனித ஆற்றலைப் பயன்படுத்தி வேகமாக வளரும் பொருளாதாரத்தில் புதிய இலக்குகளை அடைவதற்கு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் கோட்பாட்டினை நாம் வகுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இவ்வாறு செய்வதற்கு, அறிவார்ந்த பொருளாதாரத்தை நாம் விரைவில் அடைய வேண்டும். இதுதான் நம்முடைய புதிய தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவ்வளர்ச்சியை அடைய இயலும் வகையில் நாம் ஒருங்கிணைந்து கூட்டாக செயல்பட வேண்டும்.

*– புதுடெல்லியில் 21.12.2002 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*

# புல்லாங்குழல்களே பாடுங்கள்!



புல்லாங் குழல்களே! புல்லாங் குழல்களே!
பூபாள ராகம் பாடுங்கள்! – எங்கள்
புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சிக்குப்
பொங்கல்நல் வாழ்த்துக் கூறுங்கள்!

எல்லா நலங்களும் எல்லா வளங்களும்
எல்லார்க்கும் வந்து சேரட்டும் – தினம்
ஏழ்மைத் துயர்தனில் ஆழ்ந்து கிடப்பவர்
இன்னல்கள் யாவும் தீரட்டும்!

கானக் குயில்களே! கானக் குயில்களே!
காவியம் நீங்களும் பாடுங்கள்! – சுவைக்
கன்னல் நிகர்த்தஎம் அன்னை பெயர்சொல்லிக்
கலாப மயில்களே ஆடுங்கள்!!

வானம் அளந்திடும் வையம் முழுவதும்
வாழ்கென்று மேகம் முழங்கட்டும்! – அது
மாதம் மும்மாரி மாறாமல் பெய்து
வளம்பல வாரி வழங்கட்டும்!!

நீலக் கடல்களே! நீலக் கடல்களே!
நீங்களும் கைகொட்டி ஆடுங்கள்! – மாந்த
நேயம் மிகுந்தஎம் தூய தலைவிக்கு
நித்தமும் வாழ்த்துப் பாடுங்கள்!



பாலை வனங்களைச் சோலை வனங்களாய்
மாற்றிடும் திட்டத்தைப் போற்றுங்கள்! – இந்தப்
பாரில் உயர்ந்தது செந்தமிழ் நாடென
ஆக்கிடும் சேதியைச் சாற்றுங்கள்!

பொங்கல் பிறந்தது ! பொங்கல் பிறந்தது
நாட்டின ரேஒன்று சேருங்கள் ! – நம்
புரட்சித் தலைவியின் திட்டங்கள் வென்றிட
ஆதர வாய் இங்கு வாருங்கள்!

கங்கை வழிந்திடல் போலநம் நாடெலாம்
பொங்கி வழியட்டும் இன்பங்கள்! –இங்கு
காணும் பலப்பல பேதம் ஒழியட்டும்
முற்றும் தொலையட்டும் துன்பங்கள்!

புலவர் **புலமைப்பித்தன்**

# தாய்க்கு நன்றி கூறும் தலை சிறந்த திருநாள்

மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர்
டாக்டர் **கா. காளிமுத்து**

**தை**த் திருநாள், தமிழர்களின் திருநாள்!

தரணியிலுள்ள அனைவருக்குமே உரிய தலைசிறந்த பொன்னாள் இந்தப் பொங்கல் திருநாள்!

அகிலத்தில் ஆண்டுதோறும் வருகின்ற திருநாட்களுக்கு அளவே இல்லை.

மற்றத் திருநாட்களையெல்லாம் மனிதர்கள்தான் நாட்காட்டியில் குறித்துக் கொள்கிறார்கள். ஆனால், இந்தத் திருநாளோ இயற்கையே அமைத்துக் கொடுக்கிற இனிய திருநாளாகும்.

உலகெங்குமுள்ள ஒரு சாரார், இந்தியாவில் இருக்கின்ற ஒரு சாரார், சில பகுதிகளில் மட்டுமே வாழ்கின்ற ஒரு சாரார், வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட வெவ்வேறு வகையினர் என்று பல்வேறு மக்கள் கொண்டாடுகிற பல்வேறு திருநாட்கள் ஒவ்வோராண்டும் வருகின்றன.

மனிதர்கள் தாங்கள் வகுத்துக் கொண்ட கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகிய உணர்வுகளின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் இத்தகைய திருநாட்களைக் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

ஆனால், இவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தலைசிறந்த திருநாளாகத் தைத் திருநாள் திகழ்வதற்குக் காரணம் இதனை எல்லாருமே கொண்டாடுகிறார்கள் என்பது தான்.

இந்தத் திருநாள் ஒன்றுதான் இயற்கைத் தாயை வழிபடுகிற இன்பத் திருநாளாகும்.

தமிழகத்தில் பொங்கல் திருநாள், கேரளத்தில் ஓணம் பண்டிகை, வடக்கே பஞ்சாப், கல்கத்தா, ஒரிசா போன்ற பகுதிகளில் பைசாகி என்று அறுவடைத் திருநாளை அனைவருமே கொண்டாடு கிறார்கள்.

இந்தியாவில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலுமே இந்தத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இது, அறுவடைத் திருநாள்!

பூத்துக் குலுங்கும் இயற்கையன்னை, காத்துக் கிடக்கின்ற கணக்கிலா உயிரினங்களுக்கு நெல்லையும், கோதுமையையும், தானியங்களையும், கரும்பையும், மஞ்சளையும் புதிதாய் வழங்குகின்ற புனிதப் பொன்னாள் இந்தப் பொங்கல் திருநாள். இவற்றை அறுவடை செய்து அகம் மகிழ்வது தமிழர் மட்டுமல்ல, தரணியிலுள்ள அனைவருமே தான்.

இது, நன்றி நவிலும் நன்னாள்!

வயிற்றுப் பசிக்கும், வாழ்க்கை வசதிக்கும் வாரி வழங்குகின்ற இயற்கைத் தாய்க்கு இதயம் பொங்க நன்றி கூறும் நல்லதோர் திருநாள் தான் இந்த நன்னாள்!

இயற்கை தந்த பச்சரிசியைப் புதுப்பானையில் பொங்கல் வைத்து கரும்பு, மஞ்சள், இஞ்சியோடு இயற்கைத் தாய்க்குப் படைத்து இதயம் பொங்கும் நன்றியை இனிப்பாக இயம்புவது இனிய தமிழர்களின் இணையிலாப் பண்பாகும்.





இது, உழவர் பெருநாள்!

உலகத்தோரெல்லாம் உண்ணவும், உடுத்தவும் உழுது பயிரிட்டு உழைத்து, வியர்வை சிந்தி விளைத்துத் தருகிற விவசாயிகள் தங்களின் உழைப்பைக் கொண்டாடுகிற உன்னதத் திருநாள். தங்களின் உழைப்பிற்கு உறுதுணை புரிந்த மாடுகளைக் கூடப் பெருமைப்படுத்தும் மாண்புமிக்க மனிதன் தமிழன் மட்டுந்தான்.

மஞ்சுவிரட்டு என்றும், ஏறு தழுவுதல் என்றும் இலக்கியம் காட்டும் இன்பத் தமிழனின் வீர விளையாட்டுகள் கூட இந்தப் பொங்கல் திருநாளில் இன்றும் தொடர்கின்றன.


நண்பர்களையும், உறவினர்களையும், பெரியவர் களையும் வாழ்த்தி வணங்குகிற நல்லதோர் பண்பை நமக்குள் வளர்க்கிற பண்டைத் திருநாள் தான் இந்தத் தைத்திருநாள்.



இயற்கையோடு இயைந்த
இனிய வாழ்வுக்கு
இலக்கணம் வகுத்திட்ட
இன்பத் தமிழனின் இந்தப்
பொங்கல் திருநாள்
இயற்கைத் தாய்க்கு நன்றி
கூறி வழிபடுகிற எழிலான
பொன்னாள்!

ஆம், இந்தத் 'தாய்'க்கு
நன்றி கூறும் தங்கத்
தமிழர்கள் வாழ்வாங்கு
வாழ்ந்திடவும், வளமோடு
திகழ்ந்திடவும் இதயம்
பொங்க வாழ்த்தி
மகிழ்கிறேன். ★






# கல்விக்காக சிறப்பான பங்களிப்பை நல்கிய பெண்களுக்கு விருது

**மாண்புமிகு முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பு**


அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகத்தின் 12வது பட்டமளிப்பு விழாவில் 2.12.2002 அன்று கலந்து கொண்டு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு உரை :

### சிறப்புமிக்க பல்கலைக்கழகம்

அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகத்தின் 12வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதும், என் முன்பாக கூடியுள்ள தனிச் சிறப்பு மிக்கவர்கள் மத்தியில், பட்டமளிப்பு உரை நிகழ்த்துவதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. பெண்கள் சம்பந்தப்பட்ட உயர் கல்வி தேடலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிறப்புமிக்க பல்கலைக்கழகம், மிகப் பொருத்தமாக, நம் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த சிறந்த மனிதாபிமானியும், நோபல் பரிசு பெற்றவருமான அன்னை தெரசா என்கிற பெருமைக்குரியவரின் பெயரில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது.

### தொலைநோக்குப் பார்வையின் விளைவு

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் விளைவுதான், இந்த மதிப்புமிகு பல்கலைக்கழகம் தோன்றி நிலை பெற்றிருப்பதற்குக் காரணம். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1977–1987ல் இருந்தபோதுதான், தமிழ்நாட்டு பெண்களின் முன்னேற்றத்திற்கும், அதிகாரம் பெற்ற பொறுப்புகளில் அமரவுமான பல்கலைக்கழகமாக இதனை உருவாக்கினார். அந்த சமயத்தில் பாரதியின் நூற்றாண்டு விழா 1981–82ல் கொண்டாடப்பட்ட நேரம். அதே நேரத்தில்தான் டாக்டர் எம்.ஜி.ஆர்.அவர்களுக்கு தமிழ்நாட்டில் பெண்களுக்கெனத் தனித்த பெண்கள் பல்கலைக் கழகத்தை துவக்கும் எண்ணம் மனதில் வித்தூன்றியது. 1984ஆம் ஆண்டில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்னை தெரசாவுடன் கொடைக்கானலுக்கு சென்றார். சென்ற இடத்திலேயே இந்த சிறந்த பல்கலைக்கழகத்தை அமைப்பதாக அறிவிப்பு செய்தார்.




## உலகில் இதற்கு இணை இல்லை

கல்வியின் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தலும் மற்றும் முற்றிலும் பெண்களின் மேம்பாட்டிற்காகவே, இப்பல்கலைக்கழகம் இருக்க வேண்டும் என்றும், உலகில் இதற்கு இணையான தொரு பல்கலைக் கழகம் இல்லை எனச் சொல்லும் அளவிலும் இது ஒரு சிறப்பு மிக்க தனித்த பல்கலைக் கழகமாக விளங்கும் என அவர் அன்று தனது மனக்கண்ணில் கண்டார்.

அவரின் அந்த தீர்க்க தரிசனம் இன்று தமிழ் நாட்டில் பெண்களின் தகுதியை மேம்படுத்தும் ஒரு பல்கலைக்கழகமாக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இந்தப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது.

## சிறந்த அடையாளம்

இந்த பல்கலைக்கழகம், சமுதாயத்தின் பல நிலைகளையும் சார்ந்த பெண்களுக்கு அதிகாரத்தை தேடிக் கொடுக்கிறது. இது புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுத்திறனுக்கும், உயர்ந்த நோக்கத்திற்கும் கிடைத்த வெற்றி மட்டும் அல்ல; இது அவரது ஆழ்ந்த அக்கறைக்கும், சமூகத்தின் நலிந்த பிரிவினர் மீது அவருக்குள்ள பரிவுக்கும், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மீது அவருக்குள்ள பரிவுக்கும், இப்பல்கலைக்கழகம் ஒரு சிறந்த அடையாளமாக விளங்குகிறது.

மகாகவி பாரதி கண்ட கனவான 'சரிநிகர் சமானம்' என்பதின் உண்மை வடிவமாக அன்னை தெரசாவின் பெண்கள் பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது. ஆண்களுக்கு சமமாக பெண்களின் நிலையை உயர்த்தும் மகாகவியின் எதிர் பார்ப்பையும், அவரது தொண்டின் ஆர்வத்தை உள்ளடக்கியதாகவும் இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது.

இந்தியா ஓர் இந்திய தேசியமாகப் பிறப்பெடுத்து வாலிபவயதைத்தான் அடைந்திருக்கிறது. ஆனால் நாகரிகம், பண்பாட்டு அடிப்படையில் நாம் பல நூற்றாண்டுகளின் பாரம்பரியத்தை பெற்றிருக்கிறோம்.

இந்தியாவில் பெண்களின் தகுதியும், நிலையும் தளர்வு உடையதாகவே உள்ளது. பாரம்பரியத்திற்கும், புதுமைக்கும் இடையில் சிக்கி அவர்கள்

தத்தளிக்கிறார்கள். மாற்றத்தை கொண்டு வருவதில், பெண்களுக்கு ஓர் உயரிய மேலான பங்கு உள்ளதாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் பல பெண்கள் இருப்பதைக் காண முடிகிறது.

## முடங்கி கிடக்கும் பெண்கள்

பெண்கள் அரசியலில், நிர்வாகத்தில், காவல் பணியில், அதேபோன்று பெருமளவிலான, பாரம்பரியம் சாராத பணிகளிலும் அவர்கள் பணி புரிகிறார்கள். பெண்கள் கல்வியைத் தேடிச் சென்று கற்கிறார்கள். இப்படித் தேடிச் சென்று கற்கும் எண்ணிக்கை நாள் தோறும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இருந்தபோதிலும், இந்தியாவின் பெருவாரியான கிராமங்களில் வசிக்கும் பெண்கள், வறுமையில் வாழ்கின்றனர். ஆதார ஆரம்பக் கல்வி இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றனர். நேரான வழியில் ஒரு தரமான கல்வி கிடைக்காததால் இந்திய பெண்கள் தொடர்ந்து அடிமைகளாகவே இருந்து வருகிறார்கள்.

நமக்கெல்லாம் நன்கு தெரியும்; அதாவது, இந்திய அரசியலமைப்பு சட்டம், அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமைக்கு உத்திரவாதம் வழங்கியுள்ளது என்று. ஆனால் இப்பொழுதுகூட பல வீடுகளில் பெண்களுக்கென எந்தவொரு தேர்ந்தெடுக்கும் உரிமையோ, முடிவெடுக்கும் உரிமையோ இல்லை. சோர்வு அடையச் செய்யும் வீட்டு வேலைகளின் மோசமான பிடியில் அவர்கள் சிக்கி உள்ளனர். வீட்டில் உள்ள சின்னஞ்சிறு சிறுமியின் கல்விகூட மறுக்கப்பட்டு, அவளுடைய வீட்டில் இதர குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள, அவள் கட்டாயப்படுத்தப்படுகிறாள். சமூகத்தின் இப்படிப்பட்ட எளிய உரிமை மறுக்கப்பட்ட சிறுமிகளின் நிலைமை குறித்து எனது அரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது.

பொருளாதார முன்னேற்றத்திலும், கல்வியிலும் பெருமளவில் பெண்கள் பயன்படுத்திக் கொள்வதற்கும் முன்னேற்றத்துக்கும் நான் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தை அறிவிப்பு செய்தேன். இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு ஒரு பெருந்தொகை ஒதுக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. அவர்கள் 20 வயதை அடையும்போது இத்தொகை அவர்களுக்கு கிடைக்கிறது. பள்ளிக்கூடத்தில் அதிக எண்ணிக்கையில் பெண்களை சேர்க்கவும், தங்களுடைய படிப்பை மேலும் தொடர்ந்து படிக்கவும், தங்களுடைய முழு ஆற்றலை உணர்ந்து கொள்ளவும், எனது அரசால் முழு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

## 5 இலட்சம் பெண்களுக்கு மாபெரும் திட்டம்

பல்வேறு திட்டங்கள், செயல்பாடுகள் மூலம் பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குவதை மேலும் ஊக்குவிக்க, எனது அரசு உறுதி பூண்டுள்ளது. 5 இலட்சம் கிராமப்புறப் பெண்களுக்கு தொழில் முனைவோருக்கான பயிற்சியை வழங்கும் ஒரு மாபெரும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இதுவரை பாதி வழி சென்றுள்ளது. பொருளாதார ரீதியிலும், நிதி வருவாயிலும் பெண்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்கும் நிலையிலிருந்து விடுதலை பெறும் வகையில் எனது அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், இலவச மதிய உணவுத் திட்டத்தை தொடர்வதிலும், பிளஸ் 1 மற்றும் பிளஸ்2 படிக்கும் கிராமப்புற ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மாணவிகளுக்கு இலவச மிதிவண்டியை வழங்குவதிலும் தொடர்ந்து செயல்பட அரசு உறுதி பூண்டுள்ளது.

இலவசக் கல்வி கற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவிகள் தொடர்ந்து இலவசமாகவே, கல்லூரிகளில் பட்டமேற்படிப்பு வரை படிக்க வகை செய்யும் உத்தரவை அரசு வழங்கியுள்ளது.

## 970 பெண்களுக்கு தனிச் சிறப்பு

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு இன்று 970 பெண்கள் இந்த தனிச் சிறப்புப் பெற்ற பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று செல்கின்றனர். பெண்களுக்கான திட்டங்கள் நல்ல பலனை கொடுத்துள்ளதை நேரில் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது அரசு அறிமுகப்படுத்திய சிலவகை திட்டத்தின் பயனாளிகளாக இவர்கள் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

நலத் திட்டங்களின் பலன்களைப் பெறுபவர் களாக பெண்களைப் பார்ப்பதிலிருந்து மாற்றி; உற்பத்தியாளர்களாக குடும்பத்திற்கு பெரும் பங்களிப்பவராக, மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெரும்

பங்களிப்பவராக, சமுதாய புனரமைப்பிற்கான முகவர்களாக, அவர்களை அடையாளம் கண்டு ஏற்கக் கூடியதாக நிலை உருவாக வேண்டும்.

யுனெஸ்கோவின் 1995ஆம் ஆண்டின் அறிக்கையின் படி, பெண்களும், சிறுமிகளும்தான் "இன்றைய உலகில் கல்வி வாய்ப்பில் சம உரிமை மறுக்கப்பட்ட ஒரு பெரிய தனித்த வகையினராக" இருக்கிறார்கள் என அறிய முடிகிறது. எழுத்தறிவு சதவீதத்தைப் பொறுத்த வரையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஒருபெருத்த இடைவெளி இருப்பதை பார்க்கும் போது வருத்தத்தை அளிக்கிறது.




2001ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை உயர்ந்த அளவில் உள்ளது. அதாவது, 73.47 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. ஆனால் அகில இந்திய அளவிலான எழுத்தறிவு வளர்ச்சி 65.38 சதவீதம்தான். ஆண், பெண் இடையிலான எழுத்தறிவு வேறுபாடு இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

எனவே, பெண் கல்விக்கு அதி முக்கியத்துவ முன் உரிமை அளிக்க வேண்டும். இதன் மூலம் பெண்களின் நிலையில் ஒரு முன்னேற்றத்தை கொண்டு வரமுடியும்.



இந்தியாவின் சிறந்த மகானாகிய சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:

"பெண்களுக்கு மரியாதை கொடுப்பதன் மூலம்தான் எல்லா நாடுகளும் பெருமையை பெறுகின்றன. எந்த நாடு, எந்த தேசம் பெண்களுக்கு மரியாதையைத் தரவில்லையோ, அது ஒருபோதும் உயர்ந்த நிலையை அடையாது. எதிர்காலத்திலும் அது உயர்ந்த நிலைக்கு வராது" என்கிறார். இதை நான் உறுதியாக நம்புகிறேன்.

1951ல் ஆண், பெண் இடையிலான எழுத்தறிவு இடைவெளி 21.67 சதவீதமாக இருந்தது. இந்த பெரிய நீண்ட இடைவெளி 2001ல் 17.78 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை, அரசும், கல்வி நிலையங்களும் ஆற்ற வேண்டிய கனமான பொறுப்பைச் சுட்டிக்காட்டுகிறது. வயதான பெண்கள் மற்றும் படிக்கும் வயது பெண்கள் இடையே எழுத்தறிவு கொண்டு வரப்பட வேண்டிய பொறுப்பையும் இவை உணர்த்துகின்றன.

## கல்வி கற்பிப்பதில் முதலிடம் பெண்கள்

மனித இனத்தின் முதல் கல்வி கற்பிப்பவராக பெண்களே இருந்திருக்கிறார்கள். ஆனால்

### வயதான பெண்ணுக்கும் கல்வி

இதனை எனது அரசு நன்கு புரிந்து கொண்டு, தமிழகத்தின் ஒவ்வொரு வயதான பெண்ணுக்கும், படிக்கும் வயது பெண்ணுக்கும் கல்வியை கொடுக்கும் உறுதியை எனது அரசு ஏற்றுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் பொதுக் கல்வி பெற்ற பெண்களின் சதவீதம் உயர்ந்துள்ள போதிலும், 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள், உயர் கல்வியின் வாயிற்படியை அவர்கள் மிதிக்கவில்லை.

அதிகார உயர்மட்டத்தின் உயர்ந்த பதவிகளில் பெண்கள் இன்னும் அமரவில்லை. கொள்கை முடிவு எடுக்கும் நிலையிலும் அவர்கள் பதவி வகிக்கவில்லை. நமது நாட்டின் அரசியல் களத்திலும் நிர்வாக, கல்வித்துறை மட்டத்திலும், கொள்கை முடிவு எடுத்து அதனை நிறைவேற்றும் பதவியில் யாரும் இல்லை. இதற்கு ஒரு சிலர் விதிவிலக்காக இருக்கலாம்.

### நீடிக்கக் கூடாது

உயர் கல்வி கற்பது என்பது தற்போது, பணம் படைத்த ஒரு சிலரின் உரிமைகளாக மட்டுமே உள்ளது. இது இனி நீடிக்கக்கூடாது. ஆண்கள், பெண்கள் யாரெல்லாம் உயர் கல்வி பெற விரும்புகின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் இது ஒரு அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும் என்பதே எனது தீர்க்கமான முடிவாகும். இதில் சாதி, இனம், சமூகம் பொருளாதார நிலை எதுவும் குறிக்கிடக்கூடாது.

இந்த சூழ்நிலை அடிப்படையில்தான் பெண்களுக்கான பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய பங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

உயர்மட்டக் குழுவாக, இந்த பல்கலைக்கழகம் இருந்து கொண்டு, எல்லா மட்டத்திலும் பெண்கள் கல்வி பெறுவதை இது கண்காணிக்க வேண்டும். மேலும், இந்த உயர்மட்டக்குழு நிலையில், எந்த உரிமையும் இல்லாத நிலையில் இருக்கும் பெண்கள், பள்ளிக்கு வெளியே பரந்து வசிக்கும் பெண்கள் ஆகிய இவர்கள் பயனடையும் வகையில், கல்வி கொள்கையை வகுக்க உதவி செய்வதிலும் ஒரு முடிவு எடுக்கலாம்.

எல்லா மட்டத்திலும் உள்ள பெண்கள் கல்வியின் நற்பயன்களை பயன்படுத்துவதில், அவர்கள் ஈடுபடுத்தி அதனை கண்காணிக்கும் பணியில் அன்னை தெரசா பல்கலைக்கழகம் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

### பெண்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி

தனது 3 செயல்பாடுகளான, கற்பித்தல், ஆராய்ச்சியில் ஈடுபடுதல், விரிவாக்க சேவைகள் ஆகியவற்றின் மூலம் பெண்களைக் கல்வியில் ஈடுபடுத்துவதுடன் கூட, அதற்கும் பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழங்கி வருவதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்னை தெரசா பெண்கள் பல்கலைக்கழகம் தனது அஞ்சல் வழிக் கல்வித் திட்டத்தின் மூலம், நாட்டின் மூலை முடுக்கிலுள்ள அனைத்து பெண்களையும் சென்றடையும் நோக்கில் செயல்படுவதை நான் அறிவேன்.

இதனால், உயர்கல்வி கற்கும் வாய்ப்பை அவர்களுக்கு அது ஏற்படுத்தி தருகிறது. உண்மையிலேயே இது ஓர் உயர்ந்த பாராட்டப்படக் கூடிய பணியாகும்.

இந்தப் பல்கலைக்கழகம் 19 துறைகளில் ஆண்டுக்கு 500 பட்டதாரிகளையும், பட்ட மேற்படிப்பாளிகளையும் உருவாக்குவதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

### சர்வதேச அளவில் வெற்றி

இந்தப் பல்கலைக்கழகமானது பல துறைகளில் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் குறிப்பிடத் தகுந்த வெற்றியைப் பெற்றிருப்பது கண்டு பூரிப்படைகிறேன்.

இந்த பல்கலைக்கழகத்தில் பயின்ற இருவர் தமிழ்நாட்டிலுள்ள பிற பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களாக ஆகியிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

உலக மயமாக்கலின் கீழ் உலகம் முழுவதிலும் ஏற்படும் வளர்ச்சியையும் முன்னேற்றங்களையும் அறியமுடிகிறது.



கல்வி என்பது மனித வாழ்க்கையோடு ஒன்றிணைந்த ஒரு பகுதியாக மிக வேகமாக மாறி வருகிறது. ஆனால் இந்தியாவில் மனித வளத்தில் 50 சதவிதமாக இருக்கக்கூடிய பெண்களை இன்னமும் கல்வியறிவற்றவர்களாக வைத்திருக்கிறோம்.

தகவல் தொழில்நுட்ப யுகம் இது. இண்டர்நெட் வளர்ச்சி பெற்றுள்ள இந்த காலகட்டத்தில் அவற்றை எதிர்கொள்ளத்தக்க அளவுக்கு நமது பெண்களைத் தயார்படுத்த வேண்டும்.

## தொழில்நுட்ப அறிவை தர வேண்டும்

21ஆம் நூற்றாண்டின் சவால்களை சந்திக்கக் கூடிய அளவுக்கு நவீன மற்றும் தொழில்நுட்ப அறிவைத் தரவேண்டும்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தடைகளைக் கடந்து அந்த அளவுக்கு பெண் பட்டதாரிகளை உயர்தரத்துடன் உருவாக்க வேண்டும்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் போதிக்கப்படும் பாடங்கள் பற்றிய விவரங்களை அறிந்து பெருமைப்படுகிறேன்.

சாதாரண மூலிகை விஞ்ஞானம் முதற்கொண்டு நட்சத்திர அந்தஸ்து பெற்ற கல்வியான வானவெளி இயற்பியல், தகவல் தொடர்பு, கணினி, உயிரி தகவல் தொழில்நுட்பம், வர்த்தகக் கல்வியான எம்.பி.ஏ., உணவு மற்றும் சத்துணவு போன்ற மிக முக்கியமான துறைகளில்,கல்வி அளிக்கப்படுகிறது.

வலிமை மிக்க நாட்டை உருவாக்குவதில் பங்கு கொள்ளும் அளவுக்கும், கொள்கைகளை உருவாக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் அதிகமான பெண்களை இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கும் என நம்புகிறேன்.

## சமநீதி வழங்க உறுதி

எனது அரசானது அனைத்துத் துறையினருக்கும் சமநீதி வழங்க உறுதி பூண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 188 போலீஸ் கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. தீயணைப்புத்துறை, இந்து அறநிலையத்துறையிலும் பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தலைமைப் பதவியையும் வக்பு வாரிய தலைமைப் பதவியையும் இஸ்லாமிய சகோதரிகளுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. இன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளராக ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டுள்ளார். இவையெல்லாம் புதிய பாதை வகுக்கும் நடவடிக்கைகளாகும்.

## இமாலய இலக்கு

மேலும் ஆண்–பெண் பிரச்சினை சம்பந்தப்பட்ட அம்சங்களில் காவல்துறைக்கு போதிய நடைமுறை விழிப்புணர்வு அறிவை கொடுக்கும் இமாலய இலக்கை எட்டும் முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்ணிய உரிமைகள் சம்பந்தப்பட்ட விழிப்புணர்வுத் திட்டத்தை, பிற மாநிலங்கள் மட்டுமல்ல, பிற நாடுகளும் வரவேற்றுள்ளன.இதில் இந்த பல்கலைக்கழகத்திற்கும் முக்கிய பங்கு உண்டு.

அன்னை தெரசா பல்கலைக்கழகம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரை இனம் கண்டு அந்தப் பிரிவினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சமத்துவ சமூகம் அமைய பாடுபடவேண்டும்.

தமிழக அரசுடன் இணைந்து தமிழகத்தில் உள்ள பெண்களின் நிலை உயரப் பாடுபட வேண்டும். உங்களுடைய ஆராய்ச்சி முயற்சிகள் சமுதாய விழிப்புணர்வுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

அதோடு உங்களுடைய கண்டுபிடிப்புகள் பெண்கள் முன்னேற்றத்துக்கான கொள்கைகளை வகுக்க அரசுக்கு உதவி புரியும் வகையில் அமைய வேண்டும்.

பெண்கள் தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் கண்காணிப்பதாக இந்தப் பல்கலைக்கழகம் விளங்க வேண்டும். குறிப்பாக அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு கல்வி அளிக்க உதவ வேண்டும்.

## பெண்களுக்கு விருது

கல்விக்காக சிறப்பான பங்களிப்பை நல்கிய பெண்களைக் கண்டுபிடித்து விருது வழங்கப்படும். பொதுவாக சமுதாயத்துக்கும் குறிப்பாக பெண்களுக்கும் சேவை செய்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தப் பல்கலைக்கழகம் சர்வதேச தரம் மிக்கதாக அமைய வேண்டும் என்றும் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள பிற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பெண் கல்விக்கான ஆய்வில் ஈடுபடவேண்டும் என்றும் விரும்பினார்.

கிராமப்புறப் பெண்களின் நன்மைக்காக இந்தப் பல்கலைக்கழகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தரம்மிக்க கல்வியைத் தருவதோடு ஆராய்ச்சித் துறையிலும் முன்நிற்க வேண்டும் என அவர் கனவு கண்டார்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்ட கனவை நனவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

## தாராளமாக நிலம்

அதன் அடிப்படையில் இந்தப் பல்கலைக் கழகத்துக்கு தாராளமாக நிலம் ஒதுக்கினேன்.

அமெரிக்காவிலுள்ள ஃபோர்டு பவுண்டேசன் போன்ற அமைப்புகளின் நிதி உதவியுடன் சிறந்த பல்கலைக்கழகமாக உருவாக உள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் எனக்கு தனி அக்கறை உண்டு. சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்ற பல்கலைக்கழகமாக மாறத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

இங்கு பட்டம் பெறும் நீங்கள் எல்லாருமே உங்கள் தாய்நாட்டுக்கும் நீங்கள் சார்ந்துள்ள சமுதாயத்துக்கும் பயனுள்ளவர்களாக இருப்பீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தொண்டு செய்யுங்கள்.

அன்னை தெரசா சொன்னதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

"எந்த அளவுக்கு செய்தோம் என்பதல்ல, நாம் செய்தவற்றில் எந்த அளவுக்கு அன்பையும் கலந்தோம், எவ்வளவு கொடுத்தோம் என்பதல்ல; நாம் கொடுப்பவற்றில் எந்த அளவுக்கு அன்பையும் கலந்தோம் என்பதே முக்கியம்'' என்றார் அன்னை தெரசா.

## சகோதரிகளுக்கு செலவிடுங்கள்

உங்களது அறிவையும், திறமையையும், சக்தியையும் பரந்து விரிந்த இந்த மாநிலத்தில் உள்ள உங்களைச் சார்ந்தவர்களை குறிப்பாக உங்களை விடவும் குறைந்த வாய்ப்புள்ள சகோதரிகளுக்காக செலவிடுங்கள்.

பிரகாசமான எதிர்காலம் அமையவும், அனைத்துத் துறைகளிலும் வெற்றிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் குடும்ப விளக்கில் குறிப்பிட்டுள்ள சில கவிதை வரிகளை சுட்டிக்காட்டி என் உரையை முடிக்கிறேன்.

"பெண்கட்குக் கல்வி வேண்டும்,
குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்,
மக்களைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்,
உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்,
கல்வியைப் பேணுதற்கே!

என்று கூறி, உங்கள் கல்விப் பணி சிறக்க, உளமாற வாழ்த்துகிறேன்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்ற அழைத்தமைக்காக ஆளுநர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

பெரம்பலூர் மாவட்டத்தில்

# உடல் ஊனமுற்றோர்களுக்கான சிறப்பு மறுவாழ்வுத் திட்டங்கள்

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உடல் ஊனமுற்றோர்களுக்கான மறுவாழ்வுத் திட்டப்பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் 10,165 நபர்கள் உடல் ஊனமுற்றோர்களாக கணக்கிடப் பட்டுள்ளது. இவர்களின் மறுவாழ்விற்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் மறுவாழ்வு உதவிகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பு முயற்சியில் இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டோர்களுக்கு இலவச அறுவை சிகிச்சை, மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பாதுகாவலர் சான்றிதழ் வழங்குதல், கண் பார்வையற்றவர்களுக்கு மாற்று கண் பொருத்துதல், ஊனமுற்றோர் களுக்கான விளையாட்டுப்போட்டிகள், ஊனமுற்றோர்களுக்கான ஓவியப் போட்டிகள் ஆகிய பணிகள் ஊனமுற்றோர் மறுவாழ்விற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.




இம்மாவட்டத்தில் இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டு அவர்களில் விருப்பம் உள்ள 27 நபர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதே போல் மனவளர்ச்சி குன்றியவர் களுக்கு அரசு வழங்கும் நல உதவிகளைப் பெற்று வழங்கிட நிரந்தரப் பாதுகாவலர் சான்றிதழ் வழங்கும் திட்டத்தில் 262 நபர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மனவளர்ச்சி குறைந்தவர்களின் நிரந்தரப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

முற்றிலும் கண்பார்வையற்றவர்களுக்கு மாற்றுக்கண் அறுவைச் சிகிச்சை இதுவரை 8 நபர்களுக்கு தனியார் கண் மருத்துவமனைகள் மூலம் கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கண்தானம் செய்பவர்களை ஊக்கப்படுத்திட அவர்கள் இறந்த பிறகு மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்று கண் எடுக்கப்படுவதற்குப் பதிலாக அவர்கள் இறந்த இடத்திலேயே கண்களை எடுத்திட இம்மாவட்ட மருத்துவர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர் களை ஊக்கப்படுத்திட பெரம்பலூர் மற்றும் அரியலூரில் ஊனமுற்றோர் களுக்கான சிறப்பு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 360 நபர்கள் கலந்து கொண்டு மூன்று சக்கர சைக்கிள் ஓட்டும் போட்டி, ஓட்டப் பந்தயம், குண்டு எறிதல், தட்டு எறிதல் போன்ற போட்டி களில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

உடல் ஊனமுற்றோர்களுக் காக அரியலூரில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் 167 நபர்கள் கலந்து கொண்டு தங்களின் ஓவியத் திறமையை வெளிக் காட்டினார்கள். இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டம் அம்மா பாளையம் கிராமத்தைச் சேர்ந்த இளங்கோவன் என்பவர் விமானப் படையில் பணியாற்றும் போது நடைபெற்ற விபத்தில் தனது உடல் முழுவதும் செயல் இழந்தும், அவரது திறமையை வெளிக் காட்டிட சிறப்புப் பயிற்சி பெற்று வாயினால் ஓவியம் வரைந்து வருகிறார். அவர் தனது ஓவியங்களை உலக அளவில் நடைபெறும் பல்வேறு போட்டிகளுக்கு அனுப்பி வைத்து சிறப்புப் பரிசுகள் பெற்றுள்ளார். அவர் இளம் உடல் ஊனமுற்ற ஓவியர்களுக்கு வழிகாட்டியாக இப்போட்டியின் போது பங்கேற்றுச் சிறப்பித்தார். உடல் ஊனமுற்றோர்களுக்கான ஓவியப் போட்டியைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.



உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக் காக ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் 1,210 நபர்களுக்கு பல்வேறு நல உதவிகள் பெற்று வழங்கப்பட்டுள்ளன. இதில் 30 நபர்களுக்குச் சுய வேலை வாய்ப்பிற்காக மானியத்துடன், கடனுதவியும், 320 நபர்களுக்கு கடும் ஊனமற்றோர்களுக்கான பராமரிப்பு மானியமாக ரூ.5.76 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தில் இரு ஜோடிகளுக்கு ரூ.20 ஆயிரமும், கைகால் ஊனமுற்றோர் திருமண உதவித் திட்டத்தில் 4 ஜோடிகளுக்கு ரூ.28 ஆயிரமும், காது கேளாதோர் திருமண உதவித் திட்டத்தில் 10 ஜோடிகளுக்கு ரூ.70 ஆயிரமும் பெற்று வழங்கப்பட்டுள்ளன. ஊனமுற்றோர் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 350 நபர்களுக்கு ரூ.2.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 5 நபர்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர்களுக்கான கருவிகள் வழங்கும் திட்டத்தில் 116 நபர்களுக்கு காதொலிக் கருவியும், 30 நபர்களுக்கு 3 சக்கர வண்டியும், 3 நபர்களுக்கு சக்கர நாற்காலியும், 10 நபர்களுக்கு பார்வையற்றவர்களுக்கான கடிகாரமும், 100 நபர்களுக்கு சூரிய ஒளியினால் சக்தி பெறும் பேட்டரிகளும், 20 நபர்களுக்கு கருப்புக் கண்ணாடி மற்றும் ஊன்று கோலும், 35 நபர்களுக்கு காலிபர் கருவியும், 19 நபர்களுக்கு ஊன்றுகோலும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 156 நபர்களுக்கு ஊனமுற்றோர்களுக்கான இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் தனியார் நிறுவனங்கள் மூலம் 7 சிறப்புப் பள்ளிகள் உடல் ஊனமற்றோர்களின் மறுவாழ்விற்காக நடத்தப் பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்விற்காக சிறப்புத் திட்டங்களை 2002–2003 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்து செயல்படுத்திய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வு சிறப்புப்பணிக்கு முதலமைச்சர் விருது இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

– **திரு.எம். ஏ. லாரன்ஸ்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*பெரம்பலூர் மாவட்டம்.*

# மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு

**மாண்புமிகு முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உரை**




மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆண்டு மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இம்மாநாடு நாட்டுநடப்புகளை நிதர்சனமான நிலைமைகளை அறியவும், எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பை நமக்கு அளிக்கும் என்று நான் நம்புகிறேன். இது மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி; மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய நடவடிக்கைகளை எந்த அளவுக்கு விரைவுபடுத்த வேண்டுமென்பதை நமக்கு நினைவூட்டும் ஒரு காலக் கருவி ஆகும். இந்த நடவடிக்கைகளின் விளைவுகளை மதிப்பிடும் உரைகல்; புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஒரு உந்துவிசை ஆகும்.

**மக்களின் துயரை குறைக்க உதவின**

எங்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் – காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் முதல் மாநாட்டை 2001 ஆகஸ்டில் நான் நடத்தினேன். இம்மாநாட்டில் நாங்கள் பல்வேறு புதிய திட்டங்களையும் திட்டப் பணிகளையும் அறிவித்தோம். தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக 2002 ஆகஸ்டில் கூட்டப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்பு மாநாட்டில், நாங்கள் எடுத்த பல்வேறு முடிவுகள் பருவ மழை பொய்த்ததால் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்பட்ட கடும் துயரை பெரிதும் குறைக்க உதவின.

கடந்த 15 மாதங்களாக நாங்கள் எடுத்த நடவடிக்கை குறித்து ஆய்வு செய்வதற்கு உகந்த தக்க தருணம் இது ஆகும். இம்மாநாட்டில் மூன்று பொருள்கள் குறித்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

முதலாவது சட்டம் – ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சிப் பணிகள், சிறந்த நிர்வாகம் ஆகியவை குறித்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றுநான் விரும்புகிறேன்.



**பிரிவினை சக்திகளை முற்றிலும் ஒழிக்க உறுதி**

பொது அமைதி பேணப்பட்டு சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டாலொழிய வளர்ச்சிப் பணி இலக்குகளை எய்துவது என்பது அர்த்தமற்றதாகும்.

உண்மையிலேயே தற்போது நாம் மிகவும் இடர்ப்பாடான காலகட்டத்தில் பயங்கரவாதம் என்பது வெறும் நெடுநோக்கிலான நடவடிக்கை மட்டுமல்ல. அது குழப்பத்தைத் தோற்றுவிக்கும் ஒரு நச்சரவம் ஆகும். நாடு முழுவதிலும் மரணத்தையும், பேரழிவையும், பீதியையும், தீவிரவாதத்தையும் அது உருவாக்கும். பிரிவினை சக்திகளையும் முற்றிலும் ஒழித்துக்கட்டுவது என உறுதி பூண்டுள்ளேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

எல்.டி.டி.இ.மீதான தடையை மேலும் நீட்டிப்பதை எங்களுடைய அரசு உறுதி செய்துள்ளது. மேலும் இரு முக்கியமான பயங்கரவாத அமைப்புகளான தமிழ்நாடு விடுதலைப்படை (TNLA), டி.என்.ஆர்.டி.யும் (TNRT) 1908ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழும், 2002ஆம் ஆண்டின் பொடா சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளன. 2001ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்த அமைப்புகளை தடை செய்வதில் காட்டப்பட்ட தயக்கம், செயலின்மை ஆகியவற்றுக்கு மாறாக நாங்கள் எடுத்த உறுதியான, தீர்க்கமான நடவடிக்கை இந்த போராளி மற்றும் அழிவு சக்திகளைப் பெருமளவுக்கு அடக்கியுள்ளது.

**விழிப்புணர்வுடன் செயல்படும் மாவட்ட அதிகாரிகளுக்குப் பாராட்டுக்கள்**

தீங்கும், பெரும் கேடும் விளைவிக்கும் இச்சக்திகளை அடக்கி, தமிழ்நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலவச் செய்வதில் அரும்பணியாற்றி வளர்ச்சிப் பாதையில் நாம் விரைந்து செல்ல ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், ஏனைய உயர் காவல்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் எச்சரிக்கையாக இங்கு ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மெத்தனத்திற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. நாம் உறுதியுடனும், தயக்கமின்றியும் நடவடிக்கை எடுக்கும்போது செயலற்றிருந்து அல்லது பாதுகாப்பாக புகலிடத்தில் மறைந்திருந்து, பின்னர் மீண்டும் ஒன்று சேர்ந்து புது அமைப்பாக உருவெடுப்பது போராளிகள் மற்றும் பயங்கரவாதக் குழுக்களின் வழக்கமாகும். நாம் எப்போதும் விழிப்புடன் கண்காணித்துக் கொண்டிருக்க

வேண்டும். தொடர்ந்து உளவுத் தகவலைச் சேகரித்து வந்து அவர்களுக்கு ஒரு நெருக்குதலை ஏற்படுத்த வேண்டும்.

தற்போதைய தீவிர பாதுகாப்பு சோதனைகளை தளர்த்தக்கூடாது.

தீவிரவாதம் எந்த நேரத்திலும் தன் கோர முகத்தைக் காட்டக் கூடும் என்பதையும், எச்சரிக்கையின்றி தனித்தனியாகவும் குழுவாகவும் வன்முறையில் அவர்கள் ஈடுபடக்கூடும் என்பதையும் தருமபுரி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அடிப்படை மதவாத குழுக்களுக்கும் இது பொருந்தும்.இந்த அமைப்புகளுக்கு வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவி கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எந்த நேரத்திலும் நாம் ஆயத்தமாக இருப்பதும் உளவுத் தகவலை திரட்டுவதுமே நம்முடைய தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

*எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்*

– திருக்குறள்

வரப் போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**காவல்துறையை நவீனமாக்க ரூ.272 கோடி**

இப்போது உள்ள நிலையில் நிலவும் தீவிரவாதம், பயங்கரவாதம், அடிப்படைவாதம் ஆகிய சவால்களைக் காவல்துறை எதிர்கொள்ளும் வகையில் நவீன ஆயுதங்கள், தகவல் தொடர்பு, முற்றிலும் தேவையான பாதுகாப்பு ஆகிய செயல் வல்லமையுடன் காவல்துறையை, முற்றிலும் ஒரு தொழில் முறையில் செயல்படும் துறையாக, அத்துறையைநவீனமயமாக்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டங்களுக்காக, ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளில் ரூ.272 கோடிக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், ஏற்கெனவே சீர்மிகு புகழுடன் விளங்கும் தமிழ்நாடு காவல்துறை, நாட்டிலேயே முதல் தரமான காவல்துறையாக விளங்கும் என்று நம்புகிறேன்.

காவல்துறையின் செம்மையான செயல்பாட்டிற்கு நமது ஆண் மற்றும் பெண் காவலர்களின் கட்டுப்பாட்டுணர்வு இன்றியமையாததாகிறது. தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலை அதிகாரிகளிடையே தனிப்பட்ட வகையில் உற்சாகத்தை ஏற்படுத்தவும், அவர்கள் பணிபுரியும் துறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வகையிலும், அவர்களுக்குள்ள குறைகளை அறிந்து கொள்ளவும் அவர்களுடன் விரிவான ஐந்து கூட்டங்களை நடத்தியுள்ளேன்.

**காவல்துறை வரலாற்றில் தனித்தன்மை**

ஒரு முதலமைச்சர் என்ற அளவில், காவல்துறையினருடனான இந்த நேரடியான சந்திப்பு, காவல்துறை நிருவாக வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்ததாகும். பணியில் உங்களுக்கு உள்ள பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுகளை மேம்படுத்திக் கொள்வதில் நல்ல பயன் கிட்டியது.

காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், ஏனைய முதுநிலைக் காவல்துறை அதிகாரிகளும், அத்தகைய துறை சார்புக் கூட்டங்களை தொடர்ந்து கூட்டி, காவல்துறைப் பணியாளர்களின் குறைகளை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். காவல் துறையினரின் நீண்டகால மன உளைச்சல், ஏமாற்றங்கள், தனிப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றைத் தணிப்பதற்கு இது வழி வகுக்கும் என்பதோடு, காவல்துறையினரின் ஒட்டுமொத்தத் திறமையை முடுக்கிவிடவும் உதவும்.

**கசப்பு மருந்தை உட்கொள்வது அவசியமாகும்**

தற்போது நாட்டில் உள்ள வளர்ச்சிப் பணிகள் குறித்து விவாதிக்க விரும்புகிறேன். குறிப்பிட்ட சில வளர்ச்சிப் பணிகள் குறித்து நான் உரை நிகழ்த்துவதற்கு முன்னர், நீங்கள் எத்தகைய சூழ்நிலைகளில் வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்த இருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய அரசு, 2001, மே மாதத்தில் பதவியேற்றபோது, மாநிலத்தின் நிதி நிலை எப்போதும் இல்லாத அளவுக்கு சீர்குலைந்து இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதிலிருந்து மீண்டு மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இயலும் வகையில், மாநில நிதி நிலையை ஒழுங்கு


படுத்தும் ஒரு நடவடிக்கையாக, பெரும் நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள, நாங்கள் ஒருமித்த முயற்சி மேற்கொண்டுள்ளோம். மாநில அரசின் நிதிநிலையைச் சீரமைத்து முன்னிருந்த நிலைமைக்கு கொண்டுவர, நிதிச் சீர்திருத்தங்கள் என்ற கசப்பு மருந்தை நாம் உட்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். தேவையான நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பயன் விளைவிக்கக் கூடிய ஒரு பயனுள்ள வளர்ச்சிப் பணியை மேற்கொள்வதற்கு தேவையான நிதி வசதி நமக்கு கிட்டாது.

### 15 அம்சத் திட்டம்

ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாட்டை சிறந்த மாநிலமாக்குவதே எனது நோக்கமாகும். இதற்காக 15 அம்சத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதில், பசுமைப்புரட்சி, உணவுப் பாதுகாப்பு, கால்நடை பாதுகாப்பு, குடிநீர்ப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, வாழ்க்கைத் தொழில் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு, உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, மேம்பாட்டிற்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதி, எழுத்தறிவு, தனித்துறை நுட்பக் கோட்பாடு, நாட்டுப்புற கருநாடக இசை, நவீன கலை, பண்பாடு, நாடகம், ஆண், பெண் என்ற பாகுபாடின்மை, ஒடுக்கப்பட்டவர்களுக்கான புதிய திட்டம், தொழில் நுட்பம் ஆகியவை அடங்கும், அடுத்த மூன்றரை ஆண்டு காலத்தில் இந்த அரசின் திட்டங்களில் இவை இடம் பெறும் இந்த 15 அம்சத் திட்டம் ஒவ்வொன்றின் கீழும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நுண்திட்டங்களை வகுத்து, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு அயராது பாடுபட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

### வறுமை போக்க புதிய உத்வேகம்

1998-2001ஆம் ஆண்டுகளுக்கு இடையே வேளாண்மையிலும் வேளாண்மை சார்ந்த துறைகளிலும் பின்னடைவு ஏற்பட்டிருப்பது குறித்து பெரிதும் வருந்துகிறேன். இதுவே முதன்மையான



துறையாகும். மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் இது 17 சதவீதமாகும். ஆனால், இவ்வுற்பத்தி 62 சதவீதம் மக்களுக்கு ஆதரவளிக்கிறது. 2001–2002 ஆண்டிலும், மற்றும் நடப்பாண்டிலும் நமது ஊரகப் பொருளாதாரம் மேலும் பாதிப்புக்குள்ளாகும் வகையில் மோசமான பருவநிலைமையை நாம் சந்திக்க வேண்டியிருந்தது. ஆகவே, ஊரகப் பகுதிகளில் காணப்படும் வறுமையைப் போக்க நாம் முக்கிய துறையின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகம் அளிக்க வேண்டியுள்ளது என்பது தெளிவாகிறது. இதற்கென மூன்று முக்கியத் திட்டங்களை நான் தெரிவித்துள்ளேன்.

முதல் திட்டம், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் மேம்பட்ட வளர்ச்சிக்கு, நில, நீர் ஆதாரங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நோக்குடன், தரிசு நிலங்களைப் பயனுடையதாகச் செய்வதற்கு, விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். முதற்கட்டமாக, பெரிய அளவிலான வளர்ச்சி வட்டாரங்களிலும், கூட்டுக் குடியிருப்பு பகுதிகளிலும் தக்க வேளாண்மை பணித் திட்டத்துடன் தரிசு நிலங்களைக் கண்டறியும் பணியினை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டியுள்ளது.

2002–ஆம் ஆண்டு டிசம்பருக்குள் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டங்களைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் குறுகிய காலத்தில் அவற்றை பயனுக்குள் கொண்டுவர முடியும்.

## தரிசு நிலங்களைச் சாகுபடியின் கீழ் வருவதில் வெற்றி காணலாம்

இரண்டாவது அம்சம், தனிப்பட்ட விவசாயிகள் மூலம் தரிசு நில மேம்பாட்டினை மேற்கொள்வது தொடர்பானதாகும். பல்வேறு காரணங்களுக்காக, விவசாயிகள் தங்களுடைய சொந்த நிலங்களைத் தரிசாக போட்டு வருகின்றனர். அனைத்து கிராமங்களிலும் உள்ள அத்தகைய நிலங்களைக் கண்டறிவதற்கு கிராம நிருவாக அதிகாரிகள், உதவி வேளாண்மை அலுவலர்களைக் கொண்டு முழுமையான ஆய்வினை மேற்கொண்டு, அவற்றை விவசாயத்திற்குக் கொண்டுவர தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும். நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களை ஒருங்கிணைப்பது நம் முயற்சியாக இருக்க வேண்டும். அப்போதுதான் தரிசு நிலங்களை, சாகுபடியின்கீழ் கொண்டு வருவதில், நாம் வெற்றி காணலாம்.

## நிதியுதவியுடன் புதிய வேளாண் தொழில் திட்டம்

மூன்றாவது அம்சம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தையொட்டி புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் வரும் வேளாண் செயல் திட்டமாகும். இரு திட்டங்களையும் ஒருங்கிணைப்பதே இதன் நோக்கமாகும். வணிக வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் கூடிய புதிய வேளாண் தொழில் திட்டம் அடுத்த ஆறுமாத காலத்திற்குள் செயல்படுத்தப் படுவதற்கு ஊக்குவிக்கப்படும்.

அனைத்து பருவநிலைகளுக்கும் ஏற்ற ஊரக சாலைகள், ஒருங்கிணைந்த ஊரகத் துப்புரவு வளாகங்கள் ஏற்படுத்தல், கிராமப்பகுதி ஏரிகளைத் தூர்வாரி சீரமைத்தல், கதிரடிக்கும் களங்கள், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உட்பட ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பல இனங்கள் எங்கள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய, ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு உள்ளாட்சி மன்றங்கள் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றன.

## பணியின் தரத்தை நேரடியாகப் பார்வையிட வேண்டும்

ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரைந்து செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நேரடியாக தாமே ஈடுபட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பணியின் தரத்தை உறுதிப்படுத்துவதிலும் விரைந்து செயல்படுவதிலும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இச்சேவைகளின் பயனை மக்கள் உரிய நேரத்தில் பாராட்டுவார்கள்.

இத்தகைய ஊரக வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்ந்து அளிக்கப்படும். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இயன்ற அளவு விரைவில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சுற்றுச் சூழலை தொடர்ந்து மேம்படுத்தல், சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் ஆகிய இரண்டையும் இணைந்தே செயல்படுத்த வேண்டும். ஒன்றாகவே செய்ய வேண்டும். எனவே, வீசி எறியக்கூடிய பிளாஸ்டிக்குகளைப் பயன்படுத்துதல் அதிகரித்து

வருவது குறித்தும், அவற்றை முறையாக அழிக்க இயலாமை குறித்தும் அதன் காரணமாக நமது மாநகரங்கள், மாநகராட்சிகள் மற்றும் சிறிய நகரங்களிலும் அனைத்து சாலை ஓரங்களிலும் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளிலும் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் கிடக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது குறித்து நான் மன வருத்தம் அடைகிறேன்.

### பிளாஸ்டிக் கழிவுகளை அகற்ற வேண்டும்

இவை கடுமையான சுகாதார கேட்டிற்கும் சுற்றுச்சூழலைத் தீவிரமாகப் பாதிக்கும் வகையில் பார்க்கும் போதே அருவருப்பைத் தோற்றுவிப்பதாகவும் உள்ளது. உள்ளாட்சி மன்றங்கள் அரசு சாரா அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து தனியானதோர் நிலப்பகுதியில் அவற்றை கொட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் செயல் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். நம்முடைய இல்லங்களில் உள்ள வேண்டாத பொருட்களை அகற்றி விடுவதை (பழையன கழிவது) பொங்கல் பண்டிகைக்கு முன்பாக மேற்கொள்வது தொன்று தொட்டு வழக்கத்திலுள்ள மரபு ஆகும்; அதைப் போலவே அடுத்துவரும் பொங்கல் பண்டிகைக்குள் இதனைச் செய்து முடிக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படும் முதல் நிலையிலேயே தரம் குறைந்த உயிரினக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகள் ஆகியவற்றைப் பிரிக்க வழிவகை செய்ய மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### முன்னோடித் திட்டம்

நம்முடைய மக்களுக்காக முனைப்பான சமூகப் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி கொடுப்பது மிகவும் அவசியம் என்று நான் உணர்கிறேன். நமது அரசுக்குப் பொருளாதாரம் மற்றும் நிதிநிலையில் இடர்பாடுகள் இருந்தாலும் வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதையே இவ்வரசு உறுதிபூண்டு நிலை நிறுத்தி வருகிறது. நான் பதவியில் இருந்த 1991–1996க்கும் இடைப்பட்ட காலத்தில் என்னால் ஏற்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு அமைப்பு 1995இல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய சமூக நிதியுதவித் திட்டத்திற்கான முன்னோடி ஆகும்.

இந்த சமூகப் பாதுகாப்பு அமைப்புத் திட்டத்தின் கீழ், நலத் திட்டங்கள், தொடக்கக் கல்வித் திட்டங்கள், பொது விநியோக முறை, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றை நாம் பெற்றுள்ளோம்; தமிழ்நாட்டில் பசிப்பிணியற்ற மற்றும் சத்துக் குறைவற்ற நிலையை ஏற்படுத்துவதற்கு வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு சத்துணவு அணுகுமுறையை நாம் பின்பற்றியுள்ளோம். ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுப் பணிகள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தேசிய சத்துணவு அமைப்பு கோயில்களில் அன்னப்பூர்ணா, அந்தோதியா (Antyodaya) திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பாராட்டத்தக்க அன்னதானத் திட்டங்கள் ஆகிய தொடர் திட்டங்கள் மேற்சொன்ன கருத்தை மெய்ப்பிக்கின்றன. பள்ளிக்குழந்தைகளுக் காகவும், சர்வ சிக்சா அபியானுக்காகவும் சிறப்பு மருத்துவ முகாம்கள், நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு, சத்துள்ள மதிய உணவுத் திட்டம் போன்ற புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளோம்.

குழந்தைகள் இறப்பு வீதம் குறைந்ததால் 1996–2001ஆம் ஆண்டுகளில் குடும்பநலத் திட்ட இலக்கைத் தமிழ்நாடு எட்டவில்லை. இது சரி செய்யப்பட வேண்டும். குடும்ப நலத் திட்டத்தில் சிறந்த நாட்டம் செலுத்துவதன் மூலம் பிறப்பு– இறப்பு வீதத்தில் விரைவில் மாற்றத்தை நாம் அடைய இயலும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில், மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

எந்தவொரு மக்கள் சமுதாயத்திலும், குழந்தைகளை இழிவாகவும், தவறாகவும் பயன்படுத்துகின்ற பிரச்சினையை களைய முதல் இடம் கொடுக்கப்பட வேண்டும்.

பல துறைகளில் நாம் முதலாவது இடத்தை வகித்து வருவது போல் 2001– ஆம் ஆண்டு இளங்குற்றவாளிகள் நீதி (குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு) விதிகளைத் தமிழ்நாடு மாநிலம்தான் முதன்முதலாக இயற்றியுள்ளது. குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தல் மற்றும் தவறாக பயன்படுத்தல் போன்ற கொடுமைகளை ஒடுக்கும் பெரும் முயற்சியில் மாவட்ட ஆட்சியர்கள், அரசு சாரா அமைப்புகளை ஊக்குவித்து அவற்றில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

“எய்ட்ஸ்” என்பது, வெடிகுண்டிற்கு ஒப்பானது என்று விளக்கப்பட்டுள்ளது. தீவிரமாகப் பிரச்சாரம் செய்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் நோய்க்கான சிகிச்சைக்குப் பின்னர் கவனம் செலுத்துதல் போன்றவற்றின் மூலமாகவே, இதனைத் தீவிரமாகத்

தடுத்து நிறுத்த முடியும். தமிழ்நாட்டில், நாங்கள் தன்னார்வ ஆலோசனை மற்றும் சோதனை மையங்களை ஏற்கெனவே பரவலாக நிறுவியுள்ளதோடு, மிகச் சிறப்பான முறையில் நோய்க் கண்காணிப்பு ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பொது விழிப்புணர்வுடன், மேற்சொன்ன நடவடிக்கைகளும் இணைந்து, இப்பிரச்சினையை மட்டுப்படுத்துவதற்காக முனைப்பாக வழிமுறைகளை வகுக்க தமிழ்நாடு அரசுக்கு ஏதுவாகியது. நோயினைக் கண்டறிதல், கண்காணித்தல் ஆகியவற்றைக்கூட செய்ய இயலாத பல மாநிலங்களை ஒப்பிடுகையில், நம்முடைய இத்தகைய முனைப்பான நடவடிக்கைகளினால் எய்ட்ஸ் நோயாளிகளின் உண்மை எண்ணிக்கை விவரத்தை நாம் கண்டறிய முடிந்துள்ளது.

தமிழ்நாட்டில் பெண்களிடையே பேறு காலத்திற்கு முந்தைய எச்.ஐ.வி. கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நாட்டில் ஐந்தாவது இடத்தில் தற்போது உள்ளது; அதாவது மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அடுத்ததாக உள்ளது. தொடர்ந்து நாம் விழிப்புடன் செயல்பட்டு, மேற்சொன்ன அனைத்து தேர்வுகளையும் உடனடியாகக் கண்டறியவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

குறிப்பாக ஊரகப் பகுதிகளில் இப்பிரச்சினை தொடர்புடையதாகவே உள்ளதென்பதே நமக்கு கவலையளிப்பதாக உள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட "எய்ட்ஸ்" ஆலோசனைக் குழுக்கள், "எய்ட்ஸ்" நோய்க் கட்டுப்பாட்டுப் பிரச்சார முகாம்கள் அனைத்திலும் முனைப்பான கவனம் செலுத்த வேண்டும்.

சுயஉதவிக் குழுக்கள் மூலமாக மகளிருக்கு அதிகாரமளிக்கும் முக்கியத் திட்டம் ஒன்று 1992-இல் என்னால் தொடங்கிவைக்கப்பட்டது. இது, மாபெரும் வெற்றியைத் தேடித்தந்துள்ளது. தற்போது 20 இலட்சம் பெண்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்துள்ளனர்; அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக இவ்வியக்கத்தில் பங்காற்றி வருகின்றனர்.

அடுத்து வரும் நான்காண்டுகளில், இந்த இயக்கத்தின் ஓர் அங்கமாகச் சேர்ந்து கொள்ளும் வகையில், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள, மேலும் 15 இலட்சம் குடும்பங்களை இதில் சேர்க்கக் கருதியுள்ளோம். இந்த இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர்கள் பெரும் பங்காற்ற வேண்டும்.

இத்தகைய சுயஉதவிக் குழுக்களை பெருமளவு எண்ணிக்கையில் ஏற்படுத்த இயலும்போது, அவற்றின் மூலம் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. விற்பனைத் தொடர்பை ஏற்படுத்துவது மிகவும் கடினமான பணியாகும். உடனடியாக விற்பனையாகக் கூடிய அத்தகைய பொருட்களைச் செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்கள், தங்களை நேரடியாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

**50,000 மகளிருக்கு தேர்ச்சித் திறன் பயிற்சி**

விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தேர்ச்சித்திறன் பயிற்சியினை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இந்த ஆண்டில், 50,000 மகளிருக்கு தேர்ச்சித் திறன் மேம்படுத்துவதற்கும், வாழ்க்கைத் தொழில் பயிற்சியளிப்பதற்காகவும் மாவட்ட ஆட்சியர்கள் உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 1.25 இலட்சம் மகளிரை நடப்பாண்டில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது. சுயஉதவிக்குழுக்கள் அவர்களுடைய நடவடிக்கைகளை மேலும் சிறப்பாக செய்வதற்கு உதவும்.

நியாயவிலைக் கடைகளின் மூலம், கொள்முதல் ஏற்பாட்டு முறை வழங்கல் விலை போன்றவற்றில் மாற்றங்களைச் செய்து பொது விநியோக ஏற்பாட்டு முறையை அரசு அண்மையில் மாற்றியமைத்துள்ளது. மிகுந்த நிதி நெருக்கடியில் நாட்டில் குறைந்த விலையில், அரிசியை இவ்வரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. எனவே, ஒவ்வொரு குடும்பமும் முதல் 10 கிலோ அரிசியை கிலோ ரூ. 3.50 விலையில் பெறுவதற்கு உறுதி செய்ய வேண்டும். பொது விநியோக ஏற்பாட்டு முறையைத் திறமையுடன் நிருவகிக்க வேண்டுமென்பதே மிகமுக்கியமான பொறுப்பாகும். விநியோகிக்கப்படும் அளவு, உரிய நேரத்தில் பொருட்கள் வழங்கப்படுதல், சரியான எடை மற்றும் சரியான விலை; ஆகியவை குறித்த புகார்களைக் கவனிக்கின்ற புகார் தீர்வு சேவை ஒன்றை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

**பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திற்கும் குடிநீர்**

தென்மேற்குப் பருவமழை நடப்பாண்டில் சாதகமாக இல்லை. நல்ல முறையில் தொடங்கிய வடகிழக்குப் பருவமழை விரைவில் முடிந்துவிட்டது. இதன் காரணமாக, பல மாவட்டங்களில் ஒட்டுமொத்த மழை பொழிவில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பருவமழை மீண்டும் தொடங்கியிருந்தாலும், எத்தனை நாள் மழை நீடிக்கும் என்பதை நாம் உறுதியாக

கூற முடியாது. நிலைமையை உன்னிப்பாக கவனித்து, ஏற்படக்கூடிய குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க போர்க்கால நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திற்கும் குடிநீர் வழங்கும் பணிகளுக்குத் தேவையான நிதி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு ஊரக மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் கிடைக்கும் நிதிகளைப் பயன்படுத்தியும், வறட்சி நிவாரணப் பணிகளுக்கான சிறப்பு அரிசி ஒதுக்கீட்டைக் கொண்டும் நீங்களும் நல்ல திட்டப் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்.

அங்குள்ள பெரிய மற்றும் சிறிய ஏரிகள் மற்றும் கிராமப்புற குளங்கள் மேம்படுத்தப்படுவதையும் இத்தகைய நீர்நிலைகளுக்குத் தண்ணீர் வழங்கும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் தீட்ட இந்தச் சந்தர்ப்பத்தை மாவட்ட ஆட்சியர்கள் பயன்படுத்த வேண்டும். இது நமது நீர் ஆதாரங்களை முடிந்த அளவுக்குப் பயன்படுத்த வகை செய்யும்.

நல்ல நிருவாகத் திறன் பற்றி இப்போது நான் உங்களிடம் பேச விரும்புகிறேன். நல்ல நிருவாக நடைமுறைகள் மட்டுமே திறமையை மேம்படுத்தி அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகளிலும் அதனைக் காண இயலும். வரையறையற்ற தகவல் தொழில்நுட்ப வாய்ப்புகள் திறமையான பணிகளை அளிப்பதற்குப் பயன்படுத்தப்படவேண்டும். இந்த நோக்கத்துடன் தான், வட்டாட்சி அலுவலகங்களில் தொடு திரை தகவல் மையங்களையும் ஊரகப் பகுதியில் இணையதள அடிப்படையிலான தகவல் மையங்களையும், நான் தொடங்கி வைத்தேன். சாதாரண மனிதர்களுக்கும் எவ்வித தகவல் பரிமாற்றச் செலவுமின்றி திறம்படவும் விரைந்தும் பணிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காகவே நான் கணினி வரி நிருவாக வசதியை வலியுறுத்துகிறேன். ஆவணங்களைப் பதிவு செய்தல், பட்டா மாற்றுதல் ஏனைய பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற வட்டாட்சி அலுவலக நடவடிக்கைகளையும் உரிமை மாற்றங்கள் பயன்பாட்டுக்குத் தொகை செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும் இவ்வசதியின் மூலம் சிறப்பாகச் செய்ய இயலும் விரிவான கணினி வழி நிர்வாக பணி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் அதன் நற்பணிகளை பெறும் வகையில் இவற்றை நாம் விரைந்து செயல்படுத்த வேண்டும்.

**காலதாமதத்தைக் குறைக்க பணிகள் ஒருங்கிணைப்பு**

பல்வேறு துறைகளின் மூலமாக மேற்கொள்ளப்படும் பணிகளை ஒருங்கிணைப்பது மிகவும் முக்கியமானதாகும். இது ஒரு பணி, இரண்டு முறை செய்யப்படுவதைத் தவிர்ப்பதோடு மட்டுமல்லாமல், நடைமுறை கால தாமதத்தைக் குறைத்து உரிய அளவிற்கு வள வாயில்களைப் பயன்படுத்த ஏதுவாகும். எடுத்துக்காட்டாக, நல்ல பயனை அளிக்கும் வகையில் பல்வேறு இயக்கங்களில் சுகாதாரம், கல்வி, சமூக நலம் ஆகிய துறைகளை ஒருங்கிணைக்கலாம். இதேபோன்று, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களில் நல்ல பலன் ஏற்பட்டதை போன்று வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், குடிநீர் வழங்கல் மற்றும் சிறுதொழில்கள் ஆகிய துறைகளையும் ஒருங்கிணைக் கலாம்.

இவ்வாறு பணிகளை ஒருங்கிணைக்கும் நடைமுறை ஏற்பாட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்களின் மாவட்டங்களில் செயல்படுத்தி, பல்வேறு களப் பணிகள் ஒன்றிணைந்த முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த வகையில் பணிகளை மேற்கொள்வதே இலக்கிடப்பட்ட பிரிவினருக்கு நன்முறையில் பணிகள் சென்றடைய ஏதுவாக இருக்கும்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்காத வரையில், நல்லாட்சி என்பது பயனில்லாத கற்பனையாகவே இருக்கும். இந்த அரசு, ஊழலுக்கு எதிராக அனைத்து நிலைகளிலும் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் அரசு துறைகள், அதன் முகவரமைப்புகளாக அமைந்து பணிகளை நிறைவேற்றுகின்றனவா என்பதை கவனிக்க வேண்டும். அரசுப் பணியாளர்கள் மக்களில் ஒருவராகச் செயல்படுகின்ற மனப்போக்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் நிருவாகம் மக்களிடமும், மக்களுக்காகவும் நெருங்கிச் செயல்படுவதற்கு ஜனநாயக பரவலாக்கம், பல திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை ஒரு நடைமுறையாகும். இது வலுபடுத்தப்பட வேண்டும். ஒரு நாள் எழும்பும் ஒரு பிரச்சினை என்னவெனில் பல பொறுப்புகளை நாம் ஒப்படைத்துள்ள உள்ளாட்சி மன்றங்கள் தரமான பணியை திருப்திகரமாக மேற்கொண்டுள்ளனவா என்பதே ஆகும்.





### உள்ளாட்சிப் பணிகளைக் கவனிக்க வேண்டும்

அரசு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கணிசமான அளவிற்கு நிதிகளையும் மானியங்களையும் பகிர்ந்தளித்துள்ளது. அவை தங்கள் பணிகளைச் சரிவர செய்திருப்பார்களேயானால், ஊரகப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும். உள்ளாட்சி மன்றங்கள் திறம்படச் செயல்படுவதைக் கண்காணிப்பதில் மாவட்ட ஆட்சித்





தலைவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும். மக்களாட்சி பரவலாக்கம் என்பது சிறப்பு வாய்ந்த ஒரு முறையாகும். இது, மக்களுக்குரிய நீடித்த பயன்களை உண்மையாக அளித்து மக்களையும் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வதாகும். உள்ளாட்சி மன்றங்களின் சட்டப்பூர்வமான நற்பணிகள் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உள்ளாட்சி மன்றங்களின் ஆய்வாளர்களாகச் செயல்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

விவாதத்திற்கான நிகழ்ச்சி நிரல் தற்போது உங்கள் முன்னர் வைக்கப்பட்டுள்ளது. நமக்கு வாக்களித்து நம்மை ஆட்சியில் அமரச் செய்துள்ள மக்கள் நம்மேல் சுமத்தியுள்ள கடமைகளை இந்த நிகழ்ச்சி நிரலில் அளிக்கப்பட்டுள்ள மூன்று கருப்பொருள்களை தெரிவு செய்து அதன் வாயிலாக சுருக்கமாகக் கூறலாம்.

தெரிவு செய்யப்பட்டுள்ள அவை அமைதி, மேம்பாடு, நல்லாட்சி ஆகியனவாகும். இவற்றில் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும் என்ற இந்த அரசின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில், நீங்களாகவே மிகுந்த தரமான நடைமுறைகளை மேற்கொள்வதை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

நிர்வாகம் என்பது ஒரு சாத்தியமான கலை என்ற பெரு மதிநுட்பத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

முடியாதவற்றையும் சாதித்துக் காட்டுவதற்காக நான் ஒவ்வொரு நாடி நரம்புகளையும் அர்ப்பணிக்கின்றேன். மாவட்ட ஆட்சித்தலைவர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் அதை தலைமையேற்று நடத்த வேண்டும். நான் பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்களை எதிர் பார்க்கிறேன்.

*– மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*9.12.2002 அன்று, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் கூட்டு மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.*

இம்மாநாட்டின் வளர்ச்சி பற்றிய நிகழ்ச்சி நிரலின் இறுதி அமர்வில் நாம் இருக்கிறோம். இம்மாநாடு கடந்த 3 நாட்களாக பல்வேறு புதிய கருத்துக்களை – உந்துதலைப் புதிய முயற்சிகளை வெளிக்கொணர்ந்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் அடிப்படையான உண்மை நிலவரங்களை நான் நன்கு அறிந்து கொள்ள உதவும் வகையில் உங்களது விவாதம் அமைந்திருந்தது.

# "தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் ஒத்துழைக்க வேண்டும்"

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

இம்மாநாட்டின் இறுதிக்கட்ட அறிவிப்பின் மூலம் அரசு என்ன எதிர்பார்க்கிறதோ அதுவே நமது நிகழ்ச்சி நிரலாக முன்னுரிமையாக – வரப்போகிற மாதங்களில் இருக்க வேண்டும் என்பதில் உங்கள் கவனத்தைக் குவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அக்கறை கொண்ட திறமையான, நியாயமான உடனுக்குடன் பதிலளிக்கிற ஒரு நிர்வாகத்தை வழங்குவதில்தான் நமது கவனம் இருக்க வேண்டும். இந்த பொறுப்பின் மையமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் இருக்கிறீர்கள். எனவே மக்கள், அரசாங்கத்தின் முகமாகவே உங்களைப் பார்க்கிறார்கள்.

**வெற்றியின் சோதனை**

இறுதியாக, மக்கள் நம்மைப் பற்றி என்ன அபிப்பிராயத்தை வைத்திருக்கிறார்கள் என்பதில்தான் நமது வெற்றியின் சோதனை அடங்கியிருக்கிறது. எனவே, தயக்கத்திற்கோ – பிறகு பார்த்துக் கொள்ளலாம் எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என்கிற எண்ணத்திற்கோ, குறைகூறலுக்கோ, சலித்துக் கொள்வதற்கோ அல்லது வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்பன போன்ற அணுகுமுறைக்கோ இங்கே இடமில்லை.

மாவட்ட ஆட்சியர்கள், பிரச்சினைகளையும் – இடர்ப்பாடுகளையும் தேடிக் கண்டறிய வேண்டும். அவைகளுக்கான தீர்வை புதிய முறையில் – மிக நுட்பமாகத் தீர்த்து வைப்பதில் இடைவிடாது சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் ஓர் அம்சம் தெரிய வந்துள்ளது. அதாவது தீவிரவாதத்தை வலியுறுத்தும் – சில குறிப்பிட்ட தவறான வழியில் செல்லும் குழுக்களின் இலட்சியக் கோட்பாட்டு வழியே செல்லும் பலவீனம், சில பகுதி வாழ்மக்களிடம் இருப்பது என்பதுதான்.

**தீவிரவாதத்தை எதிர்க்க சிறப்புத் திட்டங்கள்**

இவர்களை உதாசீனப்படுத்தி ஒதுக்குவதால் தான் தீவிரவாதத்தில் பற்று வைக்கிறார்கள். நிதியைக் கையாளும் அதிகாரம் உங்கள் கையில் உள்ள நிலையில், சரியான அணுகுமுறையைக் கையாண்டு, அதன் மூலம் அவர்களின் குறைகளைக் களைவதில் உங்களுக்கு எந்தத் தயக்கமும் இருக்கக்கூடாது.

ஆரம்ப நிலையில் உள்ள சவால்களைத் தீர்த்து வைப்பதில் எந்தத் தயக்கமும் காட்டக்கூடாது. தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் மாவட்ட ஆட்சியர்கள் இதற்கென சிறப்புத் திட்டங்களை வகுத்து – சிறப்புக் கவனத்துடன் தீவிரவாதத்தை எதிர்த்துச் செயல்பட வேண்டும்.

இன்றைய விவாதங்களில் வளர்ச்சித் திட்டங்கள் முழுப் பங்கினைப் பெற்றுள்ளது. திட்டங்களை – அதன்

குறிப்புகளை – அவற்றை அமல்படுத்துவது தொடர்பாக பயனுள்ள யோசனைகளை உங்களில் சிலர் தெரிவித்துள்ளீர்கள். இந்த அரிய யோசனைகளில் ஒரு பகுதி வர இருக்கிற வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் வகையில் அவற்றை கவனமுடன் பரிசீலிக்க வேண்டும்.

**குடிநீர்**

தென்மேற்குப் பருவமழை தவறியதால் ஏற்பட்ட பாதிப்புகளையும், வடகிழக்குப் பருவமழையால் ஏற்பட்டுள்ள நன்மைகளையும் பற்றி நாம் இங்கே விவாதித்தோம். அவற்றில் சில, அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சார்ந்தவை. அவற்றில் தலையாயது குடிநீர் வழங்குவது.

எதிர்மாறான பருவநிலைமையினால் பாதிக்கப் பட்ட மாவட்டங்களில், குடிநீர் வழங்கும் பணியை மேற்கொள்ள ரூ.30 கோடி ஒதுக்கி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து ஏற்பட்ட மூன்று பருவ காலங்களும் பொய்த்து விட்ட நிலையில் பல மாவட்டங்களில் நிரந்தர வருவாய் ஈட்டும் தேங்காய் விளைச்சல் பெரும் பாதிப்புக்கு ஆளானது. எனவே, பேரழிவு துயர் துடைப்பு காலத்தில் வழங்கப்படும் நிவாரண நிதிக்கான விதிகளை ஒட்டி ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.4,000 வழங்கி – உதவிட முடிவு செய்துள்ளேன்.

**தென்னை விவசாயிகளுக்கு ரூ.8 கோடி நிவாரணம்**

இந்தத் தொகை, தென்னை விவசாயிகள் தங்களது புதிய தென்னங்கன்றுகளை நடவும் வளர்க்கவும் அவர்களுக்கு கைகொடுக்கும். இவ்வகை நிவாரண உதவி அளிப்பதன் மூலம் அரசுக்கு ரூ.8.9 கோடி கூடுதலாகச் செலவாகும்.

எனவே நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் பருவநிலை தவறியதன் காரணமாக பாதிக்கப்பட்ட நிலம் மற்றும் விவசாயிகளின் நிலைமையைச் சரியாக கண்டறிந்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதுதான்.

இதில் கூடுதலாக தொகை ஏதேனும் தேவைப்பட்டால் அரசின் கவனத்துக்கு கொண்டுவந்து கூடுதல் மானிய உதவி கோரலாம் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**வரும் பருவத்துக்குள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கம்**

அடுத்தப்படியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்று தரிசுநில மேம்பாட்டுத் திட்டம். தரிசு நிலங்களை உடைய விவசாயிகளை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி தீவிர பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். வரும் விவசாயப் பருவ காலத்துக்குள் அனைத்துத் தரிசு நிலங்களையும் ஏர்முனைக்குக் கீழ் கொண்டுவரும் ஓர் புதிய வேளாண் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் விவசாயத்துக்கு மருத்துவ சிகிச்சை என்ற புதிய அணுகுமுறையுடன் அணுகி, நோயைக் கண்டறிந்து – தேவையான சிகிச்சைகளை வழங்க வேண்டும். அத்துடன் அந்த மண்ணுக்கு தேவைப்படும் விவசாயத்தை – அதன் விதைகளை வழங்குவதிலும் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறாக தரிசு நிலங்களை – விளைநிலங்க ளாக மாற்றுவதற்கு அதனை எடுத்துக் கொள்ளும் – பெரிய குழுமங்களை அடையாளம் கண்டு தெரிந்து கொள்வதிலும் – சிறிய தொழிற்சாலைகள் அல்லது வேளாண் வணிகத்தை துவக்குவதிலும் – தாவரங்களை எரிப்பதன் மூலம் ஏற்படும் சக்தியை பயன்படுத்தும் தொழிலகங்களை உருவாக்குவது போன்றவற்றிலும் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

**புதிய வேளாண் திட்டம்**

இந்த வகையான புதிய வேளாண் திட்டம் வரும் தைப்பொங்கல் அன்று துவக்கப்பட வேண்டும்.

இந்த மாநாட்டில், மழைநீர் அறுவடை குறித்த பல்வேறு வெற்றிகரமான நிகழ்வுகளையும், அதன் காரணமாக பற்றாக்குறை நீர்வள ஆதாரத்தை மேலாண்மை செய்வதில் ஏற்பட்ட நல்ல பயன்களையும், நான் இங்கே கேட்டுக் கொண்டிருந்தேன்.

இத்திட்டம் ஓர் இயக்கமாக உருவெடுக்க வேண்டும். இதனை ஒரு சவாலாகவும் ஏற்க வேண்டும். மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு கட்டடங்களிலும் மழைநீர் அறுவடை கட்டமைப்பை

ஏற்படுத்தித் தர ரூ.25 கோடி தொகையை ஒதுக்கீடு செய்து அளிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாநிலத்தின் ஒவ்வொரு நகரத்திலும் மழைநீர் சேகரிப்பு வசதியில்லாத கட்டடங்களோ, வீடுகளோ இல்லை என்னும் நிலையை உருவாக்குவதில் உங்களிடையே ஆரோக்கியமான ஒரு போட்டியை கொடியசைத்து துவக்கி வைக்கிறேன். மாவட்ட ஆட்சியர்களிடையே துவங்கி உள்ள இந்தப் போட்டியில் யார் வெல்லப் போகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

**பிளாஸ்டிக் கழிவைப் பிரித்து கழித்தலுக்கு முன்னுரிமை**

மற்றுமொரு முக்கிய முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ள வேண்டிய துறை ஒன்று உண்டென்றால் அது திடக் கழிவு பராமரிப்புதான். இதிலும், பிளாஸ்டிக் கழிவை முற்றிலுமாகப் பிரித்துக் கழித்தலுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

ஆரம்ப நிலையிலேயே, குப்பைக் கழிவுகளை வேறுபடுத்தி பிரிக்கும் புதிய தீர்வுகளை அமல்படுத்துவதிலும்; பிளாஸ்டிக் கழிவுகளைத் தனியாகக் கொட்டுவதற்கென நிலத்தை உருவாக்குவதிலும்; இந்த முயற்சியில் பங்கு பெற உள்ளாட்சி அமைப்புகளையும், அரசு சாரா நிறுவனங்களையும், ஒருங்கிணைப்பதிலும் இதனை அமல்படுத்துவதில் உங்களில் பலர் மிகுந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

இந்தப் பிரச்சாரமும், மக்கள் சார்ந்த இயக்கமாக மாற்ற வேண்டும்.

பொது சுகாதாரமும், சுத்தமும் பராமரிக்கப் படுவதன் மூலம், பொது சுகாதாரத்தை மேன்மைப்படுத்தும் போராட்டத்தில் நாம் பாதி வெற்றியடைந்ததாக எடுத்துக் கொள்ளலாம்.

எனவே, கிராமங்களையும், நகரப் பஞ்சாயத்துக் களையும், நகராட்சிகளையும், மாநகராட்சிகளையும் தூய்மைப்படுத்தும் ஒரு சிறப்புத் திட்டத்தை நீங்கள் துவக்கி நடத்த வேண்டுமென நான் விரும்புகிறேன்.

2003 தைப் பொங்கலுக்குள் இதன் விளைவு அனைவருக்கும் கண்களால் பார்க்கும் வண்ணம் வெளிப்பட வேண்டும். அதற்குப் பிறகும் இந்த இயக்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

**மதிய உணவுப் பயனாளிகளுக்கு 35 பைசாவாக அதிகரிப்பு**

ஊட்டச்சத்து மற்றும் மதிய உணவு திட்டத்திலும், சுகாதார முறைகள் கடைபிடிக்கப்படுவதிலும் தயவு செய்து கவனம் செலுத்துங்கள். அதில், சுகாதார மற்றும் சமூக நலத்துறை அலுவலர்களையும் இணைந்து பணியாற்றும் அணுகுமுறையை கடைபிடியுங்கள். கடுமையான நிதி தட்டுப்பாடு உள்ள சூழ்நிலையிலும்; ஒரு நாளைக்கான காய்கறிக்காகவும்; பிறவற்றிற் காகவும், தற்போது ஒதுக்கப்பட்டு செலவிடப்படும் பயனாளி ஒருவருக்கான செலவு 23 பைசா என்பதை மேலும் 12 பைசா என உயர்த்தி வழங்கும் அறிவிப்பை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதன் மூலம் இது 35 பைசாவாக அதிகரிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 81.50 இலட்சம் பயனாளிகள் பயன்டைகின்றனர். இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.20.98 கோடியாகும்.

ஒவ்வொரு நாளும் தரமான பசுமையான கூடுதல் காய்கறிகளை, விலை கொடுத்து வாங்க இது உதவி செய்யும்; இதனால் ஒவ்வொரு பயனாளிக்கும் உயர் ஊட்டச்சத்து மிகுந்த உணவு கொடுக்க முடியும்.

**நெசவாளர்களுக்கு ரூ.48 கோடியில் புதிய திட்டம்**

இலவச வேட்டி–சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், ஆரம்பத்தில் வேட்டி–சேலைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்த கைத்தறி நெசவாளர்களுக் கான, ஓர் ஆக்கப்பூர்வமான ஆதரவு தரும் வகையில்; இந்தத் திட்டத்தை முற்றிலும், சந்தை சார்ந்த உற்பத்தித் திட்டமாக மாற்றி அமைத்துள்ளோம்.

நடப்பு ஆண்டில் ரூ.47.41 கோடி செலவில் இந்தப் புதிய திட்டம் அமல்படுத்தப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும், வேட்டிகளும் – சேலைகளும், நியாய விலை கடைகள் மூலம் ஒரு நிரந்தர அடிப்படையில், எல்லோரும் பணம் கொடுத்து வாங்கும் வகையில் விற்கப்படும்.

புதிய வடிவமைப்பும், புதிய உற்பத்தித் தொழில்நுட்பமும் கொண்டு தயாரிக்கப்படும் துணி வகைகளுக்கு, பொதுமக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருக்கும்.

இந்தச் சேலை–வேட்டிகளின் விற்பனையை அதிகப்படுத்துவதிலும், மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

1996–2001ஆம் ஆண்டு காலகட்டத்தில், போதிய கவனத்தை பெறாத அல்லது கவனத்திற்கே எடுத்துக் கொள்ளப்படாத, சாலைகளின், பரிதாப நிலைகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பல மாவட்ட ஆட்சியர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான நிதி நெருக்கடி நிலைமை, நம்மீது சுமத்தப்பட்ட நிலையில், பெரிய அளவிலான எந்த ஒரு திட்டத்தையும் எடுத்து, செயல்படுத்திட முடியாத நிலையில், இப்பொழுது நீங்கள் இந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். ரூ.90 கோடி மதிப்பில், 2,500 கி.மீ. தூரமுள்ள சாலைகளை மறுபடியும் போடும் ஒரு மாபெரும் திட்ட நடைமுறையை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

2003–ஜனவரி 1ஆம் தேதி முதல், இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்றப்படும்.

எனவே, எதிர்வரும் நிதி ஆண்டில், அதாவது 2003–2004இல் கூடுதலாக மேலும், ரூ.180 கோடியில் 5 ஆயிரம் கி.மீ. தூர சாலைகள் மறு சீரமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட ஆட்சியர்கள் நெடுஞ்சாலைத் துறையினருடன் இணைந்து பொதுமக்கள் திருப்தியுறும் அளவில் முன்னுரிமை அடிப்படையில், இந்தச் சாலை சீரமைப்புப் பணியை மேற்கொள்ள நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## நீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க வழி

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உடனடியாக 50 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி முதல் கட்டமாக மாவட்டங்களுக்கு வழங்கப்படும். தேவையைப் பொறுத்து கூடுதலாகவும் அரிசி வழங்கப்படும். இந்த ஒதுக்கீட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியாயமாக தேவையான இடத்திற்கு வழங்க வேண்டும். குறிப்பாக வறட்சி நிவாரணப் பணிகளாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, கால்வாய் சீரமைப்பு, உபரித் தண்ணீரை பஞ்சாயத்து குளங்களுக்கு திருப்பி விடுவது, சிறிய குளங்கள், ஏரிகள். பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள பெரிய ஏரிகள் ஆகியவற்றைச் சீரமைக்க முன்னுரிமை அளிக்கவேண்டும். இதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க வழி கிடைக்கும்.

நல்ல நிர்வாகம் என்பதுதான் நமது தாரக மந்திரம். உங்கள் மாவட்டத்தில் நல்ல நிர்வாகத்தைக் கொடுக்க ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். இதற்காக உள்ளாட்சிகளின் மேலாண்மைத் திறமையை அதிகப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். குறிப்பாக பணியில் திறமையை காட்டுவதன் மூலம் சேவையைச் செழுமையாக்க முடியும். தகவல் தொழில்நுட்பத்தையும், மக்களின் கூட்டு முயற்சிகளையும் மேலாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும். தகவல்களை ஒருங்கிணைப்பது, தகவல் பரிமாற்ற செலவினங்களை குறைப்பது, சுயஉதவிக் குழுக்களைப் பயன்படுத்திக் கொள்வது ஆகியவை அனைத்தும் உங்கள் மாவட்டத்தில் நல்ல நிர்வாகத்தை உருவாக்கும் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் நாம் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைக் கண்காணிப்பதை விட நாம் எப்படி செலவு செய்கிறோம் என்பதைத்தான் கண்காணிக்கிறார்கள். இதுதான் அவர்களின் முக்கிய பிரச்சினையும்கூட. இதனை நீங்கள் பிரதானமாக உங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## ரூ. 4 கோடியில் தொடுதிரை கணினி

தகவல் தொழில்நுட்பம் மேலாண்மை விஷயத்தில் அடுத்த ஆண்டில் மீதமுள்ள 177 தாலுகா அலுவலகங்களிலும் மக்கள் தாங்களாகவே தகவல் அறிந்து கொள்ள பயன்படும் தொடுதிரைக் கணினி நிறுவப்படும். இவை அனைத்தும் இணையதளத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். இந்த திட்டம் ரூ.4 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

மக்களுக்கு திறமையான, அவர்கள் மீது அக்கறை கொண்ட ஒரு நிர்வாகத்தை அளிப்பதில் அரசு மாவட்ட ஆட்சியர்களைத்தான் நம்பியுள்ளது.

அடித்தட்டு மக்களுக்காக நீங்கள் அக்கறையெடுக்கிறீர்கள் என்பதும் நீங்கள் அவர்கள் விஷயங்களில் கவனம் செலுத்துகிறீர்கள் என்பதும் உங்கள் நடவடிக்கைகளில் வெளிப்பட வேண்டும். நாம் இங்கே கூடியிருப்பது, நடைபெற்றுள்ள திட்டங்களின் முன்னேற்றம் குறித்துப் பரிசீலிப்பது, இலக்குகளைத் தீர்மானிப்பது அடுத்து 'கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பகுதிகள் குறித்து முடிவு செய்வது இவை அனைத்தும் மக்களுக்கு சேவை செய்வதற்குத்தான். ஒவ்வொரு கோப்புக்கு பின்னாலும் ஒரு மனித முகம் இருக்கிறது. ஒவ்வொரு வளர்ச்சி அறிக்கையின் பின்னாலும் ஒரு மனிதன் இருக்கிறான். ஒவ்வொரு அறிக்கைக்குப் பின்னாலும் மக்களின் பிரச்சினை இருக்கிறது. இன்று இந்த மாநாட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக விருதுகள் பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அவர்களைப் போல் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 3 நாட்களாக நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள்– போலீஸ் அதிகாரிகளுடன் நடந்த ஆலோசனையின் அடிப்படையில் சில புதிய திட்டங்களை இங்கு அறிவிக்கின்றேன்.

### தருமபுரி மாவட்டத்தில் புதிய மின் நிலையம்

1. ரூ. 2 கோடி செலவில் தருமபுரி மாவட்டம் தென்கனிக்கோட்டை தாலுகாவிலுள்ள அஞ்செட்டி கிராமத்தில் புதிய துணை மின்நிலையம் அமைக்கப்படும்.

2. டிசம்பர் மாத இறுதிக்குள், தருமபுரி மாவட்டம் தென்கனிக்கோட்டை தாலுகாவிலுள்ள கெம்பக்கரை குடியிருப்பு பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்.

3. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் ரோந்து காவல்படை மற்றும் போக்குவரத்து சீரமைப்பு காவல் மையங்கள் மாற்றியமைக்கப்பட்டு நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து ஒழுங்கு மேம்படுத்தப்படும்.

4. கடலில் மீன்பிடிக்க செல்லும் விசைப்படகு மற்றும் பாரம்பரிய கட்டுமரம் கட்டுப்பாடுகளை மாற்றியமைத்து தமிழக கடல் மீன்பிடி பகுதியில் சீரமைப்பு சட்டம் 1983 திருத்தி அமைக்கப்பட்டு வரும் (அடுத்த) பட்ஜெட் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும்.

5. தேனி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் உடல் ஊனமுற்ற சிறுவர்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் மறுவாழ்வுக்காகவும் புதிய சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

6. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூடுவதற்கும், கூட்டம் நடத்துவதற்கும் அரசின் குழந்தை நலக் காப்பகங்கள் நடக்கும் கட்டடத்தில் இடம் அளிக்கப்படும். மாலையில் குழந்தைகள் வீட்டிற்கு சென்றபின் இந்த இடங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூடவும், கூட்டம் நடத்தவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

### திருச்சி மலைப்பகுதிகளுக்கு மின் இணைப்பு

7. திருச்சி மாவட்டத்தில் பச்சமலை தொடர்ச்சியில் உள்ள குண்டூர், சின்னப்பாலமலை, பெரியபாலமலை ஆகிய ஊர்களில் உள்ள மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு, வரும் பொங்கல் பண்டிகைக்கு முன்பு மின் இணைப்பு கொடுக்கப் படும்.

8. திருச்சி மாவட்ட எல்லையில் இருந்து பச்சமலைக்கு செல்லும் 16 கி.மீ. நீளமுள்ள மலைப்பாதை உடனடியாக மேம்படுத்தப்படும்.

9. தாத்தையங்கார்பேட்டையை ஒட்டி உள்ள விடுபட்ட 94 குடியிருப்பு பகுதிகளும் திருச்சி மாவட்டக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படும்.

10. திருச்சி அரசு பொது மருத்துவமனை மேலும் விரிவாக்கப்பட்டு நவீனப்படுத்தப்படும். இந்த மருத்துவமனையில் டயாலிசிஸ் மற்றும் பிளாஸ்மா நீக்கும் நவீன உபகரணங்கள் நிறுவப்படும்.

11. திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.78.70 கோடி செலவில் உடனடியாக செயல் படுத்தப்படும்.

12. கல்குவாரிகள் மழைநீர் சேகரிப்புக்கு பயன்

படுத்தப்படும். அதன் மூலம் கிடைக்கும் நீரை அருகில் உள்ள நகரங்களுக்குக் குடிநீராக விநியோகிக்கப்படும். அவ்வாறு பயன்படுத்த முடியாத கல் குவாரிகளை குப்பைகள் மூலமாக அவற்றை நிரப்பி, மக்கள் பயன்படுத்தும் வகையில் செப்பனிடப்படும்.

**எரிசக்தித் தேவைக்கு காட்டாமணக்கு பயிர்**

13. தாவர எரி எண்ணெய் கொடுக்கும் காட்டாமணக்குப் பயிரை மாற்றுப் பயிராக பயிரிட மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு எண்ணெய் பிரித்தெடுக்கும் மையம் அமைக்க வழிவகை செய்யப்படும். இதன் மூலம் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

14. மேற்கு மாவட்டங்களில் சர்க்கரை வள்ளிக்கிழங்கை விவசாயிகள் அதிகம் பயிரிட ஊக்குவிக்கப்படும். இந்த கிழங்கில் இருந்து கிடைக்கும் எத்தனால், பெட்ரோலுடன் கலந்து பயன்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல் மாசின்றிப் பாதுகாக்கப்படுகிறது. இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.

15. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு புதிய உந்துதல் சக்தியும் அளிக்கப்படும். குறிப்பாக ஆண்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ள ஊக்குவிக்கப்படும்.

16. கட்டுப்பாடுகள் இல்லாமல் வெண்கருவேல் மரங்கள் வெட்டப்படுவதை தடுக்க, மரம் வணிக கட்டுப்பாட்டுச் சட்டத்திற்குள் இந்த மரவகையும் சேர்க்கப்படும்.

17. வைகை அணை நீர்பிடிப்புப் பகுதிகள் தூர்வாரப்பட்டு அதன் சரியான கொள்ளளவு பராமரிக்கப்படும்.

18. வைகை அணையில் சுற்றுலாப் படகுகள் விடப்படும்.

19. பெரியகுளம் மாவட்ட மருத்துவமனைக்கு பல்வேறு துறை சார்ந்த மருத்துவ வல்லுநர்கள் உடனடியாக நியமிக்கப்படுவார்கள்.

**ரூ.4 கோடியில் சோத்துப்பாறை குடிநீர் திட்டம்**

20. தேனி மாவட்டத்தில் சோத்துப்பாறை குடிநீர்த் திட்டம் ரூ.4.85 கோடி செலவில் செயல்படுத்தப் படும்.

21. தேனி மாவட்டத்தில் ரூ.95 இலட்சம் செலவில் மீனாட்சிபுரம் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் படும்.

22. ஈரோடு மாவட்ட அரசு தலைமை பொது மருத்துவமனையில் புதிய லிப்ட் வசதி உடனடியாக அமைக்கப்படும்.

23. விருதுநகர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் ஆனைக்குட்டை அணையின் பழுதடைந்த பகுதிகள் உடனடியாக சரி செய்யப்படும்.

**நாகைத் துறைமுகத்தில் விரைவில் சரக்குக் கப்பல்**

24. நாகப்பட்டினம் துறைமுகத்தில் சரக்குதளம் அமைக்க உடனடியாக நிதி ஒதுக்கப்படும். விரைவில் சரக்கு கப்பல்கள் கையாள நடவடிக்கை எடுக்கப்படும்.

25. நாகப்பட்டினத்தில் மக்கள் வளர்த்துள்ள மரக்கன்றுகளை மாற்று இடத்தில் பிடுங்கி நடும் பணியை ரூ.5.29 இலட்சத்தில் வனத்துறை மேற்கொள்ளும்.

26. வேதாரண்யம் தாலுக்காவில் உள்ள நாலுவேதபதி என்ற இடத்தில் சுற்றுலா பூங்கா அமைக்க சுயசார்பு திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் ஒதுக்கப்படும்.

27. திண்டுக்கல் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் ரூ.91.35 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

28. எல்லா தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளிலும் தொலைபேசித் தொடர்புகள் உடனடியாக வழங்கப்படும்.

29. 385 ஒன்றிய ஆரம்ப சுகாதார மையங்களும் 30 படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றி

அமைக்கப்பட்டுத் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும்.

30. திண்டுக்கல் மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் பழுதடைந்து செயல்படாமல் இருக்கும் அறுவைச் சிகிச்சை அரங்கு உடனடியாக சீர்படுத்தப்படும்.

31. கொடைக்கானல் நகராட்சிக்கு சந்தை மதிப்பில் பேருந்து நிலையத்தில் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்த இடம் ஒதுக்கப்படும்.

32. ஆற்காடு நகரத்தில் உள்ள கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் சேதமடைந்து உள்ளதை ரூ.45 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும்.

33. கும்பகோணம் மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிகளுக்குப் புதிய பிரிவு துவக்கப்படும்.

**500 மருத்துவர்கள் நியமனம்**

34. மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கையை தேவையான அளவிற்கு அதிகரிக்க சுமார் 500 பல்வேறு துறையைச் சேர்ந்த பொது மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

35. திருவண்ணாமலை மாவட்டத் தலைமை மருத்துவமனையில் தற்போது உள்ள 294 படுக்கை வசதியுடன் கூடுதலாக 50 படுக்கை வசதி ஏற்படுத்தப்படுவதுடன் நோயாளிகளின் தேவைக்கு ஏற்ப கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

36. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெண்கள் கல்லூரி கட்டட வளாகம் கட்டும் பணிக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.

37. இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 15 கிராமங்களை இணைப்பதற்காக ரூ.4 கோடி செலவில் கரந்தல் அருகிலும், மற்றொன்று ஆலங்குளம் அருகே உள்ள நாத்திபாலத்திலும் இரண்டு பாலங்கள் அமைக்கப்படும்.

38. அனைத்து மாவட்டங்களிலும் நில ஆவணங்களைக் கையாளுவதற்கு வசதியாக, கணினி, பிரிண்டர்கள், ஸ்கேனிங் உபகரணங்கள் வாங்க ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.

39. மாவட்டங்களில் உள்ள கிராம நலச் செவிலியர்கள் வாடகைக்கட்டடங்களில்இருந்து பணியாற்றும் இடங்களில் அதன் அருகில் ரூ.70 ஆயிரம் செலவில் மகப்பேறு மருத்துவ மையம் தேவைப்படும் கிராமங்களில் உடனடியாக அமைக்கப்படும்.

40. பெரம்பலூர், தேனி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக இளம் பெண்களை பாதிக்கும் 'ருபெல்லா' நோயை அழிக்க தடுப்பு ஊசிகள் போடப்படும்.

**29 மாவட்ட ஆட்சியர்களுக்கு லாப்டாப் கம்ப்யூட்டர்கள்**

41. 29 மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் லாப்–டாப் கம்ப்யூட்டர்கள் வழங்கப்படும்.

42. அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தொழில் தொடங்க முதலீட்டு உச்ச வரம்பு ரூ.35 இலட்சத்தில் இருந்து ரூ.25 இலட்சமாக குறைக்கப்படுகிறது. இதன் மூலம் பஞ்சாயத்து ஒன்றியங்களில் அதிகப்படியான தொழில் நிறுவனங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படும்.

43. கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக ஆண்களுக்காகத் தனிக் கழிவறை திட்டம் செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.

44. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை அணையின் மதகுகள் ரூ.23 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

45. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 37 நகரியங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களாக நிலை குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் திட்ட நிதி அதிகமாகப் பெற ஏதுவாகும்.

46. மதுராந்தகம் உயர்நிலை வாய்க்கால் ரூ.1 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

மேலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் லட்சியத்தை மேற்கொண்டு வருகிறேன். பல்வேறு தடைகள் உள்ள போதும் எனக்கு தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் நம்பிக்கை இருக்கிறது. எனவே நீங்கள் முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

*– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*
*11.12.2002 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள்*
*மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை*

# தமிழக இளம்மகளிர் கூடைப்பந்து அணிக்கு தமிழக முதலமைச்சர் பாராட்டு!

அண்மையில் பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் நகரில் தேசிய அளவிலான இளம் மகளிர் கூடைப் பந்து போட்டி கடந்த 2002 அக்டோபர் திங்கள் 13 முதல் 19 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்கேற்ற தமிழக இளம் மகளிர் அணி, வலிமை மிக்க வட மாநில அணிகளை வென்று சாம்பியன் பட்டம் பெற்றது. தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த இந்த கூடைப்பந்து வீராங்கனைகள் 13.12.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, இளம் மகளிர் கூடைப்பந்து அணி கேப்டன் எல். பிரியா தலைமையில், அமலஜோதி, ரேவதி, விஜயலட்சுமி, காயத்ரி, சோபியா தாமஸ், தீபிகா, அபிநயா, சந்தானலட்சுமி, மகாலட்சுமி, காவியா, கிருத்திகா ஆகிய வீராங்கனைகளும், பயிற்றுநர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, மேலாளர் திரு.பி. என். சபாநாயகம், ஆகியோரும் சந்தித்தனர்.

தமிழக இளம் மகளிர் கூடைப்பந்து அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டம் பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெகுவாகப் பாராட்டி வீராங்கனைகள் அனைவருக்கும் தமது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். ●

□ குல்வந்த் சிங் விர்க்

தாதிகார கிராமம் அமிர்தசரஸிலிருந்து அதிகத் தொலைவில்லை. நன்கு சமனிடப்பட்ட சாலைக்கருகில் உள்ளதால் அது வசதி உடைய கிராமங்களில் ஒன்றாகும். ஆனால் மான்சிங்கின் பயணத்தைத் தூண்டிய உற்சாகம் எவ்வளவு தூரத்தையும் எளிதானதாகச் செய்துவிடும். மாலை நேர நிழல் பரவ ஆரம்பித்தது. டாங்கா வண்டியின் குதிரை களைத்திருந்தாலும் மான்சிங் சிறிது கூடக் கவலைப்படவில்லை.

இராணுவக்காரனான இளைஞன் மானசிங் விடுப்பில் தனது நண்பனான கரம்சிங்கின் கிராமத்துக்குச் சென்று கொண்டிருந்தான். மனித உறவுகள் இராணுவ சேவையில் வளருவது போல வேறெங்கும் ஆழமாக வளருவதில்லை. மான்சிங்கும் கரம்சிங்கும் ஒரே படைப்பிரிவு மையத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் இணைந்து பர்மா போர் முனையில் போரிட்டார்கள். முன்னதாகவே சேர்ந்தவன். இப்போது ஹவில்தாராக இருக்கிறான். மான்சிங் சற்று முன்புதான் நாயக்காக உயர்ந்திருந்தான்.

கரம்சிங் எப்போது விடுப்பில் வரப்போகிறான் என்று கரம்சிங்கின் கிராமத்தார் அவனுடைய தந்தையிடம் கேட்ட வண்ணமே இருந்தனர். அவன் அனைவருக்கும் அவ்வளவு வேண்டியவன். அவன் பேச்சு பிடிக்காதவர் கிடையாது. அவன் பக்கத்திலேயே அமர்ந்து அவனுடைய போர் அனுபவங்களைக் கேட்ட வண்ணமே இருப்பார்கள். அந்தக் கிராமத்தில் அவன் ஒருவன் தான் இராணுவத்தைச் சேர்ந்தவன் என்றில்லை. வேறு சிலரும் இருந்தனர். ஆனால் அவர்கள் கிராமத்துக்கு வரும் போது ஊர்க்காரர்களிடம் பேசுவதற்கு விஷயமே இல்லாதது போலிருக்கும். சம்பிரதாய உபசரிப்புக்கு மேல் ஏதும் நேராது. ஆனால் கரம்சிங் விஷயமே வேறு. அவன் கிராமத்திலிருக்கும் போது அவனுக்காக காலைக்குளியல் கிணற்றருகே நிறையப் பேர் காத்திருப்பார்கள். குளிர்காலத்தில் நள்ளிரவு வரை நிலக்கடலைக்காரன் அடுப்பு தணியும் வரை கரம்சிங்கோடு பேசிக் கொண்டிருப்பார்கள். கரம்சிங்கன் பேச்சுக்கும் உற்சாகத்துக்கும் முடிவே இல்லாதது போல இருக்கும்.

கரம்சிங் அவனுடைய அணியில் நன்கு துப்பாக்கி சுடுபவன் என்று பெயர் பெற்றிருந்தான். துப்பாக்கி சுடும் போட்டிகளில் அவனுடைய குண்டுகள் குறி தவறாது வட்ட இலக்கின் நடுவில் தையல் இட்டது போலத் துளையிட்டிருக்கின்றன. மரக் கிளைகளில் ஒளிந்து கொண்டிருந்த பல ஜப்பானியச் சிப்பாய்கள் அவனுடைய துப்பாக்கிக்கு வீழ்ந்திருக்கிறார்கள். ஜப்பானிய குண்டுகளுக்குப் பலியான தனது நண்பர்களுக்கு அவன் இவ்வாறு ஈடுகட்டி அவனுடைய அணியின் காயமுற்ற இதயத்தைத் தேற்றினான். ஒரு முழு இயந்திரத் துப்பாக்கியின் தோட்டாக் கொத்து தவறவிட்டதை அவனுடைய ஒரு குண்டு அடித்துவிடும். அவனுடைய கைகால்கள் இளமைக்குரிய இணக்கத்தை இழந்திருந்தாலும் அவனுடைய உடற்பயிற்சி வித்தைகள் மக்களை இன்னமும் வியப்பிலாழ்த்திக் கொண்டிருந்தன.

போர் நாட்களில் கசரத்து மற்றும் இதர விளையாட்டுகள் தடை செய்யப்பட்டிருந்தன. விரைத்த சீருடையில் இசைக்கேற்ற ஊர்வலம் எல்லாம் கிடையாது. சாதாரண உடையில் வெளியில் சென்று ஏதாவது வாங்குவதற்குக் கடை கண்ணி ஏதும் அருகில் கிடையாது. எவனும் தன் ஊர்க்காரர்கள் யாரையும்



# பூமி பாரத்தைச் சுமக்கும் காளைமாடு

சந்திக்க இயலாது. விடுப்பு எடுத்துச் செல்ல மான்சிங்கின் முறை வந்தபோது கரம்சிங் சிறிது பொறாமைப்பட்டான். அவனும் உடன் செல்ல ஆசைப்பட்டான். விடுப்பு கிடைத்தாலே அது சாத்தியம். இருவரும், சேர்ந்தே விடுப்பு நாட்களைக் கழிக்கலாம். சுஹர்கான் அமிர்தசரஸிலிருந்து அதிகத் தொலைவில்லை. ஐம்பது மைல்தான் இருவர் ஊர்களையும் பிரித்தாலும் ஒன்று பழமையில் வேரூன்றியுள்ள மஜ்ஹா என்ற பகுதியிலும் இன்னொன்று அண்மையில் உருவான பார் என்ற பகுதியிலும் இருந்தது



விடுப்பு கிடைப்பது சிரமமான காலம் எப்படி அதிசயமாகச் சில அதிர்ஷ்டசாலிகளுக்குப் பராக்கிரமத்தைக் காட்டியப் பதக்கங்கள் வெல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றதோ அவ்வாறுதான் சிலருக்கே விடுப்புக் கிடைத்தது. மான்சிங் இராணுவ வண்டியில் ஏறிக்கொண்டு கிளம்புகிற தருணத்தில் கரம்சிங் அவனுக்கு விடையளிக்கும் போது சொன்னான்: நீ திரும்பி வருவதற்குள் என் கிராமத்துக்குச் சென்று என் மனிதர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டும். நானே வந்தது போல நினைத்துக்கொள்வார்கள். நான் உன்னை மறுபடியும் பார்த்த என் மனிதர்கள் பற்றித் தகவல் அறியும்போது அவர்களை நானே நேரில் பார்த்து போல இருக்கும்".

மான்சிங்குக்கு தன் ஊர் இருக்கும் இடத்தைப் பற்றி அறிய வைப்பது போல அவன் கேட்டான், "நீ அந்தப் பக்கம் போயிருக்கிறாயா ?"

"இல்லை, அமிர்தசரஸ் வழியாகச் சென்றிருக்கிறேனே தவிர, அதற்கப் பால் போனது இல்லை".

"ஓ, அங்கே நிறையக் குருத்வாராக் களாக இறைந்து கிடைக்கும் தன் தரன், காதூர் சாஹப்,வீட்டு மனிதர்களையும் பார்த்துவிட்டு வரலாம். நான் அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்_" கரம்சிங் அவன் சிந்தனையாகவே உற்சாகமாகப் பேசிக் கொண்டே போனான்.

மான்சிங் அவனுடைய விடுப்பு நாட்கள் முடியும் தருவாயில் அக்காரணத் திற்காகத்தான் கரம் சிங்கின் கிராமம் நோக்கிக் குதிரை வண்டியில் போய்க் கொண்டிருந்தான்.

கரம்சிங் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த பெரியவரைப் பார்த்து, "நான் தான் மான்சிங், ஐயா, சுஹர்கானிலிருந்து வருபவன்," என்று கூறி வணங்கினான்.

''வா, இப்படி உட்கார்'', என்று அந்தப் பெரியவர் சொன்னாலும் அவர் வேறேதோ நினைவில் இருப்பது போலத் தோன்றியது.

மான்சிங் சென்று ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது உட்கார்ந்தான். அவன் வருகையால் பெரியவர் எதோ சங்கடப்படுவது போலிருந்தது. அவர் கண்கள் மான்சிங்கை நோக்காமல் எங்கெங்கோ அலைந்தன. அதன் பிறகு அவை தரையைப் பார்த்த வண்ணம் உறைந்தன.

மான்சிங் சாதாரணமாகப் பொறுமையுடையவன் தான். ஆனால் இந்த வரவேற்பு விசித்திரமாயிருந்தது. இப்பெரியவர் கரம்சிங்கின் தகப்பனார் அல்லவோ என்றும் நினைத்தான்.

பெரியவர் கவனத்தைத் தன் மீது திருப்பும் வகையில்,"தாங்கள் தானே கரம்சிங்கின் அப்பா ? நான் இங்கு வருவது பற்றி எழுதியிருந்தானா ?" என்று கேட்டான்.

''ஆமாம், நீ எங்களை வந்து பார்ப்பாய் என்று எழுதியிருந்தான்." இதைச் சொல்லிவிட்டுப் பெரியவர் எழுந்து முற்றத்துக்குச் சென்றார். அங்கிருந்த எருமைக் கன்றை ஓரிடத்திலிருந்து அவிழ்த்து இன்னோர் இடத்தில் கட்டினார். கன்றைத் தட்டிக் கொடுத்துக் கையை நக்கக் கொடுத்தார். பிறகு வீட்டினுள் சென்று மான்சிங் வந்திருப்பதை அறிவித்த அவனுக்குத் தேநீர் அனுப்பச் செய்தார். வீட்டின் முன்புறம் செல்ல அஞ்சுவது போல முற்றத்திலேயே தயங்கினார். இம்முறை குதிரைக் குட்டியிடம் சென்றார். அதன் முன் வைத்திருந்த தீவனத்தைக் கிளறிவிட்டு இன்னும் கொஞ்சம் கொள்ளு அதில் தூவினார்.

கடைசியாக விருந்தாளியிடம் வந்து சேர்ந்தார். ஆனால் எதையோ இழந்து போயிருந்தார்.

அச் சங்கடமான நிசப்தத்தை முடிவுக்குக் கொண்டு வர எண்ணி, "ஜஸ்வந்த்சிங் எங்கே ?" என்று மான்சிங் கேட்டான். கரம்சிங்குக்கு ஒரு தம்பி உண்டு என்று அவனுக்குத் தெரியும்.

"வைக்கோல் வண்டி அழைத்து வரப்போயிருக்கிறான். இதோ வந்து விடுவான்".



"சத் ஸ்ரீ அகால், பேஜி", மான்சிங் ஒரு மகனுக்குரிய அன்போடு அவளை வணங்கினான்.

ஏதோ சொல்ல விரும்பியது போல அந்த முதியவளின் உதடுகள் துடித்தன. ஆனால் அவள் பேசவில்லை. மான்சிங் தேநீர் குவளையையும் கோப்பையும் வாங்கிக் கொள்ள அவள் உள்ளே சென்றுவிட்டாள்.

இந்த மஞ்ஹாக்காரர்களே விநோதமானவர்களாக இருக்கிறார்களே என்று மான்சிங் கூறிக்கொண்டான். அவனுக்கு அவமானமாக இருந்தது. ஆனால் இப்போது வேறு வழியில்லை. இன்றிரவு இங்கே தங்கித்தான் ஆக வேண்டும். ஆனால் நாளை பொழுது விடிந்தவுடனேயே போய்விட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

ஆனால் இரவில் ஜஸ்வந்த்சிங் வந்த பிறகு பேச்சு சிறிது தளர்ந்தது.

"கரம்சிங்கின் குறி இந்த பர்மாப் போரிலேயே மிகவும் புகழ் பெற்றுவிட்டது. அவன் துப்பாக்கி விரையைத் தட்டி விட்டால் போதும், உடனே ஒரு ஜப்பானியன் கீழே விழுவான். எங்கே எப்படி என்று யாருக்கும் தெரியாது. அவனோடு தான் போவோம். ஆனால் எப்படி அவனுக்கு மட்டும் இந்த ஒளிந்திருப்பவர்களைக் கண்டு பிடிக்க முடிகிறதோ.."

மான்சிங் பேச்சை சிறிது நிறுத்தினான். கரம்சிங் பற்றியும் ஜப்பானியரைப் பற்றியும் யுத்தத்தைப் பற்றியும் நிறையக் கேள்விகள் இருக்கும். அவனுக்குச் சொல்ல நிறைய சேதிகள் இருந்தன. அப்போதுதான் அவனுடைய நெஞ்சின் பளு குறையும். ஆனால் அவன் பேசுவதை யாருமே காது கொடுத்துக் கேட்கவில்லை போலிருந்தது. யாருக்குமே விருப்பமில்லை.

நீண்ட உப்புச்சப்பற்ற மௌனம். "எப்போது பாசனத்துக்குத் தண்ணீர் விடுகிறார்களாம்?" என்று பெரியவர் ஜஸ்வந்தைக் கேட்டார்.

"நாளை மறுநாள், காலை மூன்று மணிக்கு".

ஜஸ்வந்த் இப்படி நேரம் பற்றிச் சொன்னது மான்சிங்குக்கு அவனுடைய பேச்சைத் தொடர ஒரு வாய்ப்புக் கொடுத்தது. "பட்டாளத்தில் இருப்பதால் கரம்சிங் இப்படி அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியதில்லை. காலை நேரத்தில் தூங்குவது அவனுக்கு மிகவும் பிடிக்கும். எங்கள் கோஷ்டியில் அவன் தான் கடைசியாக எழுந்திருப்பான்".

அவனுடைய நண்பன் பற்றி மான்சிங்கான் களைப்பேயில்லாமல் பேசிக் கொண்டேயிருக்க முடியும். ஆனால் அவன் இப்போது பேசியது கூட இவர்கள் யாரிடமிருந்து எவ்வித ஆர்வமும் எழுப்பவில்லை.

சாப்பாட்டு நேரம் வந்தது. விருந்தாளிக்காக விசேஷச் சமையல். மான்சிங் உணவருந்துகையில் ஜஸ்வந்த் அவனுக்கு விசிறிக்கொண்டிருந்தான். ஆனால் ஏனோ கவனிப்பு போதாது என்று மான்சிங்குக்குத் தோன்றியது.

சாப்பிட்டு முடிக்கும் நேரத்தில் கரம்சிங்கின் குழந்தை தவழ்ந்து கொண்டுவந்தான். வேறு யாரிடம் பேச முடியாது போனாலும் குழந்தையிடமாவது பேசலாமல்லவா? குழந்தையை மடி மீது வைத்துக் கொண்டு மான்சிங் அவனோடு கொஞ்சினான். "அப்பாகிட்டே போகலாமா? அப்போ என்னோடு வா. அங்கே ஒரே மழையாயிருக்கிறது. நீ தண்ணீரில் தொப்பலடித்து விளையாடலாம்".

மான்சிங் கூறியது பெரியவரைத் துன்புறுத்தியது போலிருந்தது. "குழந்தையைத் தூக்கிக் கொண்டு போ! அமைதியாகச் சாப்பிடவிட மாட்டான்!" பெரியவர் கத்தினார். அவர் மனைவி உடனே வந்து குழந்தையை தூக்கிப் போனாள்.

மான்சிங் வாயில் இட்ட உணவு அப்படியே தொண்டையில் அடைத்துக் கொண்டது. அந்த வீட்டில் நிலவியஇறுக்கத்தை அவனால் இனியும் தாங்க முடியாது. காலைப் பயணம் பற்றி விசாரித்தான்.

"இங்கிருந்து தரன்தரன் எவ்வளவு தூரம்?"

"நான்கு மைல்"

"காலையில் டாங்கா கிடைக்குமா?"

"கவலைப்பட வேண்டாம். ஜஸ்வந்த் கூட வருவான். நீங்கள் இருவரும் எல்லா இடங்களையும் பார்க்கலாம்".

மான்சிங்குக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. ஜஸ்வந்த் ஓர் உம்மணாமூஞ்சி அல்ல.

ஆனால் மான்சிங்கோடு வெளியே செல்லும்போது அவன் வாயும் ஏனோ மூடிக் கிடந்தது. வழியில் யாராவது தெரிந்தவரையோ நண்பரையோ பார்த்தால் கூடத் தூரத்திலிருந்து கையசைத்துவிட்டு நகர்ந்து விட்டான். மான்சிங்குக்கு நின்று அவர்களோடு எல்லாம் பேச வேண்டும் போலிருந்து. அவன் இடங்களுக்கு அடிக்கடி வந்து போகிறவன் அல்ல.

"கரம்சிங்குக்கு ராணுவத்தில் ரொம்ப நல்ல பெயர். நீயும் ஏன் பட்டாளத்தில் சேரக்கூடாது?" மான்சிங் பேச்சைத் துவக்கினான்.


ஜஸ்வந்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. "பட்டாளத்தில் ஒருவன் போதாதா?" என்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு பதில் சொன்னான். பேச்சை மாற்றி, "உங்கள் ஊரில் கரும்பு எவ்வளவு பெரியதாக வளரும்?" என்று

கேட்டான். அவர்கள் அப்போது ஒரு பண்ணையைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தார்கள்.

"ஆளுயரத்திற்கு மேலாகவே வளரும்".

பதில் சொன்னாலும் மான்சிங்கின் மனது எங்கோ இருந்தது. அவனுக்கு அவனுடைய நண்பன் பற்றித்தான் பேச வேண்டும். வேறு எதைப் பற்றியும் அல்ல.

மறுபடி வீடு வந்தவுடன் மான்சிங் தன் கிராமத்துக்குத் திரும்பிச் செல்வது பற்றி எண்ணத் தொடங்கினான். அமிர்தசரஸிலிருந்து இரவு ரயிலைப் பிடிக்கவேண்டும். அவர்கள் அவனை நன்கு கவனித்துக் கொண்டாலும் அவன் விஜயம் அவன் எதிர்பார்த்திருந்த அளவு மகிழ்ச்சி அளிக்கவில்லை. இப்போது கூட அவனுக்காகத்தான் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவனைத் தன்னந்தனியாக விட்டிருந்தார்கள். அவன் தெருவில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது தோளில் பையோடு தபால்காரன் வருவதைப் பார்த்தான். தபால்காரன் அந்த வீட்டைத் தாண்டிப்போவது போலத்தான் இருந்தது. ஆனால் திரும்ப வந்து மான்சிங் அருகில் அவனும் கட்டிலில் உட்கார்ந்தான்.



"என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று மான்சிங் கேட்டான்.

"எப்படிச் சொல்வது? பாவம், அந்தக் கரம்சிங்கின் பென்ஷன் காகிதங்கள் தான்".

"கரம்சிங்கின் பென்ஷனா? என்ன சொல்கிறாய்?"

உங்களுக்குத் தெரியாதா? இங்கிருக்கும் காக்கை குருவிகூட கரம்சிங்குக்காகத் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனவே? அந்தக் கடிதம் வந்து பதினைந்து நாளாகிறது"

மான்சிங்குக்கு மூச்சடைத்தது. அவனுடைய உடல்துவண்டது. அவன் தன்னிலை அடைந்தவுடன் கண்ணீர் அருவியாகப் பெருகியது. அது கரம்சிங்கின் வீடாக இருந்து கரம்சிங்குடைய தகப்பனாரும் குழந்தையும் வீட்டினுள் இருந்ததும் நல்லதாகப் போய்விட்டது.

கரம்சிங்குடைய தகப்பனார் தபால்காரனைப் பார்த்துவிட்டார். கரம்சிங்குடைய நண்பனிடம் இனியும் தகவலை மறைத்து வைக்க இயலாது எனத் தெரிந்து கொண்டார். ஒரு முழு நாளாக அடைத்துக் கிடந்த இறுக்கம் கட்டவிழ்த்துக் கொண்டு வெடித்தது. அவர்களிருவரும் நெடு நேரம் பொங்கி எழுந்த கண்ணீரோடு உட்கார்ந்திருந்தார்கள்.

"என்னிடம் ஏன் சொல்லவில்லை?" என்று மான்சிங் துக்கத்துடன் கேட்டான்.

"சிறு வயதுக்காரன் விடுப்பில் வந்திருக்கிறான், அதை ஏன் பாழ்படுத்த வேண்டும்? அவன் திரும்ப அவனுடைய அணிக்குச் செல்லும்போது எப்படியும் தெரியப்போகிறது. வகுப்பில் வருவது கரம்சிங்குக் எவ்வளவு மகிழ்ச்சியோ அவ்வளவு உனக்கும் இருக்கும். ஏன், அதிகமாகக் கூட இருக்கும் உங்களூர்க்காரர்கள் வசதியாகவே இருந்து பழகி விட்டார்கள். இச்செய்தி உனக்குத் தெரிய வேண்டாமே என்று தான் பார்த்தோம். மிகவும் வருத்தமாயிருக்கிறது".

"அங்கிருந்து திரும்புகையில் கரம்சிங்கின் தகப்பனார் வளர்த்த அந்தச் சுற்றுவட்டாரத்தை மான் சிங்கின் கண்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டன. நாட்டின் மீது படையெடுத்து வந்தவர்களோடு வீர யுத்தம் புரிந்து இறவாப் புகழ் பெற்றவர்களின் சமாதிகளும் நினைவுச் சின்னங்களுமாக இருந்தன. பெரும் அதிர்ச்சிகளைத் தாங்கும் பண்பும் வன்மையும் அப்பெரியவர் கொண்டிருப்பதன் ரகசியம் இதுதான் போலும். இன்னொருவரை வருந்தவிடக் கூடாது எனத் தானாகவே மேலும் பளுவைத் தாங்கிக் கொள்ளக்கூடியவர் பூமியின் அனைத்துப் பளுவையும் ஒரு காளை தன் கொம்புகளில் சுமந்து கொண்டிருப்பதாக மான்சிங் கேள்விப் பட்டிருக்கிறான். அதேகுணம் தான் கரம்சிங்கின் தகப்பனாரிடம் இருந்தது. ஏற்கெனவே பெரும் சுமையிருப்பினும் இனனொருவனின் சுமையும் தாங்க முன்வரும் ஆத்மா அவர்.

*– 'தற்கால இந்தியச் சிறுகதைகள்' நூலிலிருந்து*

*வெளியீடு: சாகித்திய அகாதமி*

மக்களின்
விருதைப் பெறும்

# நிலாப்பள்ளி

[illegible] கே. கோபால், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்

அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதே அடிப்படை நோக்கம். குறிப்பாகப் படிக்கின்ற வயதில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டுமே தவிர பணிக்குச் செல்லக்கூடாது என்பதே அடிப்படைத் தத்துவம். இதை மையமாக வைத்துத்தான் நிலவொளி எப்படி குளிர்ச்சியைத் தருகிறதோ அது போல குழந்தைகள் கல்வியின் வாயிலாகப் பெற்றோருக்கும், சமுதாயத்திற்கும் குளிர்ச்சியைத் தரவேண்டும் என்பதை மையமாகக் வைத்துத்தான் ''நிலாப் பள்ளி'' எனும் பெயரை என் மனம் தேர்ந்தெடுத்தது.

விருதுநகர் மாவட்டத்தில் அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும். குழந்தைகளைப் படிக்கின்ற வயதில் வேலைக்கு அனுப்பக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்தில் செயல்படும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஐ.எல்.ஒ. பள்ளிகள் சிறப்பாகச் செயல் பட்டு வருகின்றன.

## நிலாப் பள்ளி

அந்தக் குழந்தைகளின் திறமைகளை பெற்றோர்கள் நேரடியாகக் காண்பதற்கும், பொது மக்கள் பார்வை யிடுவதற்கும், அவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள் அக்கறை காட்டவும் இதனைப் பார்த்து தொழிற்சாலை உரிமையாளர்கள் எந்தக் காலத்திலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தாமல் இருக்கின்ற மனநிலையை வளர்ப்பதற்கும், குழந்தைகள் கற்றலின் இனிமையோடு பாடங்களைக் கற்பதற்கும், கனிவான நிலவொளி போன்று அறிவொளி பெறுவதற்கும் ஆக்கப்பூர்வமாக உருவாக்கப்பட்டதுதான் ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி நன்னாளில் கூடும் சிறப்பான இந்த ''நிலாப் பள்ளி'', விருதுநகர் மாவட்டத்தில் 150 நிலாப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

வழக்கமாக குழந்தைகள் காலையில் பள்ளிக்குச் செல்வார்கள்; பெற்றோர்கள் வேலைக்குச் செல்வார்கள். சாதாரணமாக வாழ்க்கை நடத்தும் தொழிலாளர்கள் பகலில் ஆற்றிய கடும் பணியால் இல்லம் வந்து களைப்பால் தூங்கி விடுவார்கள். இதனால் குழந்தையின் கல்வியில்





அவர்களால் அக்கறை காட்ட முடியாமலும், குழந்தைகள் கல்வி பெறுவதை உணர்ச்சிப்பூர்வமாக நேரடியாக அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலையிலும் சிக்கிக் கொள்கிறார்கள்.

இந்த அவல நிலை மாற மாதத்தில் முழு நிலாவாம் பௌர்ணமி நன்நாளில் திருவிழா போன்று கிராமமே கூடி நிலவொளியில் இயல்பான சூழ்நிலையில், பொதுவான ஒரு இடத்தில் குழந்தைத் தொழிலாளர் திட்ட மாணவர்கள், பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், வளர்கல்விப்பணியாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள் ஒன்று திரண்டு கூடியிருப்பார்கள். நிலவொளியில் பள்ளிக் குழந்தைகளின் திறமைகளை ஆசிரியர்கள் வினா எழுப்பி விடை கேட்பார்கள்; தடையேதுமின்றி குழந்தைகள் அருவியென விடைகளை அள்ளித் தருவார்கள். பார்க்கும் பெற்றோருக்கு பரவசம்; ஊர்மக்களுக்கு உற்சாகம்; குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

மாசற்ற அந்தப் பிஞ்சு உள்ளங்களில் மறைந்து கிடக்கும் திறமைகளை எழுத்து, பேச்சு, கலையார்வம், இசை, நாடகம் இன்னும் எத்தனையோ திறமைகளை பெற்றோர்கள் முன்னிலையில் வெளிப்படுத்துகின்ற திறமை. இவையெல்லாம் நிலாப் பள்ளியின் பணிகளில் ஒரு சில. இந்த நிலாப் பள்ளியில் பெற்றோர்களும் பேச வைக்கப்படுகிறார்கள். பெற்றோர்களையும் ஈடுபடச் செய்து கல்லாதவர்களும் கற்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு ஈடுபாடு ஏற்படுத்துகின்ற இணையில்லா நிலவொளிப் பள்ளி. கல்வி மேம்பாடடைய நீந்தி வருவதில் நீச்சல் வீரராகத் தென்படுகிறது. இதன் மூலம் அவர்களின் குழந்தைகளை வீடுகளில் குழந்தைகளுக்கு கல்வி தருவதில் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற உணர்வையும் நிலாப் பள்ளி ஏற்படுத்துகின்றது.


இந்த நிலாப் பள்ளியில் குழந்தைகளின் கல்வித் திறனை வளர்க்க வினாடிவினா நடத்துதல், கற்றலின் இனிமையோடு பாடங்களை நடத்துதல், ஆடல், பாடல், விளையாட்டு ஆகியவற்றை கற்றுத் தருதல், பெற்றோருக்கு முன்பு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துதல், பெற்றோருக்கு கல்வியில் ஈடுபாட்டை வளர்த்தல், குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் கண்டிப்பாகப் பெற்றோர்களை ஈடுபடச்செய்தல், தொழிற்சாலை உரிமையாளர்களைப் பேச வைத்து தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தாமல் இருக்கச் செய்கின்ற வகையில் அவர்களது மனநிலையில் மாற்றம் ஏற்படுத்துதல், நிலவொளியில் அமர்ந்து ஒவ்வொரு குழந்தைகளிடத்தும் இருக்கின்ற திறமைகளை வெளிப்படுத்தி அனைவரையும் காணச்செய்தல், பெற்றோர்களின் திறமைகளையும் வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை. மேலும் நிலாப் பள்ளி மாதம் ஒரு முறை பௌர்ணமி முழுமதி நன்னாளில் மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும். நடைபெறுவதற்கு முன்னரே கிராம மக்களிடையே நிலாப் பள்ளியில் பொதுமக்கள் உட்பட அனைத்து பெற்றோர்களையும் பங்கேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பேரணியும் நடத்தப்படும். இதில் குழந்தைகள், ஆசிரியர்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பலர் பேரணியில் பங்கேற்பர்.

**பள்ளியின் மூலம் புகுத்த விரும்பும் கருத்துக்கள்**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் கல்வி பற்றி சிந்திக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில் நிலாப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. மேலும் பள்ளி மாணவர்களின் பொது அறிவுத் திறனை அதிகரித்தல், கல்வி ஆர்வத்தைத் தூண்டுதல், பெற்றோர்கள் எதிரே குழந்தைகள் பாராட்டப்பட்டால் பெற்றோரின் ஆர்வம் அதிகரிக்கும். எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோர்கள் கல்வி கற்க அரிய வாயப்பளித்தல், பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் இடையே நல்ல இணக்கத்தை வளர்த்திட ஒரு சந்தர்ப்பம். குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்களுக்கு அரசு நலத் திட்டங்களைக் கூறி அவர்களுக்கு தெரிய வைத்தல். இதன் மூலம் அவர்களின் அறிவுத்திறனை அதிகரிக்கின்ற உலக நடப்பைப் புரிந்து கொள்கின்ற, எதிர் காலத்தை நிர்ணயம் செய்து கொள்கின்ற தன்னம்பிக்கை பெற்றவர்களாக உருவாக்குவதற்கு இது பெரிதும் உதவும்.

**பொருளாதார அடிப்படையிலான கருத்துக்கள் :**

சிறப்புப் பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்பாடு அடையச் செய்ய சிறப்பு




குழந்தைகளின் அதிக ஆர்வத்தாலும் நிச்சயம் நிலாப் பள்ளி தொய்வின்றி நடக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் நடைபெறும்போது உரிய கண்காணிப்பும் இருக்கும்.

கண்காணிப்பு

நிலாப் பள்ளிகள் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள களப்பணியாளர்கள், ஊக்குனர்கள், தொண்டு நிறுவனங்கள், கல்வித்துறை அலுவலர்கள், வளர்கல்வி மையப்பொறுப்பாளர்கள், சமுதாயக்குழு உறுப்பினர்கள், இவர்களின் முழு ஈடுபாட்டோடு உரிய கண்காணிப்போடு நிலாப் பள்ளி

சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசுத்துறைகளில் இவர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.



நிலாப் பள்ளியை தொய்வு இல்லாமல் நடத்துதல்

நிலாப் பள்ளியைத் தொய்வில்லாமல் நடத்த முடியும். நிலாப் பள்ளி ஆசிரியர்களுக்கு கற்றலின் இனிமை குறித்து மாநில கருத்தாளர்களைக் கொண்டு மூன்று நாள் கற்றலின் இனிமை உறைவிடப்பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது. இவர்களை மேலும் உற்சாகப்படுத்தும் முகமாக 250 ஆசிரியர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கிராமங்களுக்கு நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு கற்றலின் இனிமையோடு நிலாப் பள்ளி நடத்துவதற்கு நேரடியாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. மக்களின் ஈடுபாட்டோடும், மாவட்ட நிர்வாகத்தின் முழு ஈடுபாட்டுடனும், ஆசிரியர்களின் தன்னார்வ மிக்க சேவையாலும், பொதுமக்களின் பேராதரவோடும் இயங்கி வருகிறது. இதில் முறையாக நிலாப் பள்ளியில் பங்கேற்கும் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இவை பற்றிய முழு விபரங்களும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நிலவொளியில் நடைபெறும் நிலாப்பள்ளி குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் ஒரு பெரிய பரிணாமத்தைப் படைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

• • •

# இந்த ஆண்டு தமிழ்நாடு காவல்துறைக்கு சாதனைகள் மிகுந்ததோர் ஆண்டாகும்

**காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்!**




காவல்துறை நிருவாகம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக காவல் துறை அதிகாரிகளுக்கான தனிக் கூட்டத்தில் இன்று நாம் சந்திக்கின்றோம்.

இந்த ஆண்டு தமிழ்நாடு காவல் துறைக்கு சாதனைகள் மிகுந்ததோர் ஆண்டாகும். பயங்கர தீவிரவாதியான இமாம் அலியைப் பிடிப்பதில் தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், ஆண், பெண் காவலர்களும் கடமையுணர்வுடனும் பாராட்டத்தக்கத் துணிச்சலுடனும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, திடீர்த் தாக்குதல் நடத்தி அவனை ஒழித்தும் கட்டியுள்ளனர். சமுதாயத்தில் காவல் துறை பணியில் புதுமைகள் புகுத்தியமைக்காக நமது காவல் துறையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் பன்னாட்டு விருதுகளைப் பெற்றுள்ளனர். அனைத்திந்திய காவலர் அணி வகுப்பில் நமது காவல்துறைப் பணியாளர்களும், அதிகாரிகளும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி யுள்ளனர்.

காவல் துறைப் பணி பற்றிய கோட்பாடு, அதனுடைய பொருள் விளக்கம், பயன்பாடு, செயல் நோக்கம் ஆகியவகையில் கணிசமான அளவுக்கு மாறுதல் அடைந்துள்ளது. பாதுகாப்பான சமுதாயத்தை உருவாக்குவதற்கு சுயஉதவி, ஒரு மைல் கல்லாகும் என்று வளர்ந்துவரும் சமுதாயம் எடுத்துக் காட்டியுள்ளது.

**பன்னாட்டு அங்கீகாரம்**

சமுதாயக் காவல் படை பணி உலகெங்கிலும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. நான் முதலமைச்சராக முதல்முறையாக பதவியில் இருந்த 1994 ஆம் ஆண்டு காவலர்கள் உங்கள் நண்பர்கள் என்று கூறி தொடங்கிவைத்த திட்டம் இன்று பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்று நமது காவல்துறை



அதிகாரிகளுக்கு விருதுகளைப் பெற்றுத் தந்துள்ளது என்பதை இங்கு நினைவு கூறுவதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன். இந்தக் கோட்பாடு பரிட்சார்த்த நிலையைத் தாண்டி கொண்டு செல்லவேண்டும். நமது மாநிலத்தின் பாதுகாப்பு சூழலை பேணுவதற்கான ஒரு முக்கிய அம்சமாக மாநிலம் முழுவதும் இதனை செயற்படுத்த வேண்டும்.

கடந்த காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில், அச்சமில்லாமலும், பாரபட்சமில்லாமலும் காவல்துறை தனது கடமைகளை ஆற்ற இயலும் வகையில், காவல்படையில் கொண்டுவரப்பட வேண்டிய பல்வேறு சீர்திருத்தங்களை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். காவல்துறையைப் பற்றி பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிகையைச் சீர்குலைக்கும் வகையில், காவல்துறை பாதுகாப்பில் இருக்கும்போது ஏற்படக்கூடிய வன்முறை, சித்திரவதை, லாக்கப்பில் இருக்கும்போது ஏற்படக்கூடிய மரணங்கள் குறித்த தொடர் நிகழ்வுகள் நடந்திருப்பது குறித்து நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக நடைபெற்ற மாநாட்டிற்குப் பின்னர் கடந்த ஒரு வருடம் மூன்று மாதங்களில் தங்களுடைய மாவட்டங்களில் காவல்துறை பாதுகாப்பில் எவரும் இறக்கவோ அல்லது லாக்கப் மரணங்களோ ஏற்படவில்லை என்று காவல்துறை கண்காணிப்பாளர்கள் பலரிடமிருந்து தெரியவந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**பொதுமக்களின் நண்பன்**

கடந்த மாநாட்டின்போது நான் அறிவித்த பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலம், சில முக்கியமான காவல்துறை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், மாநிலத்தில் ஒரு கடுமையான எதிர்க்கும் சக்தி என்று காவல்துறையைப் பற்றி இன்னும் நிலவி வருகின்ற ஒரு எண்ணத்தை பொதுமக்களின் மனதிலிருந்து நாம் அகற்ற வேண்டும். சமுதாயக் காவல்படை என்பது தமிழ்நாட்டில் 1994ஆம் ஆண்டில் காவல்துறை "பொதுமக்களின் நண்பன்" என்ற திட்டமாக தொடங்கப்பட்டது. காவல்துறை பொதுமக்களின் நண்பனாகச் செயல்படும்

வகையில், திறன் நுட்பமான எண்ணிப் பார்க்கக்கூடிய வகையிலான காவல்துறையை அமைக்க வேண்டும்.

பாலின நிகர்நிலைப் பயிலரங்கம், மனிதாபிமான அடிப்படையில் செயல்படுதல், போன்ற சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் மூலம் காவல்துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க பல பயிற்சி முறைகள் செயலிலிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். இந்நடவடிக்கைகள் சிறந்த பயனை அளிக்கும் என்றும், காவல்துறைக்கும் மக்களுக்கு மிடையே உள்ள உறவு சுமூகமாகவும், இணக்கமாகவும் இருக்கும் என்றும் நான் நம்புகிறேன். மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நிவாரணம் காணுவதற்காக காவல் துறையினை எளிதில் அணுகும் வகையாக இருக்க வேண்டும். இவ்வகையில் நாம் எடுத்த நடவடிக்கைகளுக்குப் பலன் கிட்ட வேண்டுமாயின், திட்டத்தைச் செயல்படுத்தும் காவலர்களை அணுகுவதில் உள்ள தடைகளை நீக்குவதே முதன்மையான முக்கியமான பணியாகும் என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்.

காவல் நிலைய அளவில் உள்ள காவல் துறையினரின் போக்கு மாற்றப்பட வேண்டும். புகார்கள் மற்றும் புகார் கொடுப்பவர்களிடம் மனிதாபிமானத் துடனும், மரியாதையுடனும் நடந்துகொள்ளுமளவுக்கு அவர்கள் பக்குவப்படுத்தப்பட வேண்டும். காவல் நிலைய அளவில் வழக்குகளைப் பதிவு செய்ய மறுக்கும் போக்கு மாறவேண்டும். மேற்பார்வை அதிகாரிகள் என்ற வகையில், இதில் உங்களுடைய பணி மிகவும் முக்கியமானதாகும்.

ஒரு அவசர நேர்வில் காவல் நிலையத்திற்குப் போகவேண்டும் என்ற எண்ணமே, பெரும் பான்மையான மக்களுக்கு வெறுப்பாக உள்ளது. இப்போக்கு மாறவேண்டும். அனைத்து புகார்தாரர்களும் குறிப்பாக பொருளாதார வகையில் நலிவுற்றப் பிரிவினர், சாதிக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், மகளிர் போன்றோர் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண காவல்நிலையத்தை நம்பிக்கையுடன் அணுகுமாறு செய்வதே உங்களுடைய பணியாக இருக்கவேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை உருவாக்குவதால் மட்டுமே கூட்டுச் சதி, தன்னிச்சையாக முடிவு செய்யும் முறைகள் சட்டச் செயலாக்கத்தில் குற்றவாளிகளின் தலையீடு, போன்றவற்றை தடுக்க இயலும். திட்டமிட்ட குற்றம், தலைமறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு இவை ஊக்கமளிக்கின்றன.

## காவல் பணி கோட்பாடு

நம் மாநிலத்திற்கு விரிவான காவல் பணி கோட் பாடு வகுக்கவேண்டிய நேரம் வந்துள்ளது. சமூக விரோத சக்திகளை உறுதியாக அடக்குவதன் மூலம் பொது அமைதியைப் பேணுதல், திட்டமிட்டு செய்யப்படும் குற்றங்கள், வாலாயமான குற்றவாளிகள் ஆகியோர் மீது தனிக் கவனம் செலுத்தி குற்றங்களைக் குறைப்பதை உறுதி செய்தல், குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கும் பணிகளை மேம்படுத்தல் ஆகியவை குறித்து கவனம் செலுத்துவதே இக்கோட்பாட்டின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். பொதுமக்களின் மனதில் குற்றங்கள் பற்றிய அச்சத்தைப் போக்குவதற்கும் சட்டத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைக்கவும் இந்நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகும்.

குற்றத்தைக் குறைக்கவும் கட்டுப்படுத்தவும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். செம்மையான குற்றத் தடுப்பு கோட்பாடுகளை வகுத்து, உண்மையுடன் இவற்றை காவல்துறை மேற்பார்வை அதிகாரிகள் செயற்படுத்த வேண்டும். குற்றங்களைக் கண்டு பிடிப்பதை, தொழில்முறையிலும், அறிவார்ந்த முறை யிலும் செய்ய வேண்டும். இதில் மனித உரிமைகளைப் பாதிக்கும் சட்டமீறல் முறைகளைப் பயன்படுத்தக் கூடாது. குற்றங்களைக் கண்காணித்து வருவது தொடர் பணியாகும்.

காவல் மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டவுடன் மண்டலக் காவல் துறைத் தலைவர் இம்முக்கிய காவல் பணியை நுணுக்கமாகவும் முறையாகவும் கண்காணிப்பார் என்று நான் நம்புகிறேன்.

அனைத்து துறைப் பணிகளிலும் ஊடுருவி மக்கள் மனதில் பீதியை ஏற்படுத்தும் திட்டமிட்ட குற்றங்கள் குறித்து கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். கள்ளச்சாராயம், மகளிர் மற்றும் குழந்தைகளை அச்சுறுத்தி பணம் பறித்தல் இழி தொடர்பு போன்றவற்றில் ஈடுபட்டுள்ள குற்றக் கும்பலையும், பயமுறுத்தி பணம் பறிப்பவர்களையும் கண்டுபிடிப்பதில் காவலர் கவனம் செலுத்த வேண்டும். பன் மாநிலத் தொடர்பு உள்ள திட்டமிட்ட கடுமையான குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் மாநிலத்தில் ஏற்கெனவே திட்டமிட்ட குற்றத் தடுப்பு பிரிவுகள் அமைக்கப் பட்டுள்ளன.

## கள அதிகாரிகளின் முதன்மைப் பணி

இருப்பினும் தங்கள் அதிகார வரம்பின் கீழுள்ள குண்டர்களையும், கொள்ளையர்களையும் திறம்பட

கண்டுபிடிப்பதே கள அதிகாரிகளின் முதன்மைப் பணியாகும். குற்றக் கட்டுப்பாடுப் பணியின் அளவைப் பார்க்காமல், தரத்தைப் பார்க்க வேண்டும். குற்றங்களைக் கண்டுபிடித்தது மற்றும் தீர்த்து வைத்தது தொடர்பாக என்னிடம் அளிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மலைப்பூட்டுவனவாக உள்ளன.

ஆனால், உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் இத்தகைய பெருவாரியான எண்ணிக்கை மற்றும் அவற்றின் விவரப் படங்களை எல்லாம் கடந்து செல்லவேண்டும். புலன் விசாரணை, குற்ற நிகழ்வுகளைக் கண்டறிதல், இறுதியாக தண்டனை பெற்றுத் தருதல் ஆகியவற்றின் எண்ணிக்கையை வைத்து குற்ற நிகழ்வுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனவா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இந்த விவரங்களைக் கணினிமயமாக்குவதன் மூலமாகவே, காவல் வாரியான ஆய்வினை நாம் மேற்கொள்ள முடியும் என்று ஆய்வுத் தகவல் தொகுப்பு விரிவான முறையில் கொண்டு வரமுடியும் என்று நான் கருதுகிறேன். இத்தகைய ஓர் ஆய்வுத் தகவல் தொகுப்பு வாயிலாகவே, குறிப்பாக கடுமையான குற்றங்கள் குறித்த ஆய்வுத் தொகுப்பின் மூலமாகவே, சாதாரண குற்றங்களைப் புரிகின்ற சிறு குற்றவாளிகளைக் கைது செய்து அவர்களை நீண்டகாலம் சிறையில் அடைத்து வைக்க அனுமதிக்கின்ற போக்கு தடுத்து நிறுத்தப் படும். இது, கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் புள்ளி விவரங்களை பெருக்கிக் காட்டலாம்.

## உறுதியான நடவடிக்கையில் கவனம்

ஆனால், காவல் துறையின் மீதான தவிர்க்கக் கூடிய விமர்சனத்தை தவிர்க்க முடியாமல் போய் விடும். எனவே, குற்றங்களில் ஈடுபடுவோரை பிடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தொடர்ந்து குற்றங்களில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளையும் கூட்டாகச் சேர்ந்து குற்றங்களில் ஈடுபடுகின்ற கும்பல்களையும் பிடித்து மிக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

சமுதாயத்தில் மகளிருக்குரிய உண்மையான மதிப்பையும் சிறப்பையும் பாதுகாக்க இயலாத ஓர் சமுதாயம், சமுதாயமாகக் கொள்ளப்படமாட்டாது; காவல்துறையை நம்பிக்கையுடனும் நெறியுடனும் மகளிர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, காவல் துறையில் பாலினப் பாகுபாடு இல்லை என நாம் கருதலாம்.

மகளிர் நியாயமாக நடத்தப்பட வேண்டுமென்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். தீங்கிழைக்கும் குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனை அளிப்பதற்கு வகை செய்து, தற்போதுள்ள சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு வந்தது உட்பட பல்வேறு நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன். ஏற்கெனவே 109 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. முறையான காவல் நிலையங்கள் 287லும் கூடுதலாக ஒரு பெண் உதவி ஆய்வாளர், 2 பெண் காவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

ஆயினும், வரதட்சணைச் சாவுகள், கற்பழிப்பு, கணவன் மற்றும் உறவினர்களால் கொடுமைப் படுத்தப்படுதல் போன்ற மகளிருக்கெதிரான குற்ற நிகழ்வுகள் குறித்த வழக்குகளில் கடினமான பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். மகளிருக்கெதிரான குற்ற நிகழ்வுகள் அதிகரித்துள்ளதை அறிந்து நான் வேதனையடைகிறேன்.

கூட்டுறவுத் துறையில் காவல்துறையின் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலம் புலன் விசாரணை செய்யப்பட்டு பல நிதி முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் கூட்டுறவு நிறுவனங்களின் நிதி முறைகேடுகள் குறித்த வழக்குகளை முடிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் வேதனையளிக்கக்கூடிய மற்றொன்றாகும். குற்றப் புலன் விசாரணைப் பிரிவிற்கு அனுப்புவதிலும் அவர்களின் மீது வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்வதிலும் அசாதாரண காலதாமதம் காணப்படுகிறது.

இதன் விளைவாக, கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்த நலனையும் பாதிக்கும் வகையில், விரும்பத்தகாதவர்கள் தொடர்ந்து சங்கங்களைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்து வருகின்றனர். இத்தகைய காலதாமதங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து விரிவாக விவாதித்து இதனை ஒழுங்குப்படுத்த நல்லதீர்வு ஒன்றைக் காண்பது அவசியத் தேவையாகும்.

## நவீன மயமாக்க ரூ.722 கோடி

நான் 2001இல் பதவியேற்ற பின்னர், காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவது முடுக்கி விடப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ. 136.20 கோடியும் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து நான் மன நிறைவு கொள்கிறேன். மத்திய அரசின்

பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள், காவல் துறையினருக்கான வீட்டுவசதிகள், புதிய வண்டிகள் வாங்குதல், நவீன வகையிலான தரம் வாய்ந்த ஆயுதங்களை வாங்குதல், தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்குதல், கணினி மயமாக்கும் பணிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டில், சுமார் ரூ.136.20 கோடி செலவில் மற்றொரு தொகுதி திட்டப் பணிகளை மேற்கொள்ளக் கருதியுள்ளோம். நமது காவல்துறையை நவீனமயமாக்கவும் மிகவும் பயனுள்ள வகையில் உருவாக்கவும் இவ்விரண்டு ஆண்டுகளில் நாம் ரூ. 272.40 கோடி முதலீடு செய்துள்ளதன் மூலம் நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களில் நாம் முன்னணியில் உள்ளோம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளோம்.

நமது ஆண்கள் மற்றும் பெண்களின் ஒழுங்குணர்வு உயர்நிலையில் இருப்பதையும் சட்டம் ஒழுங்கை நன்முறையில் வளர்த்தல் என்ற உயர் எதிர்பார்ப்பினைக் கொண்ட பணியைச் செய்வதில் அவர்கள் முழுமையான கடமை உணர்வுடனும் மிகுந்த ஆர்வத்துடனும் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதையும் உறுதிப்படுத்த அவர்களது குறைகளைத் தீர்த்து வைப்பதில் முழுக் கவனம் செலுத்தப்படவேண்டும். மாநிலத்திலுள்ள நான்கு காவல்துறை மண்டலங்களைச் சேர்ந்த காவல்துறை பணியாளர்களுக்காகவும், சென்னை மாநகர காவல்துறை பணியாளர்களுக்காகவும், 5 நாட்கள் குறை கேட்கும் நாள் கூட்டங்கள் நடத்தியதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

## இந்தியாவிலே நடைபெறாத ஒன்று

பணியாளர்களை நேருக்கு நேர் சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு புரிந்து கொண்டு அவற்றைத் தீர்த்து வைத்த இச்செயல் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஒன்றாகும். காவல்துறைப் பணியாளர்கள் என்னிடம் அளித்த மனுக்கள் மீது எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளை நான் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து வருகிறேன். அத்தகையவர்கள் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு உங்களைப் போன்ற முதுநிலை அதிகாரிகள் உண்மையாகவும், விரைவாகவும் உரிய தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நான் எதிர்பார்க்கிறேன்.

காவல் துறைக் கண்காணிப்பாளர் நிலை யிலிருந்து காவல் துறைத் தலைவர் வரையில் குறைகளைத் தீர்த்து வைப்பதற்கான நல்லதோர் அமைப்பை உருவாக்குமாறு நான் கட்டளைகள் பிறப்பித்துள்ளேன். காவல் துறைத் தலைவர் முதல் காவல்துறை கண்காணிப்பாளர் வரையிலுள்ள முதுநிலை அதிகாரிகள் அனைவரும் அர்ப்பணிப்பு டனும் பொறுப்புணர்வுடனும் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களை நடத்துவீர்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன். இவ்வாறு கூட்டங்களை நடத்துவது காவலர்களுக்கிடையே உள்ள மனச் சோர்வு மற்றும் மன நிறைவின்மையையும் போக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளரும், இந்த அரசின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களின் பிரதிநிதியாகத் திகழ்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் மாவட்டத்தின் காவல்துறை நிருவாகத்தை முடுக்கிவிட்டு என்றும் உங்களின் கீழ் பணிபுரியும் அதிகாரிகளுக்கு முன்மாதிரியாக இருப்பீர்கள் என்றும், சட்டத்தைச் செயல்படுத்துவதிலும், பொதுமனிதனின் உரிமை களைப் பாதுகப்பதிலும் எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். இத்தகைய தலைமைப் பொறுப்பேற்பது மிகக் கடினமான ஒரு பணியாகும்.

## சோர்வின்றிப் பணியாற்ற வேண்டும்

தமிழ்நாடு காவல்துறையின் மதிப்புமிக்க பாரம்பரியத்தைப் பேணிக்காப்பதும் உங்களின் உயர்பதவியின் நன்மதிப்பையும் கண்ணியத்தையும் காப்பதும் உங்களின் உயரிய கடமை ஆகும். நம்முடைய குடிமக்கள் அனைவரின் சுதந்திரத்திற் காகவும் பாதுகாப்பிற்காகவும் நீங்கள் சோர்வின்றிப் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எட்வின் மார்க்ஹாம் அவர்களின் வார்த்தை களை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*"எல்லோருக்கும் சுதந்திரம் இல்லாமல்*
*உண்மையான தனிமனித சுதந்திரம்*
*அமையாது; எல்லோருக்கும்*
*பாதுகாப்பு இல்லாமல், உண்மையான*
*தனிமனித பாதுகாப்பு அமையாது"*

அனைவருக்கும் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் அளிப்பதே, தமிழ்நாடு காவல்துறையின் உயரிய நோக்கமாக இருக்கட்டும்.

*மாண்புமிகு முதலமைச்சர்*
***செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*10.12.2002 அன்று நடைபெற்ற*
*காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்*
*ஆற்றிய உரை.*

# மாண்புமிகு முதலமைச்சர் ஆணைப்படி விரைந்த நடவடிக்கை!

# சென்னை நகரில் மழையால் சேதமடைந்த சாலைகள் மாநகராட்சியால் பழுதுபார்க்கப்பட்டன



சென்னை நகரில் கடந்த அக்டோபர் திங்கள் கடைசி வாரத்திலிருந்து நவம்பர் திங்கள் முதல் வாரம் வரை தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக, தாழ்வான பகுதிகளிலும், சாலைகளிலும் மழைநீர் தேங்கியிருந்த சூழ்நிலை ஏற்பட்டது. தீயணைப்புத் துறை, காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற சேவைத் துறைகளின் உதவியுடன் சென்னை மாநகராட்சி, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக பல்வேறு துறைகளின் அதிகாரிகளை அழைத்துப்பேசி வெள்ள நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் இத்தகைய நிலையைத் தவிர்ப்பதற்காக பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

மேலும் 11.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வடசென்னை பகுதியில் காக்ரெயின் பேசின் சாலை, மணலிசாலை, எழில்நகர், கொடுங்கையூர், சத்தியமூர்த்தி நகர், எருக்கஞ்சேரி, கணேசபுரம், பெரம்பூர், வியாசர்பாடி, ஓட்டேரி ஆகிய பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு பொதுமக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்கள். மறுநாள் 12.11.2002 ஹெலிகாப்டர் மூலமாக சென்னை நகர் மற்றும் புறநகரப் பகுதிகளில் ஏற்பட்டிருந்த பாதிப்புகளைப் பார்வையிட்டார்.

தற்போது சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் 222 கி.மீ. நீளமுள்ள 301 பேருந்துச் சாலைகளும் 2,475, கி.மீ. நீளமுள்ள 14,567 உட்புறச் சாலைகளும் உள்ளன. மேலும் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட சாலைகள் சென்னை மாநகராட்சிப் பகுதியில் 137 கி.மீ. நீளத்திற்கு உள்ளன.

சென்னை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள 133 கி.மீ. நீளமுள்ள 230 பேருந்துச் சாலைகளும், 2,475 நீளமுள்ள 1,880 உட்புறச் சாலைகளும் மழையால் பழுதடைந்தன. இந்தச் சாலைகளில் மாநகராட்சியைச் சார்ந்த 750 கி.மீ. சாலைகளைப் புதிதாக அமைக்க ரூ.75 கோடி ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். மேலும் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட 83 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் புதிதாகப் போடுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ரூ.29 கோடி ஒதுக்கீடுச்

செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 833 கி.மீ. சாலைகளைப் புதிதாக அமைப்பதற்கு மொத்தம் ரூ.104 கோடி ஒதுக்கீடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார். பணிகள் வருகிற ஜனவரி மாதத்தில் தொடங்கி மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மழையின் போதே சாலைகளைச் சீரமைக்கத் தற்காலிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மழை பெய்து கொண்டிருக்கும்போது சாலைகளில் ஏற்பட்டிருந்த பள்ளங்கள், செங்கல் மற்றும் சிறு கற்களால் நிரப்பி மூடப்பட்டன. இவ்வாறு உடனடியாக 1.34 இலட்சம் சதுர மீட்டர் பரப்புள்ள பேருந்துச் சாலைகள் பழுதுபார்க்கப்பட்டன. உட்புறச் சாலைகளைப் பொறுத்தவரை உடனடியாக 3.28 இலட்சம் ச.கி.மீட்டர் பரப்பளவில் செங்கல் மற்றும் சிறு கற்களை நிரப்பி பழுதுபார்க்கப்பட்டன.

அடுத்தகட்டமாக தற்போது பேவர் இயந்திரங்களைக் கொண்டு பேருந்து சாலைகள் பழுதுபார்க்கப்படுகின்றன. இதில் சாலை சந்திப்புகளில் உள்ள பள்ளங்களைப் பழுதுபார்க்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் அனைத்து சாலைகளிலும் மழையினால் ஏற்பட்ட பள்ளங்களைத் தார்க் கலவை மூலம் பழுதுபார்க்கும் பணி மிக விரைவாக நடைபெற்று வருகிறது. மழையால் சேதமடைந்த 230 பேருந்துச் சாலைகளில் இதுவரை 1.54 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் தார்க்கலவைப் பயன்படுத்தி பழுதுபார்க்கும் பணி போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றப் பட்டுள்ளது. மேலும் 190 பேருந்துச் சாலைகள் முழுவதுமாக தார்க் கலவைப் பயன்படுத்தி மறுபடியும் போடப்பட்டுள்ளது. பேருந்துச் சாலைகளைப் பொறுத்தவரை மழையால் சேதமடைந்த சாலைகளில் 90 சதவிகித சாலைகள் பழுது பார்க்கப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். உட்புறச் சாலைகளைப் பொறுத்தவரை சேதமடைந்த 1,880 சாலைகளில், 1.29 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் தார்க்கலவையைப் பயன்படுத்தி பழுதுபார்க்கப் பட்டுள்ளன. மேலும் 1,071 உட்புறச் சாலைகள் முழுவதுமாக தார்க்கலவைப் பயன்படுத்தி மறுபடியும் போடப்பட்டுள்ளன. மீதியுள்ள சாலைகளில் விரைவான முறையில் பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த காலத்தில் தரமான முறையில் சாலைகள் போடாததன் காரணமாகத்தான் மழையினால் அவைகள் சேதமடைந்தன. எனவே எதிர்காலத்தில் சாலைகள் போடும்போது அவற்றின் தரத்தை உறுதிபடுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் எதிர்காலத்தில் சாலைகள் அமைக்கப்படும் போது பின்வரும் நடவடிக்கைகளைச் சென்னை மாநகராட்சி மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

1. சாலை அமைத்த ஒப்பந்ததாரரே அச்சாலையை ஐந்து ஆண்டுகள் அவர்களது செலவிலேயே பராமரிக்க வேண்டும்.

2. அமைக்கப்படவிருக்கும் சாலைகள் தரமுள்ளதாக அமைக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக பொறியாளர்களைக் கொண்ட தனியார் ஆலோசனைத் தரநிர்ணய நிறுவனங்களை கொண்டு ஆய்வு செய்யப்படும்.(Quality Control Consultancy).

3. சென்னை நகரில் அடிக்கடி சாலைகள் பழுது ஆகாமல் தடுக்க நீண்டகால நிரந்தரத் தீர்வாக தார்ச் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் அடிப்படையில், தண்டையார்பேட்டை, மணலி சாலை, சத்தியமூர்த்தி நகர் சாலை, கணேசபுரம் சாலை ஆகிய இடங்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று நகரில் மிக கனரக வாகனங்கள் மற்றும் குடிநீர் வாகனங்கள் செல்லுகின்ற 13 சாலைகளில் ரூ.26 கோடியில் கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். நடராஜன், இ.ஆ.ப, இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை — தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை—600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926

## கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ | ரூ | ரூ. | ரூ | ரூ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்ஃபிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

**பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.**

DIPR.1108.DISPLAY.99


ANNA UNIVERSITY
SILVER JUBILEE CELEBRATIONS
LAUNCHING THE KNOWLEDGE CONNECTIVITY
WITH ENGINEERING COLLEGES
Dr A PJ ABDUL KALAM
HIS EXCELLENCY THE PRESIDENT OF INDIA
UNVEILING THE STATUE OF Dr RM ALAGAPPA CHETTIAR
THIRU PS RAMAMOHANRAO
HIS EXCELLENCY THE GOVERNOR OF TAMILNADU
LAUNCHING THE TELEMEDICINE FACILITY IN TAMILNADU